# இயேசுவே வாரும்

காலேப் யோசுவா
9444701953, 9444709980
மின்னஞ்சல் : brocalebjoshua@gmail.com
வலைத்தளம்: www.yesuvaevaarum.com
முகநூல்: www.facebook.com/yesuvaevaarum

ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும்.வெளி.22.20

புதிய விலாசம் கவனிக்கவும்

32,ஜெமிஎத்திராஜ் நகர்,
எரையமங்கலம் ரோடு,
மப்பேடு, பேரம்பாக்கம் (வழி)
திருவள்ளூர் மாவட்டம் - 631402

## லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு ஒப்புவித்ததும், தூதன் சபைக்கு கொடுத்த செய்திகளை கறைப்படுத்தி, நாளுக்கு நாள் பெருகி வரும் மந்தையை தப்பவிடாத கொடிதான ஓநாய்களின் மோசம்போக்கும் மாறுபாடான, வஞ்சனையான உபதேசங்கள் போதகங்கள் / செய்தியின் தமிழ் மொழிபெயர்ப்புக்கள்.

1. வேதவாக்கியங்களுக்கடுத்த சத்தியத்தை, லவோதிக்கேயா சபைதூதன் செய்திகளை சீர்குலைக்க சாத்தானால் பயன்படுத்தவரும் பாத்திரங்களில் ஆப்பிரிக்கா : காக்குவ் பிலிப்புவுக்கு அடுத்து இந்நாட்களில் எனது பார்வையில் விழுந்தவர் ஸ்ரீலங்கா – ஜோர்ஜ் எலியேசர். இவர்கள் இருவரும் மக்களுடைய இருதயத்தை துவளப்பண்ணும் இரு புகைகிற கொள்ளிக்கட்டைகளாக இருக்கிறார்கள். இவர்கள் இருவரும் மனுஷர்களை விசனப்படுத்துகிறது போதாதென்று என் தேவனையும் விசனப்படுத்துகிறவர்களாய் இருக்கிறார்கள். தாறுமாறுகளின் ஆவி இவர்களில் வாசம் செய்கிறது. ஆதலால் தாறுமாறானவைகளை போதிக்கிறார்கள், எழுதுகிறார்கள். தமிழ்நாட்டை பொருத்த அளவில் ஏழாம்சபைக்கால தூதனுடைய செய்திகளில் இருக்கிறோம், பிரசங்கிக்கிறோம் எனக்கூறும் பாஸ்டர்களில், ஊழியர்களில் பெரும்பாலானோர் போலிகளே. தங்கள் அழைப்பை உறுதிப்படுத்த முடியாதவர்களே. இவர்கள் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டவர்கள் அல்ல. ஆதலால் இரட்சிப்பின் வழியே நமக்கு அறிவிக்க மாட்டார்கள். மாறாக இவர்கள் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட ஊழியர்களின் வேஷத்தை தரித்துக்கொண்டு மரண வழிக்கான பாதையில் மக்களை வழிநடத்தும் கள்ளகபடமுள்ள வேளையாட்களாயிருக்கிறார்கள். ஆதலால் இவர்களை அடையாளம் கண்டுக்கொண்டு உங்களை ஆத்துமாவை காத்துக்கொள்ளுங்கள். அதேவேளையில், நானும் தவறுக்குரியவன். ஆனால் சுவிசேஷகன் என்று என்னை அழைத்துக்கொண்டு மாய்மாலம் பண்ணி மக்களை வஞ்சிப்பவன் அல்ல. என் சுகத்தை தேடிக்கொண்டவன் அல்ல. நான் என் சிலுவையை அநுதினமும் எடுத்துக்கொண்டு என்னை அழைத்தவரை, என்னை வழிநடத்துகிறவரை பின்பற்றி வருகிறேன்.

2. எனக்குள் உள்ள கிறிஸ்துவின் ஆவியினால் / அன்பினால் என்னோடு பிணைக்கப்பட்டுள்ள பிரியமானவர்களே, நாம் அனைவரும் தேவனுடைய குமாரனை பற்றும் விசுவாசத்திலும் அதாவது இயேசுவே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார் என்ற விசுவாசத்திலும், சத்தியமுள்ளவரை அறிகிற அறிவிலும் ஒருமைபட்டவர்களாகி கிறிஸ்துவினுடைய திவ்விய சுபாவங்களின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்கு தக்க பூரணப்படும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய காலேப் யோசுவா, தேவனுடைய சபைக்கும் அனைத்து பரிசுத்தவான்களுக்கும் எழுதிகிறதாவது : நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. நாம் இனியும் குழந்தைகளாயிராமல், கள்ளகபடமுள்ள வேளையாட்களுடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே, கடல்நீர் அலைகளை போல அடிபட்டு அலைகிறவர்களும், நம்முடைய வீணான, அகந்தையான, மேட்டிமையான சிந்தையிலே நடக்கிறவர்களாயிராமல், உலகம் அனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலு சர்ப்பத்தின் தந்திரமான போதனைகளுக்கு ஏவாளை போன்று இடம் கொடாமல் அன்புடன் சத்தியத்தை கைக்கொண்டு ஏழாம் சபைக்கால தூதனால் கொடுக்கப்பட்ட செய்திகளை விசுவாசித்து அதை இருதயத்தில் ஏற்றுக்கொண்டு, அதன்படி நடந்து சபையின் தலையாகிய கிறிஸ்துவுக்குள் (தென்னிந்திய திருச்சபை, தி பெந்தேகோஸ்தே சபை, அப்போஸ்தலர் கிறிஸ்துவ சபை, இந்திய சுவிசேஷ திருச்சபை, அசெம்ளி ஆப் காட், தேவசபை, கிறிஸ்துவின் சபை இன்னும் பல ஆயிரகணக்கில் ஆங்காங்கு பற்பல பெயர் பலகைகளின் கீழ் மூலைமுடுக்குகளில் இயங்கிவரும் சபைகளுக்குள் வளர்ந்து வருகிறவர்களாய் அல்ல.) எல்லாவற்றிலும் வளர்கிறவர்களாக, கிரியை செய்கிறவர்களாக, விசுவாசிகளாய் இருக்கிறவர்களாய் மாத்திரம் அல்ல, அத்துடன் கிரியைகளையும் இணைத்துக் கொண்டவர்களாக, நம்மை வெளிப்படையாய் எழுதப்பட்ட நிருபங்களாக காண்பிக்கிறதற்கு நமக்கு அருளப்பட்ட தேவகிருபைக்காக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஸ்தோத்தரிக்கிறேன். நீதியை அறிந்தவர்களே, என் தேவனுடைய வேதத்தை இருதயத்தில் பதித்திருக்கிற ஜனங்களே எனக்கு செவி

கொடுங்கள். பிரசங்கிக்கிறவன், எழுதுகிறவன், அது யாராகயிருந்தாலும் சரி, அவன் வேதாகமம் கூறியபடியே பிரசங்கித்தால், எழுதினால் அவன் தேவனுடைய செய்தியாளன் மற்றும் எழுத்தாணி. தேவனுடைய சாட்சி. மற்றபடி அவன் ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்த பிசாசு. ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்திகளுக்கு தவறான வியாக்கியானங்களை கொடுத்துக்கொண்டு, நயவஞ்சகமாக **சகோ. பிரன்காமை கிறிஸ்து** என அழைக்கிறார்கள். தேவனை, தேவனுடைய நாமத்தை தூஷிக்கிறார்கள். அவர்கள் அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்கள். மல்.4:5,6 மற்றும் வெளி.10:6 ல் கூறப்பட்டுள்ள எலியா மற்றும் **ஏழாம் தூதனை மேசியா** என்றும் **அவர்தான் மேசியாவாகிய பிரன்காம் கிறிஸ்து** என்றும் வேதவாக்கியங்களை கொண்டு இந்த பேலியாளின் மக்களால் திருஷ்டாந்தப்படுத்த முடியுமா? முடியுமானால் நான் ஒரு கள்ளக்கபடமுள்ள வேலையாளாயிருப்பேன்.

3. வேதவாக்கியங்கள் எல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. அவைகள் உபதேசத்துக்கும் கடிந்துக் கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியை படிப்பித்தலுக்கும் பிரயோஜனம் உள்ளவைகளாயிருக்கிறது. (2தீமோ.3: 16) All scripture is given by inspiration of God, and is profitable for doctrine, for reproof, for correction, for instruction in righteousness. ஆக வேதபூர்வமான கடிந்துக்கொள்ளுதல்களை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளுவது சாலச்சிறந்தது. அதை நிராகரிப்பது நல்லதல்ல. ஆதலால் என் கடிந்து கொள்ளுதலை உதாசினப்படுத்தாதீர்கள்.

4. ஸ்ரீலங்காவிலிருந்து 2017 ஏப்ரல் முதல் 2018 ஏப்ரல் வரை அவ்வப்போது சகோ.ஜோர்ஜ் எலியேசர் என்பவர் தன் உள்ளத்தின் ஆழத்திலிருந்து எழுந்த ஒரு வாஞ்சையினால் **மணவாட்டியின் சத்தம்** (Voice of the Bride) என்ற பிரதான தலைப்பின் கீழ் **உரைக்கப்பட்ட செய்தியே ஜீவ அப்பம்** (Spoken Message is the Bread of Life) பதிப்பு.6/2017, அடுத்து **உங்களின் செய்தி என்ன?** (What is your Message?) பதிப்பு.7/2017, **அடுத்து வார்த்தை மாமிசமாகி!** (The World made Fiesh) பதிப்பு.7/2017, இங்கு என்னுடைய ஒரு சிறு குறிப்பு. Word என்பதற்கு பதிலாக கொட்டை எழுத்தில் World என்று பிரிண்டாகி உள்ளதை கவனித்தேன். அன்பு சகோதரன் இதை காண தவறியது என்ன? அடுத்து நான்காவதாக **கிரியைகளினால் அவரை அறிந்தார்கள்** (By Works, they knew Him) பதிப்பு.9/2017, அடுத்து ஐந்தாவதாக **நம்முடைய நாட்களில் திரை நீக்கப்பட்டுள்ள சர்வ வல்லமையுள்ள தேவன்.** (The All mighty God unveiled in our days) பதிப்பு.10/2018. ஆக மொத்தமாக ஐந்து செய்தி தொகுப்புகளை பெற்றேன். மேலும் கைபிரதிகளாக **பரலோக ஐசுவரியம்** என்ற பிரதான தலைப்பின் கீழ் **எல்லாம் முடிந்தது.** (All things were now accomplished) எண்.6,மே.1998. அடுத்து **தேவனுடைய சத்தத்துடன் நிலைத்திருங்கள்.** (Stay with the Voice of God) எண்.10, ஆழம் – 1 (Deep) எண்.22/2005. ஆக மூன்று கைபிரதிகளையும் பெற்றேன். சகோதரன் மிக்க சிரமங்களின் மத்தியில், மிக்க பாரத்துடன், பிரயாசத்துடன் என்மேல் கொண்டுள்ள அன்பின் நிமித்தமாக இலவசமாக எனக்கு அனுப்பியிருந்த அவருடைய வெளியீடுகளை பெற்றுக்கொண்டேன். சகோதரருக்கு எனது நன்றிக்கடனை கடிதங்களின் மூலமாக தெரிவிக்க முடியாவிட்டாலும் இந்த நிருபத்தின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

5. இப்பொழுது சற்று கவனியுங்கள் தேவனுடைய செயல் ஒவ்வொன்றிற்கும் ஏதோ ஒரு காரணம் இருக்கும். காரணமில்லாமல் அவருடைய செயல்பாடுகள் எதுவும் இருக்காது. அவர் ஏனோதானோ என்று ஒன்றை செய்வது கிடையாது. அன்பு சகோதரன் தன்னுடைய வெளியீடுகளில், தம்முடைய கரத்தில் உள்ள, தான் முக்கியதுவம் வாய்ந்தது என்று கருதிய சில செய்திகளை எனக்கு அனுப்பி வைத்ததில் நிச்சயமாக தேவனுடைய சித்தம் ஒன்று உண்டு. அதின் நிறைவேறுதலாக, ஆவியானவர் சகோ.எலியேசர் உள்ளத்தில் ஒரு தூண்டுதலை கொண்டுவர, அந்த தூண்டுதலின் நிமித்தமாகவே அவரது வெளியீடுகளை சிரமங்களின் மத்தியில் எனக்கு அனுப்பி வைத்துள்ளார். ஏனென்றால் என்னுடைய ஊழியத்தின் பாதையில் 1978 முதல் 2016 வரை நான் அவரைக்குறித்து கேள்விபட்டது இல்லை. 2017 ஏப்ரல் மாதம் அவரது வெளியீடு ஒன்று வந்ததின் மூலமாகவே அவரது ஊழியத்தைக்குறித்து அறியவந்தேன். தொலைதூரத்தில் உள்ள அவர் ஏதோ ஒரு ஊழியக்காரன் மூலமாக அல்லது ஏதோ ஒரு வழியில் என்னைக்குறித்தும், என்னுடைய ஊழியத்தை குறித்தும் கேள்விப்பட்டிருக்கிறார். அதற்குரிய சூழ்நிலைகளை ஆவியானவர் அவருக்கு ஏற்படுத்திக்கொடுத்துள்ளார். அதின் நிமித்தமாகவே அவரது வெளியீடுகளை எனக்கு அனுப்பியுள்ளார். நானும் அதில் மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்.

6. சகோதரனது கருத்துள்ள தலைப்புக்கள் என்னை கவர்ந்தது. வெளியீடுகளை ஒன்றன்பின் ஒன்றாக, ஒவ்வொரு பக்கமாக, எனது மனதை ஒருமனப்படுத்தி, ஆவியானவரின் ஒத்தாசையுடன் வாசிக்க, தியானிக்க ஆரம்பித்தேன். ஆரம்பத்திலிருந்து முடிவு வரை நான் தியானித்த வேளைகளில் ஒவ்வொரு நொடியும் சர்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே அன்று ஏவாளை வஞ்சித்தது போன்று, இன்று **மணவாட்டியின் சத்தம்**, **பரலோக ஐசுவரியம்** விசுவாசிகள் சத்தியத்தை விட்டு விலகும்படி அவர்களை மோசம்போக்குகிறதே என எண்ணி எண்ணி மனம் நொந்து போனேன். நிச்சயமாக இவரது வெளியீடுகள் கிறிஸ்துவினுடைய மணிவாட்டியின் சத்தமாகவோ, பரலோக ஐசுவரியமாகவோ இருக்க முடியாது என்பதை என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து உணர்ந்தேன். மேலும் இது ஒரு கொடிதான வஞ்சிப்பின் காலமாக இருப்பதால் சகோதரனுடைய செய்தி மடல்கள் கிறிஸ்துவின் மணவாட்டி வேஷத்தை தரித்துக்கொண்ட, நீதியின் ஊழியக்காரனுடைய வேஷத்தை தரித்துக்கொண்ட, ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்துக்கொண்ட சாத்தானுடைய சத்தமாயிருக்கிறது என தேவஆவியினாலும், சத்திய வசனத்தை நிதானித்ததை கொண்டும் பகுத்தறிந்துக்கொண்டேன். தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்க தக்கதாக லௌகிக ஞானத்தை கொண்டு மிக்க தந்திரமாக எழுதப்பட்ட செய்திமடல் என்பதை அறிந்துக்கொண்டேன். அதோடு மட்டுமல்ல நம்முடைய எதிராளியாகிய பிசாசானவன் கெர்ஜிக்கிற சிங்கம் போல எவனை விழுங்கலாம் என இவரது வெளியீடுகள் மூலமாக வகைதேடி சுற்றித்திரிகிறதை கண்டுக்கொண்டேன். இவர் பொல்லாப்பிலிருந்து பொல்லாப்பிற்கு நடந்தேறுகிறதையும் கண்டேன். தேவனை இவர் அறியவில்லை என்பதையும், தேவன் இவரை தள்ளிவிட்டார் என்பதையும் கண்டுக்கொண்டேன். சாத்தான் தன்னுடைய தந்திரமான நயவஞ்சகமான குரலை

கிறிஸ்துவின் மணவாட்டியின் சத்தமாக மாற்றமுயற்சித்து வருகிறதையும் கண்டறிந்தவுடனே விசுவாசிகளுக்கு என் எச்சரிக்கை சத்தத்தை இந்த நிருபத்தில் எழுத ஆரம்பித்தேன்.

7. நான் இந்த மணவாட்டியின் சத்தம் மற்றும் பரலோக ஐசுவரியத்திலிருந்து பகுத்தறிந்துக்கொண்டதை நீங்களும் அறிந்து, சாத்தானுடைய கண்ணியை அறிந்து, அதில் விழாது உங்களை சுதாரித்துக்கொள்ள, பாதுகாத்துக்கொள்ள இந்த நிருபத்தில் எழுதிய உண்மைகளுக்கு செவிகொடுங்கள் என என்னிலுள்ள சத்தியத்தின் நிமித்தமாக, சகோதர சிநேகத்தின் நிமித்தமாக, கிறிஸ்துவின் அன்பின் நிமித்தமாக உங்களை கேட்டுக்கொள்கிறேன். வேதவாக்கியங்களிலிருந்து, இக்காலத்திற்குரிய செய்தியிலிருந்து நான் எடுத்துக்காட்டிய கொடுத்த ஆலோசனைகளை, என் கருத்துக்களை, என்னுடைய அறிவுரைகளை ஏற்றுக்கொள்வதும், நிராகரிப்பதும் உங்களுடைய சுதந்திரம். என் ஆடுகள் என் சத்தத்திற்கு செவிகொடுக்கும் என இயேசு கூறுகிறார். அதை அவரால் ஏற்படுத்தப்பட்ட ஊழியகாரனும் கூறுகிறான். என் மூலமாய் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? நான் எனது உக்கிரான பொறுப்புக்களை நிறைவேற்றி விட்டேன். என்னுடைய மனஉளைச்சல்கள், மனபாரங்கள், மனக்கவலைகள், பொருளாதார நெருக்கடிகள், சரீர பலவீனங்கள் இவைகளின் மத்தியில் உங்களுக்காக தேவன் என் கரத்தில் கொடுத்த கடமைகளை அவர் தந்த பலத்தினால் செய்து முடித்துவிட்டேன். இப்பொழுது உங்களுடைய கடமைகளை நீங்கள் நிறைவேற்றுங்கள். தேவன் தம்முடையவர்களை அறிவார். ஆக நானும் நீங்களும் அவரவர்களுடைய தெரிந்துக்கொள்ளுதலை நிறைவேற்ற வேண்டியவர்களாயிருக்கிறோம். அதாவது ஒன்று ஜீவன் மற்றொன்று மரணம். இதில் எது நமது முன்னறிந்து முன் குறிக்கப்பட்ட பங்கு என்பதை நிறைவேற்ற கடமைப்பட்டிருக்கிறோம். நீங்கள் அவரிடமிருந்து அவருடைய பரிசுத்த ஆவியை பெற்றிருந்தால் ஒருவனும் உங்களுக்கு போதிக்க வேண்டியதில்லை. அவரிடத்திலிருந்து பெற்ற அந்த அபிஷேகம் எல்லாவற்றையும் பகுத்தறிந்து சகலத்தையும் குறித்து உங்களுக்கு போதிக்கும். அது சத்தியமாயிருக்கிறது. ஜோர்ஜ் எலியேசரின் உபதேசத்தில் சத்தியம் தள்ளுபடியாயிற்று. ஏனென்றால் அது முற்றிலுமாக பரிசுத்த ஆவியை விசனப்படுத்தும் ஒரு உபதேசமாயிருக்கிறது. ஆதலால் நான் எனக்கு அருளப்பட்ட ஞானத்தினாலே எழுதுகிறதை பொறுமையுடன் படியுங்கள், தியானியுங்கள். நிச்சயமாக கர்த்தர் உங்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தி வழுவாது காத்துக்கொள்வார்.

8. கடைசி நாட்களில் கொடிய காலங்களாயிருக்கிற இந்நாட்களில் கள்ளகபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடைய அப்போஸ்தலனாக, சுவிசேஷகனாக, மேய்ப்பனாக ஏற்படுத்தப்பட்டவர்கள் என கூறிக்கொண்டு வருகிறார்கள். மக்களும் அவர்களை நம்புகிறார்கள். ஏனென்றால் இவர்கள் வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் அறியாத ஜனங்களாய் இருக்கிறார்கள். ஜீவவார்த்தையிலும், இக்காலத்திற்குரிய செய்தியிலும் தேர்ச்சி பெறாதவர்களாய் இருக்கிறார்கள். ஆதலால் அவர்களால் ஒன்றை நிதானிக்க முடியவில்லை. ஒன்றைக் குறித்து அது முற்றிலுமாக சரியா அல்லது தவறா என அறிந்து ஒரு முடிவு எடுக்க இவர்களால் முடியவில்லை. சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்துக்கொள்வானே, அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தை தரித்துக்கொள்வார்களே (2கொரி.11:14, 15) எனது எச்சரிப்பை அவர்களால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. ஆதலால் அது அவர்கள் வஞ்சிக்கப்படுவதற்கு ஏதுவாய் இருக்கிறது. இது கொடிதான வஞ்சிப்பின் காலம். வஞ்சக காலங்களில், ஏதேன் தோட்டத்தில் காலத்திலிருந்து பார்க்கையில் இக்காலத்தை போல கொடிய வஞ்சககாலம் எதுவும் இல்லை.

9. இந்நாட்களில் நமது மத்தியில் வஞ்சிப்பு தலைவிரித்து ஆடும் ஆட்டம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. கடைசி நாட்களில் கொடிதான காலங்களில் நாம் வசித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை இது அடையாளம் காட்டுகிறது. **வஞ்சிப்பு கடைசி நாட்களுக்குரிய ஒரு அடையாளம்.** ஆதலால் ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்த கள்ளகபடமுள்ள வேலையாட்களின் மாயமாகிய புளித்த மாவை குறித்து எச்சரிக்கையாயிருங்கள். வஞ்சிக்கப்படாதீர்கள். மோசம் போகாதீர்கள் என அவர்களது மாறுபாடான / மோசம்போக்கும் உபதேசங்களை சுட்டிக்காட்டி சபைக்கு எச்சரிப்பும் புத்திமதியும் கொடுப்பது எனக்கு தேவன் கொடுத்த கடமையாயிருக்கிறது, பணியாயிருக்கிறது. உக்கிராணப் பொறுப்பாயிருக்கிறது. யார் மேலும் எந்த விதமான காப்புணர்ச்சியோடு நான் இதை எழுதுவதில்லை. இதுவரை அத்தகைய குற்றத்தை நான் செய்ததில்லை. கர்த்தர் என்னை வழிநடத்தும் விதத்தில் என் சிந்தனைகளை செலுத்தி உங்களுக்கு எழுதுகிறேன். என்னுடைய நிருபங்களின் மூலமாக சபைகளை திடப்படுத்த விரும்புகிறேன். கள்ளகபடமுள்ள வேலையாட்களை அடையாளம் காட்ட விரும்புகிறேன். உங்களுக்காக அதற்கென்று எனக்கு அளிக்கப்பட்டிருக்கிற தேவகிருபைக்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன். நீங்களும் செலுத்துங்கள்.

**10. தேவன், ஏன் இந்த வஞ்சகத்தை மக்கள் மத்தியில் அனுப்ப வேண்டும்?** சத்தியத்தை விசுவாசியாமல், அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்கு உள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாக கொடிய வஞ்சகத்தை தேவன் அவர்களுக்குள் அனுப்புகிறார் (2 தெச 2:11 & 12) பாருங்கள், **யாருக்குள் தேவன் வஞ்சகத்தை அனுப்புகிறார்?** தேவனுடைய வார்த்தையை அது எழுதப்பட்ட, கொடுக்கப்பட்ட பிரகாரமாக ஏற்றுக்கொள்ளாது தங்கள் லௌகிக ஞானத்தினால் அதற்கு விளக்கம் கொடுக்கும் ஊழியர்களுக்குள், அவர்கள் போதனையை ஏற்றுக்கொள்ளும் மக்களுக்குள் தேவன் வஞ்சகத்தை அனுப்புகிறார். ஏனெனில் அவர்கள் தேவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ளாமல் மனுஷர்களுடைய கற்பனைகளை, பாரம்பரியங்களை, பிரமாணங்களை, போதகங்களை, உபதேசங்களை ஏற்றுக்கொள்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தையை தங்கள் முதுகுக்கு பின் எறிந்துப்போட்டார்கள். அதன் நிமித்தமாக அநீதியில் பிரியப்படுகிறார்கள். அதே போன்று இக்காலத்திற்குரிய தூதனால் பிரசங்கிக்கப்பட்ட பிரகாரமாக அந்த செய்தியை ஏற்றுக்கொள்ளாமல், அதனோடு ஒன்றை கூட்டியும், ஒன்றை குறைத்தும் வெளிப்பாடு என்ற பெயரில் இந்த ஜோர்ஜ் எலியேசர் போன்று தங்கள் லௌகிக ஞானத்தைக்கொண்டு விளக்கம் கொடுத்து

அக்கிரமங்களில் பிரியப்படுகிறார்கள். இவர்கள் அனைவரையும் ஆக்கினைக்குள்ளாக்கப்படுத்தும்படிக்கு தேவன் அவர்களுக்குள் கொடிதான வஞ்சகத்தை அனுப்பியிருக்கிறார்.

11. சத்தியத்திற்கு போலியாய் உள்ளதை நாம் இக்காலத்தில் எதிர்பார்க்க வேண்டுமா? ஆம், நிச்சயமாக. இஸ்ரவேல் ஜனங்களை விடுவிக்க மோசே கையில் ஒரு கோலை மாத்திரம் அடையாளமாக எடுத்துக்கொண்டு எகிப்துக்கு சென்றான். தேவன் அவனுக்கு துணையாகயிருந்தார். அவன் ஒரு அற்புதத்தை செய்தான். போலிகளும் எழும்பி அவன் செய்த அதே அற்புதத்தை செய்தனர். கடைசி நாட்களிலும் அது மறுபடியும் நிகழும் என்று வேதவாக்கியம் உரைக்கிறது. யந்நேயும் யம்பிரேயும் மோசேக்கு எதிர்த்து நின்றதுபோல இந்நாட்களிலும் சத்தியத்திற்கு எதிர்த்து நிற்கும் துர்புத்தியுள்ள மனுஷர்கள் தோன்றுவார்கள். ஜனங்களை குழப்பத்தில் ஆழ்த்துவதற்கென்றே அநேக போலியான செயல்கள் தோன்றும். தேவனிடமிருந்து தோன்றி அவருடைய வார்த்தையுடன் இணைந்துள்ள ஏதாவதொன்று எழும்பினால் அதை குழப்ப வேண்டும் என்பதற்காக ஏதாகிலும் வேறொன்று சம்பவிக்க வகையுண்டு. சாத்தான் அவ்விதம் செய்யவேண்டும் என்ற நோக்கம் கொண்டவன். ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்தியில் தேவனால் ஏற்படுத்தப்படாத கள்ளகபடமுள்ள வேலையாட்கள், மேய்ப்பர்கள், போதகர்கள் தோன்றி குழப்பத்தை தங்கள் மாறுபாடான உபதேசத்தினால் விதைத்து வருகிறார்கள். அது களையாக வளருகிறது. ஆனால் அதன் முடிவு சுட்டெறிக்கப்படுவதற்கே.

12. இவர்கள் இக்காலத்திற்குரிய செய்தியை எடுத்துக்கொண்டு, அதற்கு தங்கள் லௌகிக ஞானத்தின்படி விளக்கம் கொடுத்து, ஒவ்வொரு இடத்திலும் மூலைமுடுக்குகளில் நான்கு ஐந்து பேர்களை கொண்டு சபைகளை ஆரம்பித்து, மக்களை தங்கள் மாயமான தந்திரத்தினால் கொள்ளைகொள்ளும் **மேய்ப்பன்** போர்வையில் நடமாடும் ஆட்டுத்தோலைபோர்த்திய ஒநாய்களை குறித்து எச்சரிக்கையாயிருங்கள். பசியிலும் பட்டினியிலும் கிடக்கும் ஆடுகளை கொன்று, கொழுத்த கன்றுகளை அடித்து பிரியாணி சாப்பிட்டு, ஆடம்பரமாக வாழும், உடம்பை வளர்த்து, ஏசி கார்களிலும், வானவூர்திகளிலும் பவணிவரும் கள்ளகபடமுள்ள வேலையாட்களை குறித்து எச்சரிக்கையாயிருங்கள். அன்றியும் சகோதரரே நீங்கள் பரிசுத்த வேதவாக்கியங்களிலிருந்தும், இக்காலத்திற்குரிய செய்தியிலிருந்தும் கற்றுக்கொண்ட உபதேசங்களுக்கு விரோதமாய் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களை குறித்தும் எச்சரிக்கையாயிருந்து அவர்களை விட்டு விலகவேண்டுமென்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நாமத்தினால் உங்களுக்கு புத்தி சொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் என்ற பெயரில் மனுஷர்களுக்கு ஊழியம் செய்து, உதவிகள் பெற்று தங்கள் வயிற்றுகே ஊழியம் செய்கிறார்கள். அவர்கள் தங்கள் நயவசனிப்பினாலும் இச்சக பேச்சினாலும் கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாய் இருக்கிறார்கள். இவர்கள் வேதவாக்கியங்களிலிருந்து ஒன்றையும் எடுத்து போதிப்பதில்லை. இவர்கள் தாங்கள் உதவிபெறும் மனிதர்களின் உபதேசங்களை கொண்டுவந்து மக்களை குழப்புகிறார்கள். ஆனால் ஒன்றைமட்டும் நீங்கள் மறந்து விடாதீர்கள். **நியாயந்தீர்க்க தேவனுக்கு ஒரு நியமமம் உண்டு. அது தேவனுடைய வார்த்தை.** ஒருவன் என் வார்த்தைகளை கேட்டும் விசுவாசியாமற்போனால், அவனை நான் நியாயந்தீர்ப்பதில்லை. : நான் உலகத்தை நியாயந்தீர்க்கவராமல், உலகத்தை இரட்சிக்க வந்தேன். என்னை தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயம் தீர்க்கிறதொன்றிருக்கிறது. நான் சொன்ன வசனமே அவனை கடைசி நாளில் நியாயம் தீர்க்கும். (யோ. 12 : 47, 48) யாராவது வேதத்தில் உள்ளவைகளில் ஏதாவது ஒன்றை கூட்டினாலும் அல்லது குறைத்தாலும், அவனுடைய பாகத்தை தேவன் ஜீவபுத்தகத்திலிருந்து கிறுக்கிப்போடுவார். ஆதலால் தேவனுடைய வார்த்தைதான் முக்கியதுவம் வாய்ந்தது. நான் தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்கிறேன், தியானிக்கிறேன், எழுதுகிறேன் மேலும் பிரசங்கிக்கிறேன். கலங்குகிறவர்கள் எப்படிப்பட்டவர்களாயிருந்தாலும், தங்களுக்கேற்ற ஆக்கினை அடைவார்கள் என்ற ஒரு எச்சரிப்புடன் இந்த நிருபத்தை எழுதுகிறேன்.

13. **இந்நாளின் மேசியா மற்றும் அவரை அறிமுகப்படுத்த ஒரு செய்திபத்திரிக்கை தேவையா?** ஜோர்ஜ் எலியேசர் மணவாட்டியின் சத்தம் (Voice of the Bride) என்ற பிரதான தலைப்பின்கீழ் **இந்நாளின் மேசியாவை அறிமுகப்படுத்தும் செய்திப்பத்திரிக்கை** என தனது வெளியீட்டை புகழ்ந்து எழுதியுள்ளார். இது அவருடைய பார்வையில், அவரது கணிப்பு. நல்லது. மச்சங்களை தன் கொடிய வலையில் விழப்பண்ணுகிறார். அதாவது அவரது மணவாட்டியின் சத்தம் என்ற வெளியீடு இந்நாளின் மேசியாவை அறிமுகப்படுத்துகிறது என்கிறார். ஜோர்ஜ் எலியேசரின் மணவாட்டியின் சத்தம் உங்களை மோசம் போக்கி, நீங்கள் நடக்க வேண்டிய வழியை அழித்து போடுகிறதாக இருக்கிறது என்பது எனது கருத்து. இங்குதான் ஆரம்பத்திலிருந்தே பிரச்சனை எழும்புகிறது. இவரது புகழ்ச்சி ஒரு தேவதூஷனம் என்பது எனது கணிப்பு. நீங்கள் எனது கணிப்பை ஏற்றுக்கொள்கிறீர்களோ, இல்லையோ அது உங்களது சுதந்திரம். ஏற்றுக்கொள்கிறவர்கள் ஏற்றுக்கொள்ளட்டும், ஏற்றுக்கொள்ளாதவர்கள் ஏற்றுக்கொள்ளாதிருக்கட்டும். இப்பொழுது இங்கு என் கருத்துக்குறித்து சற்று ஆராய்வோம். தவறு என்று நான் ஒன்றை கண்டபின்பு, அது தவறு தான் என உறுதி செய்த பின்பு, அதை கண்டும் காணாததுபோல் இருந்துவிடக்கூடாது. அது என்னை போன்ற ஒரு சுவிசேஷகனுக்கு தகுதியல்ல. ஏனென்றால் என் ஊழியம் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்திக்கேற்றது. எங்கு தவறு இருக்கிறதோ அதற்கெதிராக எங்கோ ஒரு தொனி நிச்சயமாக எழுந்திருக்கும். அது தேவனுடைய நியமம். ஆக இந்த தவறான உபதேசத்தைக்குறித்து வியாக்கியானம் செய்து, அதை கடிந்து கண்டனம் பண்ணி புத்தி சொல்ல வேண்டியது என் கடமையாயிருக்கிறது.

14. இங்கு **இந்நாளின் மேசியா** என்று கூறிப்பிடுகிறார். அப்படியானால் கடந்தகால மேசியாவாக ஒருவர், அவரை அறிமுகப்படுத்த ஒரு செய்தி பத்திரிக்கை இருந்திருக்க வேண்டும். மேலும் வருங்கால மேசியாவாக ஒருவர் வர வேண்டும். அவரை அறிமுகப்படுத்தவும் ஒரு செய்தி பத்திரிக்கை எழுந்திருக்க வேண்டும். அப்படியானால் கடந்த நிகழ் வரும் காலங்களுக்காக மூன்று மேசியாக்கள், அவர்களை அறிமுகப்படுத்த மூன்று முன்னுரையாளர்கள் / மூன்று

பத்திரிக்கைகளா? மேலும் கடந்த நிகழ் வரும்கால மேசியாகளின் நாமங்கள் என்ன? மூன்று மேசியாக்களாக இருந்தால் மூன்று முன்னுரையாளர்கள். ஒரு மேசியாவாகயிருந்தால் ஒரு முன்னுரையாளன். அதாவது ஒரு முன்னோடி. நமது கரத்திலுள்ள தேவஆவியினால் அருளப்பட்ட வேதவாக்கியங்களில் நாம் ஒரு மேசியாவை மாத்திரமே காண்கிறோம். அவர் கடந்த நிகழ் வரும் காலத்திற்குரியவராக இருக்கிறார். அவர் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். (எபி.13:8) இவர் எக்காலத்திலும் மாறுவது இல்லை, மாறாதவராயிருக்கிறார். இந்த உபதேசம் குறித்து வேதவசனத்தை உங்களுக்கு போதித்து, உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து (இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களை) அவர்களுடைய நடத்தையின் முடிவை நன்றாய் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தை பின்பற்றுங்கள் என ஆலோசனை கொடுத்து பலவிதமான அந்நிய போதனைகளால் அலைப்புண்டு திரியாதிருங்கள் எனவும் நம்மை எச்சரிக்கிறது. (எபி.13,7)

15. முதன்முதலாக இந்த மேசியாவின் வருகை, சங்காரம் குறித்து தானி.9:25,26 வசனங்களில் நாம் காணலாம். எருசலேம் திரும்ப எடுத்துக்கட்டப்படுவதற்கான கட்டளை வெளிப்படுவது முதல், பிரபுவாகிய மேசியா (Messiah the Prince) வருகை மட்டும் ஏழு வாரமும், 62 வாரமும் செல்லும்...... அந்த 62 வாரங்களுக்குப்பின்பு மேசியா சங்கரிக்கப்படுவார் என தீர்க்கதரிசனமாக இங்கு உரைக்கப்பட்டுள்ளது. அடுத்து அந்திரேயா தன் சகோதரனாகிய சீமோனைக்கண்டு மேசியாவை கண்டோம் என்று சொன்னான். மேசியா என்பதற்கு கிறிஸ்து என்று அர்த்தமாம். (யோ1:41) ஆக மேசியா யார்? அவர் கிறிஸ்து. மூன்றாவதாக சமாரிய ஸ்திரீ இயேசுவை நோக்கி : கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன். அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார் என்றாள். அதற்கு இயேசு : உன்னுடன் பேசுகிற நானே அவர் என்றார். (யோ.4:25,26) அதாவது சமாரிய ஸ்திரீயிடம் நீ கூறும் அந்த மேசியாவாகிய கிறிஸ்து நானே என்றார் இயேசு. ஆக மேசியா என்ற கிறிஸ்து – இயேசுதான் என்பதை நாம் இங்கு காணலாம். நான்காவதாக இயேசு தம்முடைய சீஷர்களிடம் நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக : நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். (மத்.16:16) இப்பொழுது கிறிஸ்து யார்? அவர் தேவனுடைய குமாரன் என்று காண்கிறோம். ஆக மேசியா – கிறிஸ்து, இயேசு, தேவ குமாரன் இவர்கள் யாவரும் ஒருவரே என்ற வெளிப்பாட்டை மாம்சமும் இரத்தமும் ஒருவனுக்கு வெளிப்படுத்துவதில்லை. அதாவது ஒருவனுக்கு இம்மைக்குரிய லௌகிக ஞானம் அதை வெளிப்படுத்துவதில்லை. மாறாக பரலோகத்திலிருக்கிற பிதாதான் வெளிப்படுத்த வேண்டும் என்பதை மத்.16:13-17 ம் வசனங்களில் காண்கிறோம். பிற்காலங்களில் அப்போஸ்தலர்கள் தினந்தோறும் தேவலாயத்திலேயும், வீடுகளிலும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்து என்று பிரசங்கித்தார்கள். (அப்.5:42) அதோடுமட்டுமல்ல, அப்போஸ்தலர்கள் கிறிஸ்து இயேசுவை கர்த்தர் என்றும் பிரசங்கித்தார்கள். (2கொரி.4:5) இந்த கர்த்தர் யார்? கர்த்தரே தேவன் என்று அறியுங்கள். நாம் அல்ல. அவரே நம்மை உண்டாக்கினார் : நாம் அவர் ஜனங்களும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம். (சங்.100:4) ஆக மேசியா – கிறிஸ்து – இயேசு – தேவகுமாரன் – கர்த்தர் – தேவன், இவையாவும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் ஒருவரையே குறிக்கிறது. இவர் உலகத்தில் இருந்தார். உலகம் அவரால் உண்டாயிற்று. உலகமோ அவரை அறியவில்லை. (யோ1:10) He was in the world and the World was made by him and the world knew him not.

16. புறஜாதிகள் மேசியாவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே, இஸ்ரவேலர் மேசியாவை புறக்கணித்தனர். ஆதலால் தான் இயேசுவே மேசியா என்பதை யூதர்கள் கண்டுக்கொள்ளவில்லை. அவர்களில் புகழ்வாய்ந்த வேத பண்டிதர்கள், மேதைகள் இருந்தனர். ஆனாலும் இயேசுதான் மேசியா என்பதை அவர்கள் கண்டுக்கொள்ளமுடியவில்லை. மேசியா வரவேண்டும் என்று அவர்கள் எதிர்நோக்கி கொண்டிருந்தனர். அவர் வந்த போது அவரை மேசியா என்று அடையாளம் கண்டுகொள்ள தவறினார்கள். மேசியாவின் வருகைக்கு முன்பு ஒரு முன்னோடி வரவேண்டும் என்று நம்பியிருந்தனர். ஆனால் அவனையும் அவர்கள் சிறைசேதம் பண்ணினார்கள். ஆக இருவரும் வந்தபோது மேசியாவை கொன்று போட்டார்கள் , அவரது முன்னோடியையும் கொன்று போட்டார்கள். காரணம் என்ன? புறஜாதிகளாகிய நமக்காக அவர்கள் குருடாக்கப்பட்டார்கள். அவர்களுடைய கண்கள் திறந்திருக்க, அவர்கள் குருடாக்கப்பட்டதினால் காண தவறிவிட்டார்கள். ஆதலால் தான் புறஜாதிக்கு இயேசுவே மேசியா என்னும் சத்தியம் வெளிப்பட்டது. புறஜாதியார் உள்ளேவர இஸ்ரவேலர் குருடாக்கப்பட்டனர். மணவாட்டியின் எடுத்துக்கொள்ளப்படுதல் நிகழ்ந்த பிறகு இஸ்ரவேலர் எக்காள பண்டிகைக்கு வர புறஜாதியினர் குருடாக்கப்படுவர். மேசியாவை அவர்கள் புறக்கணிக்க வேண்டும் என்பதற்காகவே அவர்கள் குருடாக்கப்பட்டனர். பாலஸ்தீனா தேசத்திலிருந்து உலகின் எல்லா பாகங்களுக்கும் சிதறடிக்கப்பட்டனர். தற்பொழுது அவர்கள் தங்கள் சொந்த நாட்டில் ஒன்று சேர்ந்து எக்காள பண்டிகைக்கென ஆயத்தமாக்கி இயேசு கிறிஸ்து செலுத்தின பலியை உணர்ந்து கொள்ளும் தருவாயில் இருக்கின்றனர். சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். யூதர்கள் சிதறடிக்கப்பட்டனர், குருடாக்கப்பட்டனர், தற்போது அவர்கள் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளார்கள். 1948 மே திங்களில் பாலஸ்தீனத்தில் யூதர் நாடாக இஸ்ரவேல் நிறுவப்பட்டது. யூதர்கள் இப்பொழுது தங்கள் நாட்டில் இருந்துக்கொண்டு எக்காள பண்டிகைக்காகவும் மணவாட்டி எடுத்துக்கொள்ளப்பட்டு வெளி.11 நிறைவேறுதலுக்காகவும் காத்திருக்கின்றனர். வெளி.11 ல் கூறப்பட்டுள்ள தீர்க்கதரிசிகள் இஸ்ரவேலரை எக்காள பண்டிகைக்கென அழைத்து, அவர்கள் இழைத்த தவறை உணர்த்துவார்கள். மோசேயும் எலியாவும் அவர்கள் ஏற்கெனவே பெற்றிருந்த தன்மைகளுடன் திரும்ப வந்து, முன்பு செய்த அதே அற்புத அடையாளங்களை மறுபடியும் செய்வார்கள்.

17. கிறிஸ்து என்ற தமிழ் சொல்லுக்கு மூலம் கிறிஸ்தொஸ் (Xristos) என்ற கிரேக்க சொல் ஆகும். இதன் எபிரேயச்சொல் மாஷியாக் (Moshiah) செத்துவ ஜீந்தில் கிறிஸ்தொஸ் என்னும் சொல் பெரும்பாலாக மாஷியாவைக் குறிக்கிறது. பேதுரு மாஷியாவை மேஷிகா (Meshika) என்ற அரமேயக் சொல்லில் அழைத்தான். இவைகளிலிருந்து மேசியா என்ற சொல் பழக்கத்தில் வந்திருக்கலாம். ஆக அன்றும் பற்பல பாஷைகளில் மேசியாவைக் குறித்த உச்சரிப்பு

ஒன்றுக்கொன்று சற்று வித்தியாசமாகவே இருந்தது. பாருங்கள் கிறிஸ்தொஸ், மாஷியாக், மேஷிகா என்று சற்று வித்தியாசமான உச்சரிப்பு. அதாவது மொழிக்கு மொழி ஒலியில் சற்று மாற்றம். இதுதான் ஒலிமாற்றம் என்று அழைக்கப்படுகிறது. ஆக இந்த ஒலி மாற்றத்தினால் தேவன் பற்பல பாஷைகளில், சற்று ஒலி வித்தியாசத்துடன் பற்பல பெயர்களில் அழைக்கபடலானார். என்னுடைய பெயரில் பலவிதமான ஒலிமாற்றம். ஜோஷ்வா – ஜாஸ்வா – யோசுவா. ஆனால் சற்று ஒலி வித்தியாசத்துடன் இந்த மூன்று பெயர்களுக்கும் உரியவன் நான்தான். ஆதலால் இந்நாட்களில் மும்பை சகோ.டேனியல் கிறிஸ்டியான்னால் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உபதேசம் லௌகிக ஞானமேயன்றி. பரத்திலிருந்து வந்த ஞானம் அல்ல.

18. மேசியா / கிறிஸ்து என்றால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று பொருள். அதாவது தேவனுடைய ஊழியத்தை பரிபூரணமாய் செய்யும்படிக்கு அவர் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று பொருள். இன்று தேவனுடைய ஊழியத்தை செய்வதற்கு ஒருவர் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பெற தேவையில்லை என்ற நிலை உள்ளது. ஸ்தாபன சபைகளில் உள்ள உயர்மட்ட அலுவலர்களால் பிரதேஷ்டடை செய்யப்பட்டால் போதும். அல்லது ஒருவன் தன்னைத்தானே அப்போஸ்தலன், தீர்க்கதரிசி, பாஸ்டர் என நியமித்துக்கொண்டால் போதும் என்ற நிலையில் உள்ளது. பாருங்கள் மும்பை டேனியல் கிறிஸ்டியான் தன்னைத்தானே அப்போஸ்தலனாக அபிஷேகம் செய்துக்கொண்டார். சமீபநாட்களில் சர்ச்சைக்குரிய கேரளா மார்ஷல் ஆப்பிரிக்கா காக்குவ் பிலிப்புவினால் அப்போஸ்தலனாக அபிஷேகம் பெற்றுக்கொண்டார். இவ்வாறாக பரிசுத்த ஆவியின் அந்த அபிஷேகமானது நிராகரிக்கப்பட்டு வருகிறதை நாம் காண்கிறோம். அந்நாட்களில் இஸ்ரவேலில் ஆசாரியர் – ஆரோன் (யாத்.29:7), அரசன் – சவுல் (1சாமு.10:1) தாவிது (1சாமு.16:13), யெகூ (2ராஜா.9:6) தீர்க்கதரிசிகள் – எலிசா (1ராஜா.19:16) மற்றும் இஸ்ரவேலின் கோத்திர பிதாக்கள் (சங்.105:15) ஜனங்கள் (ஆப.3:16) இதோடுமட்டுமல்ல பெர்சியா ராஜா – கோரேஸ் (ஏசா.45:1) தேவனுடைய பணியை பரிபூர்வமாய் செய்வதற்கு அபிஷேகம் பண்ணப்பட்டார்கள்.

19. மேலும் பரிசுத்த ஆவியே கிறிஸ்து எனவும் காண்கிறோம். பரிசுத்த ஆவியானவர் நமக்காக வேண்டுதல் செய்கிறார். (ரோ.9:26) அதேவேளையில் நமக்காக வேண்டுதல் செய்கிறவர் கிறிஸ்து என ரோ.8:34 ல் வாசிக்கிறோம். ஆக பரிசுத்த ஆவிதான் கிறிஸ்து என்பது மிகவும் தெளிவாக உள்ளது. நித்திய ஆவி – பரிசுத்த ஆவி – தேவனுடைய ஆவி – கிறிஸ்துவின் ஆவி – கர்த்தரின் ஆவி இவை அனைத்தும் கிறிஸ்துவைதான் குறிக்கிறது. முடிவாக தேவத்துவம் கிறிஸ்துவில் பரிபூரணம். தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக கிறிஸ்துவுக்குள் வாசமாயிருக்கிறது. (கொலோ.2:8,9) ஆக மேசியா தான் தேவன், கிறிஸ்துதான் தேவன், பரிசுத்த ஆவிதான் தேவன். மேசியா, கிறிஸ்து, பரிசுத்த ஆவி யாவும் ஒன்றான மெய்த்தேவனையே குறிக்கிறது. இயேசு – கிறிஸ்து. இயேசு கிறிஸ்துவில் பரிபூரணமாக தேவத்துவம். பிரன்காம் – கிறிஸ்து. பிரன்காம் கிறிஸ்துவில் பரிபூரணமாக தேவத்துவம் என்பது வேறொரு சுவிசேஷம். இந்த வேறொரு சுவிசேஷத்தைக் கொண்டுவரும் ஜோர்ஜ் எலியேசர் சபிக்கப்பட்டவன் என்று அப்.பவுல் கூறுகிறான்.

20. தேவன் என்றால் ஆராதனைக்குரியவர். இலக்காணவர் என்று பொருள். (God is an object of workship) தேவன் ஒரு ஆவி. (யோ.4:24) (God is a spirit) தேவன் ஆவியாயிருப்பதினால் சர்வவியாபி. (சங்.139:7,10) (God is omni present) இயேசு கப்பர்நகூமில் இருந்தபோது தாமே அந்த மாம்சத்தில் வெளிப்பட்ட சர்வவியாபி என்பதை உறுதிப்படுத்த : இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே (கர்த்தராகிய இயேசு கிறிஸ்து) எங்கே கூடியிருக்கிறார்களோ (அது பூமியின் கடையாந்திரத்தில் எங்கு இருந்தாலும் சரி) அங்கே அவர்கள் நடுவே இருக்கிறேன் என்கிறார். (மத்.18:20) ஒரே நேரத்தில் பற்பல இடங்களில் விசுவாசிகள் – ஜனங்கள், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் எங்கு கூடி இருந்தாலும் அங்கே அவர்களின் நடுவில் இருக்கிறேன் என்கிறார். எங்கும் வியாபித்திருக்கும் இந்த சர்வவியாபி, எதுவும் சிருஷ்டிக்கப்படும்முன் தேவன் என்று அறியப்படவில்லை. ஏனென்றால் இவரை ஆராதனை செய்ய, இவரை தொழுதுகொள்ள இவருக்கென்று ரூபம் எதுவும் இல்லை. மேலும் இவரை தொழுதுகொள்ள எந்தவிதமான சிருஷ்டியும் இல்லை. ஆதலால் எங்கும் வியாபித்திருக்கும் இந்த சர்வவியாபி, தான் தேவன் என்று அறியப்படும் பொருட்டு எதுவும் சிருஷ்டிக்கப்படும்முன் தான் சிருஷ்டிக்கப்போகும் தம்முடைய சிருஷ்டிகள் யாவும் தம்மை தொழுதுகொள்வதற்கென தனக்கென்று ஒரு ஆவிக்குரிய மகிமையின் சரீரத்தை உடையவரானார். அதாவது சர்வவியாபி தம்மை ஒரு ஆவிக்குரிய சரீரத்திற்குட்படுத்தினார். (The Omni present spirit formed itself into one glorious supreme being) இந்த மகிமையின் சரீரம் மாம்சமும் இரத்தமும் இல்லாத ஒரு மானிட சாயிலை உடைய சரீரம். இந்த சரீரம் தான் Logos, Word, வார்த்தை என அழைக்கப்பட்டது. இயேசுவின் தாய்மொழியாகிய அரமேயக்கில் (Aramaic) உள்ள பழைய ஏற்பாட்டில் (Targums) Aran, Memra என்ற சொற்கள் தேவனுக்கடுத்தாக உள்ளது. இதற்கு எண்ணம், சிந்தனை, கருத்து அல்லது அந்த சிந்தனைக்கடுத்த வெளியீடுகை எனலாம். இதைதான் யோவான் : ஆதியிலே வார்த்தையிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது என்கிறான். (யோ.1:1) இப்பொழுது வார்த்தை : எங்கும் வியாபித்திருக்கும், ஆனால் காணக்கூடாத சர்வவியாபியாகிய தேவன் மானிட சாயலான ஒரு ஆவிக்குரிய மகிமை சரீரம். இப்பொழுது தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் ஆவிக்குரிய பிரகாரமாக வார்த்தையில் வாசம் செய்கிறது. (Logos is actually the attributes of the fullness of God – The attributes of Father, Son, Holy Ghost are in Logos) வார்த்தையில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்ற தன்மைகள். இப்பொழுது எங்கும் வியாபித்திருக்கும் ஆவி தான் தேவன் என்றும் அழைக்கப்படும் பொருட்டு தனக்கென்று ஒரு ஆவிக்குரிய மகிமையின் சரீரத்தை உடையவராகி வார்த்தை என அழைக்கப்பட்டு, வார்த்தையில் தேவன் என்று அறியப்படலானார். ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது. (யோ.1:1) சர்வவியாபி தனக்குத்தானே ஒரு சரீரத்து உடையவராகி, தன்னில் தானே ஜீவன் உடையவரானதால் யேகோவா என்று அழைக்கப்பட்டார். யேகோவா என்றால் தன்னில் தானே ஜீவன் உள்ளவர் என்று பொருள்.

21. தன்னில் தானே ஜீவனுடைய இந்த சுயசிருஷ்டிப்பின் சரீரம் ஏன் வார்த்தை என அழைக்கப்பட்டது? என்னில் உள்ள சிந்தனைகள் (Thoughts) யாவும் என்னிலிருந்து வெளிவந்து வார்த்தை (Word) ஆக மாறுகிறது. அதேபோன்று தேவனிலிருந்த சிந்தனைகள் / எண்ணங்கள் யாவும் ஆதிமுதல் அந்தம் வரை உள்ள யாவும் அவரிடமிருந்து புறப்பட்டு வெளிவந்து வார்த்தை ஆனது. இப்பொழுது வார்த்தையில் தேவன், தேவன் என்று அறியப்படலானார். எங்கும் வியாபித்திருக்கும் ஆவி தான் தேவன் என்று அறியப்படும் பொருட்டு தன்னில் தானே ஜீவனைக்கொண்டு ஒரு ஆவிக்குரிய மகிமை சரீரத்தை அடைந்த அந்தவேளை **ஆதி** என அழைக்கப்பட்டது. ஆதலால் தான் யோவான் ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது என்கிறான்.

22. அடுத்து தேவனே எல்லாவற்றிலும், எல்லாரிலும் முந்தினவராகயிருக்க வேண்டும். தேவனுக்கு எதிலும் இரண்டாவது அல்லது அதற்கு இணையான ஒரு ஸ்தானம் இருக்க கூடாது / முடியாது. இவ்வாறாக தேவன் தனக்கென்று ஒரு ஆவிக்குரிய மகிமையின் சரீரத்தை தன்னில் தானே சிருஷ்டித்து (Logos – Word) சர்வசிருஷ்டிக்கும் முந்தினபேறுமானார். (கொலோ.1:15) ஆதலால் தேவகுமாரன் என்று அழைக்கப்பட்டார். ஆக எங்கும் வியாபித்திருக்கும் சர்வவியாபி, வார்த்தை, தேவகுமாரன் இவையாவும் தேவனுக்குரிய தன்மைகள் (Attributes) சர்வவியாபி தான் வார்த்தை – Word – Logos. வார்த்தைதான் தேவகுமாரன். ஆதலால் தான் 1யோ.5:20 யோவான் இவரே மெய்யான தேவனும், நித்திய ஜீவனுமாயிருக்கிறார் என்கிறான். நித்திய தேவன், அநாதி தேவன் , Eternal God ஒருவராகத்தான் இருக்கமுடியும். அவர் மூவராகவோ, இருவராகவோ, பலநபர்களாகவோ இருக்க முடியாது. உபா.(33:27)

23. தேவன் என்றால் தொழுகைக்குரியவர் என்று பொருள். தேவன் பலராகியிருப்பாராகில் தொழுகைக்குரியவரும் பலராகயிருப்பார்கள். தொழுகைக்குரியவர்கள் பலராகயிருந்து, தேவன் பன்மை எண்ணிக்கையிலிருந்து அவர் ஒருவராக இருக்க முடியாது. இது சாத்தியமில்லாத ஒன்று. ஒன்று என்றால் அது ஒன்றுதான். இரண்டு என்றால் அது இரண்டு தான். மூன்று என்றால் அது மூன்றுதான். ஒன்று இரண்டாகவோ மூன்றாகவோ முடியாது. இது லௌகிக ஞானம். இது வஞ்சனையான போதனை. இதற்குரியவன் பிசாசு. திருத்துவ ஸ்தாபன சபைகள் அனைத்திற்கும் தலை பிசாசே. அவனுடைய ஆளுகையின் கீழ்தான் திருத்துவ சபைகள் இயங்குகின்றன. தேவன் தமது முதற்பேறானவரை (Logos – Word – வார்த்தை) உலகத்தில் பிரவேசிக்க செய்தபோது தேவதூதர்கள் யாவரும் அவரை தொழுதுக்கொள்ள கடவர்கள் என்றார். (எபி.1:7) இப்பொழுது நன்கு கவனியுங்கள். தேவன் ஒரு ஆவி. இது நித்திய ஆவி. தேவன் வார்த்தையில் தேவன் என்று அறியப்படலானார். தேவன் தேவகுமாரனின் தொழுகைக்குரியவரானார்.

24. இப்பொழுது தேவகுமாரன் : கிறிஸ்து / மேசியா என்று அழைக்கப்படலானார். ஏன்? எப்படி? கிறிஸ்து என்றால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று பொருள். நித்திய ஆவி / பரிசுத்த ஆவியின் அபிஷேகம் கிறிஸ்து மீது பரிபூரணமாக. தேவனுக்கு பாவத்தில் விழுந்த மனுக்குலத்தை இரட்சிக்க பல பதவிகள் வகிக்க வேண்டியதாயிருந்தது. எந்தவொரு பதவியையும் அவர் வேறுயாரிடத்திலும் ஒப்புவிக்க முடியாது. மனுக்குல இரட்சிப்பின் திட்டத்தில் தேவனும் அவரே. தொண்டனும் அவரே. தன்னுடைய இரட்சிப்பின் திட்டத்தில் இவர் ஆசாரியர், தீர்க்கதரிசி, அப்போஸ்தலன் போன்ற பல பதவிகளை உடையவராகி அதற்கென அபிஷேகம் பண்ணப்பட வேண்டியவராயிருந்தார். நித்திய ஆவியின் அபிஷேகத்தைக்கொண்டு அவர் கிறிஸ்து என அழைக்கப்படலானார். ஆதலால் தான் பேதுரு நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். (மத்.16:16) நித்திய ஆவி (எபி.9:14) தனக்கென்று ஒரு ஆவிக்குரிய மகிமையின் சரீரத்தை உடையவராகி Logos – Word – வார்த்தை என அழைக்கப்பட்டு சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவராகி தேவகுமாரன் என்று அழைக்கப்பட்டு, தேவன் தேவகுமாரனில் தொழுகைக்குரியவர் ஆனார், ஆராதனைக்குரியவர் ஆனார். நித்திய ஆவியின் அபிஷேகம் தேவகுமாரன்மேல் பரிபூரணமாகயிருந்ததால் அந்த அபிஷேகத்தை கொண்டு அவர் கிறிஸ்து என்று அழைக்கப்பட்டார். நம்மில் அந்த அபிஷேகம் குறைவாக இருப்பதால் நாம் குட்டி கிறிஸ்துவர்கள். இதிலும் கள்ளகிறிஸ்துவர்களும் உண்டு. தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீர பிரகாரமாக கிறிஸ்துவுக்குள் வாசமாயிருக்கிறது. (கொலோ.2:9) In Christ dwelleth all the fullness of God head bodily. தேவத்துவம் கிறிஸ்துவில் பரிபூரணமாகயிருக்கும் போது இரண்டாவது, மூன்றாவது, பலருக்கு பங்கு எங்கே? பொதுவாக தேவனுக்கடுத்த பெயர்கள் யாவும் காரணப்பெயர்களே. வார்த்தை, தேவகுமாரன், மனுஷகுமாரன், தாவீதின் குமாரன், கிறிஸ்து, யேகோவா, உடன்படிக்கையின் தூதன், சாரோனின் ரோஜா, பள்ளத்தாக்கின் லீலி இவையாவும் காரணப்பெயர்களே.

25. நான் என்னுடைய இந்த வனாந்திர வாழ்க்கையில் நான் கொண்டுள்ள பற்பல தன்மைகள் பதவிகளை கொண்டு ஆரம்பத்தில் குழந்தை, வாலிபன், கணவன், தந்தை, தாத்தா போன்ற தன்மைகளை என்னில் கொண்டு அதற்கேற்றவாறு அவ்வபோது அழைக்கப்பட்டேன். கர்த்தர் எனக்கு கொடுத்த சபை பக்திவிருத்திக்கடுத்த ஊழியத்தில் சுவிசேஷகனாக இருக்கிறேன். இப்படியாக என்னுடைய பற்பல பதவிகளின் தன்மைகளை கொண்டு நான் அழைக்கப்பட்டாலும் என்னுடைய பெயர் காலேப் யோசுவா. அதே போன்று தேவனுக்கும் அவனுடைய தன்மைகள் பதவிகளை கொண்டு. தேவன், கர்த்தர், யேகோவா, தேவகுமாரன், பிதா, குமாரன், சமாதானப்பிரபு, வார்த்தை, கிறிஸ்து என்று அழைக்கப்பட்டாலும் அவருடைய நாமம் / பெயர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்பதே.

26. இஸ்ரவேல் ஜனங்கள் அந்நிய தேவர்களை பின்பற்றி, அவைகளுக்கு ஆராதனை செய்து, அவைகளை பணிந்து தங்கள் கைகளின் செய்கைகளினால் கர்த்தருக்கு கோபமூட்டும்படிக்கு அவருடைய சொல்லை கேளாமல் போனார்கள். கர்த்தர் அவர்களிடத்திற்கு தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரரையும் ஏற்கெனவே அனுப்பி கொண்டியிருந்தும் அவர்கள் கேளாமலும், கேட்கும் படிக்கு அவர்களுடைய செவியை சாயாமலும் போனார்கள். யோயாக்கீம் யூதாவின் ராஜாவாய் இருந்த நாட்களில் ஏரேமியா தீர்க்கதரிசிக்கு கர்த்தருடைய வார்த்தை

உண்டாயிற்று. அவன் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரை இந்த தேசத்திற்கு விரோதமாகவும், குடிகளுக்கு விரோதமாகவும், சுற்றிலும் இருக்கிற எல்லா ஜனங்களுக்கு விரோதமாகவும் வரப்பண்ணி அவர்களை சங்காரத்திற்கு ஒப்புக்கொடுத்து அவர்களை பாழாக்கவும், இகழ்ச்சிக்குரிய ஈசலைப்போலவும் நித்திய வனாந்தரமாகவும் செய்வேன் என்றார். (எரே.25 அதி) இஸ்ரவேல் தேசமெல்லாம் வனாந்தரமும், பாழுமாகும். இந்த ஜாதிகள் பாபிலோன் ராஜாவை 70 வருஷமாக சேவிப்பார்கள் என்றார். எருசலேமையும், யூதாவையும் கர்த்தர் தனது சமூகத்தை விட்டு அகற்றி பாபிலோன் ராஜாவிடம் 70 ஆண்டுகள் ஒப்புக்கொடுத்தார். அதன்படி எருசலேமையும் யூதாவையும் கர்த்தர் தமது சமூகத்தை விட்டு அகற்றினார். ஆனாலும் இந்த 70 வருஷம் நிறைவேறினபின்பு நான் அவர்களை சந்தித்து அவர்களை மீண்டும் தன்னிடத்திற்கு திரும்பிவரப் பண்ணும் படிக்கு அவர்கள் மேல் என் நல்வார்த்தையை நிறைவேற்ற பண்ணுவேன் என்றும் கர்த்தர் சொன்னார். (ஏரே.29:10) ஆதலால் இந்த சிறையிருப்பின் காலத்திற்கு பிறகு யூத ஜனத்தை ஒரு பெரிய ராஜ்யமாக கர்த்தர் ஏற்படுத்துவார், அவர் இஸ்ரவேலை எல்லா தேசங்களிலுமிருந்து விடுவித்து தேசங்கள் மேல் ஆளுகை செய்யும்படிக்கு வழிநடத்துகிற ஒரு ராஜாவாக இருப்பார். அந்த ராஜ்யத்தை தாவீதின் வம்சத்தை சேர்ந்த ஒருவர் அரசாளுவார். அவர் யூதருடைய சத்துருக்கள் அனைத்தையும் அழித்து ஒரு பூரண இரட்சிப்பை இஸ்ரவேல் ஜனங்களுக்கு கொண்டுவருவார் என நம்பினார்கள். அவருக்காக எதிர்நோக்கி கொண்டும் இருந்தார்கள்.

27. அவர்களுடைய எதிர்பார்ப்பை குறித்து : எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தாலும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார் : அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது (மீகா.5:1) யூதேயா தேசத்திலுள்ள பெத்லகேமே, யூதாவின் பிரபுக்களின் நீ சிறியதல்ல : என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும் பிரபு உன்னிடத்திலிருந்து புறப்பட்டு வருவார் என்று தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டிருக்கிறது. (மத்.2:6) தாவீதின் சந்ததியிலும், தாவீது இருந்த பெத்லகேம் ஊரிலிருந்து கிறிஸ்து வருவார் என்று வேதவாக்கியம் சொல்லவில்லையா? (யோ.7:42) யாக்கோபின் மனைவியாகிய ராகேல் மரித்து பெத்லகேம் என்னும் எப்பிராத்தா ஊருக்கு போகிற வழியிலே அடக்கம் பண்ணப்பட்டாள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஆதி.35:19)

28. ஆக காலம் நிறைவேறினபோது மேய்ப்பர்கள் வயல்வழியில் தங்கி, இராத்திரியிலே தங்கள் மந்தையை காத்துக்கொண்டிருந்தபோது, கர்த்தருடைய தூதன் அவர்களிடத்திலே வந்து நின்று, இன்று கர்த்தராகிய கிறிஸ்து தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார் என்றான். (லூக்.2:11) இவருக்கு வழியை ஆயத்தம் பண்ண யோவான் ஸ்நானன் இவருக்கு முன்பாகவே பிறந்து, வளர்ந்து, சாட்சிக்கொடுத்தான். இவனை குறித்து மல்கியா தீர்க்கதரிசி : இதோ நான் என் தூதனை அனுப்புகிறேன், அவன் எனக்கு முன்பாக போய், வழியை ஆயத்தம் பண்ணுவான் என்று கூறியுள்ளான். (மல்.3:1) மேலும் இதோ நான் என் தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன். அவன் உமக்கு வழியை ஆயத்தம் பண்ணுவான் என்று எழுதிய வாக்கியத்தில் உரைக்கப்பட்டவன் இவன்தான் என்று மல்கியா கூறியதை இயேசு உறுதிப்படுத்துகிறார். (லூக்.7:27,28) இப்பொழுது யோவான் ஸ்நானன் இயேசுவை குறித்து சாட்சி கொடுக்கிறான். யோ1:19,34 யை தியானியுங்கள். ஆக மேசியா இந்த பூமிக்கு வந்தபோது அவரை அறிமுகப்படுத்த வேண்டியதாயிருந்தது. ஏனென்றால் மக்கள் அவரை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். தங்களை ஆளப்போகிற பிரபு ஒரு ராஜகுலத்தில் தோன்றுவார் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். ஆனால் அவரோ அவர்கள் எதிர்பார்ப்புக்கு மாறாக நூதனமான முறையில் ஒரு தாழ்மையான நிலையில் ஒரு மாட்டு தொழுவத்தில் பிறந்தார். ஆதலால் அவர்கள் அவரை அடையாளம் கண்டுக்கொள்ளவில்லை, அங்கிகரிக்கவில்லை, ஏற்றுக்கொள்ளவில்லை. ஆக காலம் நிறைவேறின போது யோவான் ஸ்நானன் அவருக்கு முன்பாக வந்து, அவருக்கு வழியை ஆயத்தம் பண்ணி, அவரை குறித்து சாட்சி கொடுத்து அறிமுகப்படுத்தினான். யோவான் இயேசுவை தன்னிடத்தில் வரக்கண்டு இதோ, உலகத்தின் பாவத்தை சுமர்ந்து தீர்த்த தேவ ஆட்டுக்குட்டி. இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்து வருகிறேன் என்றான். (யோ.1:29-34) இதற்காகவே யோவான் ஸ்நானன் அனுப்பப்பட்டிருந்தான். இது வேதவாக்கியங்களின் அடிப்படையில் நடந்த சம்பவம். தீர்க்கதரிசியால் முன்னுரைக்கப்பட்டு நடந்தேறிய சம்பவம்.

29. பிள்ளைகள் மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவரானார். தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். எதற்கு? மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசானவனை தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கு அப்படியானார். (1தீமோ.3:16, எபி.2:14-16) இது தேவன் உலகத்தில் வைத்த அன்பு. இது குறித்து தியானியுங்கள். யோ.3:16-18 தேவன் தம்முடைய குமாரனை இந்த உலகத்திற்கு அனுப்பியதின் நோக்கமே, இந்த உலகம் இரட்சிக்கப்படுவதற்காகத்தான் (யோ.3:17) மனுஷகுமாரன் மனுஷர்களுடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல. மாறாக இரட்சிக்கிறதற்காகவே வந்தார். (லூக்.9:56)

30. யூதர்கள் மேசியாவை ராஜாவாக, தங்களை ஆளப்போகிற பிரபுவாக எதிர்நோக்கி கொண்டிருந்தனர். ஆனால் அவரோ உலகத்தின் பாவங்களை சுமர்ந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாக வந்தார். (யோ.1:14) மனுக்குலம் ஏதேன் தோட்டத்தில் பாவத்தில் விழுந்தது. ஒரே மனுஷனாலே (ஆதாம்) பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்தில் பிரவேசித்தது. (ரோ.5:12) பாவத்தின் சம்பளம் மரணம்.(ரோ.6:23) ஆதலால் மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசானவனை தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்கு உள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கு மாம்சத்தையும் ரத்தத்தையும் உடையவரானார். அவர் யூதர்களிலிருந்து மாத்திரம் அல்ல, புறஜாதிகளிலுமிருந்து நம்மை அழைத்திருக்கிறாரே. (ரோ.9:24) யூதன் என்றும் கிரேக்கம் என்றும் வித்தியாசமே இல்லை. எல்லோருக்கும் கர்த்தரானவர் தம்மை தொழுது

கொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரிய சம்பன்னராயிருக்கிறார். (ரோ.10:12) நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுவாதினராயினும் எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு எல்லோரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம். (1கொரி.12:13)

31. தேவன் யூதருக்கு மாத்திரம் தேவன் அல்ல, புறஜாதிகளுக்கும் அவர் தேவன் தான். (ரோ.3:29) கூறப்போனால் மாம்சமான யாவருக்கும் அவர் தேவனாகிய கர்த்தர். (எரே.32:27) இந்த பூமிக்கு வந்து, பாடுபட்டு, மரணத்தை சந்தித்து, அடக்கம்பண்ணப்பட்டு மூன்று முழு இரவு, மூன்று முழு பகல் பூமியின் இருதயத்திலிருந்து, பின் உயிர்தெழுந்து தம்முடைய பழைய ஏற்பாடு பரிசுத்தவான்களை அழைத்துக்கொண்டு உன்னதத்திற்கு ஏறினார். பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, மகத்துவ ஆசனத்தின் வலது பாரிசத்தில் உட்கார்ந்தார். (மாற்.16:19, எபி.8:1) ஆக மேசியா யூதர்களை மாத்திரம் அல்ல உலகத்தையே இரட்சிக்கிறதற்கு அனுப்பப்பட்டு அபிஷேகம் பண்ணப்பட்ட மேசியாவாக தமது ஊழியம் அனைத்தையும் முடித்து, தமது இராஜ்ஜியத்தை ஸ்தாபித்து அதை பிதாவாகிய தேவனிடம் ஒப்புக்கொடுப்பார். (1கொரி.15:24)

32. ஆக கிறிஸ்து பிறந்தார், வளர்ந்தார், பாடுபட்டார், மரித்தார், உயிர்தெழுந்தார். அத்துடன் அவர் மாம்சத்தில் வந்த நோக்கம் முடிந்தது. **முடிந்தது** என்று சொல்லி தம்முடைய தலையை சாய்த்து ஆவியை ஒப்புக்கொடுத்தார். (யோ.19:30) நம் எல்லார் மேலும் இருந்த தேவனும் பிதாவுமானவர், நம் எல்லாரோடும் குமாரனாகயிருந்தார். இதென்ன? தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். வார்த்தை மாம்சமானது. இப்பொழுது பரிசுத்த ஆவியாக நம் எல்லாருக்குள்ளும் இருக்கிறார். (எபே.4:5) இது தேவனுடைய ஆவி. தேவன் ஒரு ஆவி. அது நித்திய ஆவி.

33. கிறிஸ்து பிறந்து, வளர்ந்து, பாடுபட்டு, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு உயிர்தெழுந்தார். இப்பொழுது அடுத்து நடக்கயிருப்பது என்ன? சகோதரரே நித்திரையடைந்தவர்களின் நிமித்தம், நீங்கள் நம்பிக்கையற்றவர்களாக மற்றவர்களை போல துக்கிக்கிறது எனக்கு (பவுல்) மனதில்லை. இயேசு மரித்து பின்பு உயிர்தெழுந்தார் என்று விசுவாசிக்கிறோமோ, அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடே கூட கொண்டுவருவார். கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். **அப்பொழுது** (இங்கு ஆங்கிலத்தில் And என்ற வார்த்தை உள்ளது) **இதற்கு மற்றும் / மேலும் என அர்த்தம்.** ஆதலால் **அப்பொழுது** என்ற மொழிபெயர்ப்பு சரியானதாகயில்லை. அது மேலும் அல்லது மற்றும் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள், பின்பு உயிரோடுயிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழும் கர்த்தருடனே கூட இருப்போம். (1தெச.4:13-17) என இருக்க வேண்டும். இது கர்த்தர் தம்முடைய மணவாட்டியை எடுத்துகொள்ளும் இரகசிய வருகை. கவனியுங்கள் சபை எடுத்துக்கொள்ளப்படும் நேரத்தில் அவர் பூமிக்கு வருவதில்லை. தம்முடைய மணவாட்டியை ஆகாயத்தில் எடுத்துக்கொள்கிறார்.

34. கிறிஸ்து வேதவாக்கியங்களின் படி தன்னுடைய பாவங்களுக்காக மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார், உயிர்தெழுந்தார் என்று விசுவாசித்து (1கொரி.15:3,4) மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் (அப்.2:38) பெற்று ஜலத்தினாலும் ஆவியினாலும் மறுபிறப்படைந்தார்களோ (யோ.3:3-6) அவர்களுக்கு தமது ஆவியை கொடுத்து, அவர்களுக்குள் வாசம் பண்ணுகிறார். தேவன் உங்களுக்கும் வாசம் செய்வதே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம். ஆகவே கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்கிறவர்கள் அனைவரும் கிறிஸ்தவர்கள் அல்ல. அவர்கள் பெயர் அளவில் மாத்திரமே கிறிஸ்தவர்கள். பரிசுத்த வேதாகமத்தில் காணப்படும் பெயர்களை வைத்துக்கொண்டு, அல்லது ஏதோ ஒரு ஸ்தாபன சபையை சார்ந்து கொண்டு கிறிஸ்தவர்களாகி விடுகிறார்கள். கிறிஸ்துவின் ஆவி உங்களில் வாசமாயிருந்தால் நீங்கள் மாம்சத்திற்குட்பட்டவர்களாயிராமல், ஸ்தாபன சபைக்குட்பட்டவர்களாயிராமல், வெறுமென பரிசுத்தவான்களின் பெயர்களை தரித்துக்கொண்டவர்களாயிராமல், ஆவிக்குட்டபட்டவர்களாய் இருப்பீர்கள். பாருங்கள் கிறிஸ்துவின் ஆவி இல்லாதவன் அவருடையவன் அல்ல. (ரோ8:8-10) கிறிஸ்துவின் ஆவியை / பரிசுத்த ஆவியை உடையவனே எடுத்துக்கொள்ளப்படுதலில் பிரவேசிக்க முடியும்.

35. இந்தக் காரியத்தின் கடைத்தொகையை கேட்போமாக. அன்று தேவனால் தெரிந்துத்கொள்ளப்பட்ட பாத்திரங்கள் யாவும் தினந்தோறும் தேவாலத்திலேயும், வீடுகள் தோறும் இடைவிடாமல் இயேசுவே கிறிஸ்து, கிறிஸ்து இயேசுவே கர்த்தர் என்று பிரசங்கித்தார்கள். ஆனால் இன்று பிசாசினால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள் வில்லியம் மாரியன் பிரன்காமே கிறிஸ்து, கிறிஸ்துவாகிய வில்லியம் பிரன்காமே கர்த்தர் என்று வேறோரு சுவிசேஷத்தை பிரசங்கித்து வருகிறார்கள். இதொடுமட்டுமல்ல அங்கு இயேசு கிறிஸ்து நாமத்திற்கு ஏற்றவைகளை குறித்து பிரசங்கித்தார்கள். ஆனால் இன்று மேற்கூறப்பட்ட சபிக்கப்பட்டவர்கள் கிறிஸ்து பிரன்காம் நாமத்திற்கு ஏற்றவைகளை குறித்து பிரசங்கித்து வருகிறார்கள். **ஆனால் சகோ பிரன்காமோ : தேவனாகிய கர்த்தாவே என்னை சோதித்து பாரும் என்னிடத்தில் தீமையானது ஏதாவது இருக்குமானால் அதை எடுத்துப்போடும். கார்த்தாவே உம்முடைய சபைக்கும், உம்முடைய ஜனங்களுக்கும் ஒத்தாசை புரியும்படியாக சிறந்த ஒரு ஊழியம் செய்யும்படிக்கும், தேவனை சிறப்பாக புரிந்துக் கொள்ளும்படிக்கும் கூடுதலாக நீர் என்னை பயன்படுத்தக்கூடியது ஏதாவது இருக்குமானால், இதோ நான் இருக்கிறேன். கர்த்தாவே பேசும், உமது ஊழியக்காரன் கேட்கிறேன். கர்த்தாவே நான் மறுமொழி கூறுவேன். சற்று பேசும், நான் செய்ய வேண்டும் என்று நீர் கூறுகிற எதையும் நான் செய்வேன். தேவனாகிய கர்த்தாவே எனக்கு உமது பார்வையில் தயவு கிடைப்பதாக என தன்னை தாழ்த்துகிறார். மேற்கண்ட பகுதியை நீங்கள் அவரது செய்தி இந்த மலையிடம் பேசு நாள்.23.11.1959 தியானிக்கலாம்.** ஆனால் இந்த மூடர்கள் அவரை கிறிஸ்து / மனுஷகுமாரன் / தேவகுமாரன் / சர்வ வல்லமையுள்ள தேவன் என்று கூறி தேவனுடைய நாமத்தை தூஷிக்கிறார்கள்.

பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்தை, தேவத்துவத்தை, தேவனை இவர்கள் கனவீனம் பண்ணுகிறதென்ன? இவர்கள் மூலமாய் தேவனுடைய நாமம் தூஷிக்கப்படுகிறது. அப்.பவுல் சுவிசேஷத்தை பிரசங்கித்த பிரகாரமாய் அதை ஏற்றுக்கொண்டு, அதில் நிலைத்திருந்து கைக்கொண்டு வருகிறவர்கள் மாத்திரமே இரட்சிக்கப்பட்டவர்கள். மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்கும். காரியம் இப்படியிருக்க கிறிஸ்து பிரன்காம் என்பது வேறொரு சுவிசேஷம் அல்லவா? உங்களை இந்த உபதேசத்தினால் கலக்குகிறவர்கள் பிசாசு அல்லவா? பிரியமானவர்களே பிசாசுக்கு இடம் கொடுக்காதீர்கள். இந்த கிறிஸ்து பிரன்காம் கூட்டத்தார் உள்ளத்தில் பட்சிக்கிற ஓநாய்கள் என்பதை மறந்துவிடாதீர்கள். இவர்கள் தங்களுடைய சாக்கடை உபதேசத்தினால் சபையை பாழாக்கி கொண்டு வருகிறார்கள். ஆதலால் இவர்கள் தங்கள் கோட்பாடுகளினால் உங்களை மோசம் போக்காதிருக்க ஜாக்கிரதையாய் இருங்கள்.

36. இப்பொழுது நம்முடைய சகோதரர் ஜோர்ஜ் எலியேசரின் எழுத்துப்படி இந்நாளில் மேசியாவை அறிமுகப்படுத்தும் செய்தி பத்திரிக்கை என தமது மணவாட்டி சத்தம் என்ற பெயரைக்கொண்டு தன் பத்திரிக்கையை அலங்கரிப்பதற்கு வேதவாங்கியங்களில் எடுத்துக்காட்டுகள் உண்டா? அடிப்படை ஆதாரங்கள் உண்டா? நாம் மணவாட்டி எடுத்துக்கொள்ளப்படும் நாளை எதிர்நோக்கி கொண்டிருக்கிறோம். தம்முடைய மணவாட்டியை அவர் எடுத்துக்கொள்ள எந்த நேரத்திலும் அவர் வரலாம். ஆனால் அதற்குமுன் அவருடைய மந்தையில் உள்ள கடைசி ஆடு தொழுவத்திற்குள் வந்து சேர வேண்டும். எடுத்துக்கொள்ளப்படுதல் ஏழாம் சபைக்காலத்திற்கடுத்த ஒரு சம்பவமாக இருப்பதால், அந்த ஆடு ஏழாம் சபைக்காலத்திற்குரிய செய்தியை கேட்க வேண்டும், விசுவாசிக்க வேண்டும், மனந்திரும்ப வேண்டும், பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும், பரிசுத்த ஆவியை பெற வேண்டும். ஆனாலும் தேவன் தம்முடையவர்களை அறிவார். நான் என்னுடயவைகளை அறிந்தும், என்னுடயவைகளால் அறியப்பட்டும் இருக்கிறேன். அவைகள் என் சத்தத்திற்கு செவி கொடுக்கும். அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனும் ஆகும். (யோ.10:15,16) இயேசு கிறிஸ்து தம்முடையவர்களை அறிந்தும், தம்முடையவர்களால் அவர் அறியப்பட்டும் இருக்கும் வேளையில் அவரை அறிமுகப்படுத்த ஒரு மனிதன் அல்லது ஒரு செய்திபத்திரிக்கை தேவையா? இந்நாளில் மேசியா யார்? அது பரிசுத்த ஆவி தானே. அப்படியானால் பரிசுத்த ஆவியை அறிமுகப்படுத்த ஒரு செய்திபத்திரிக்கை தேவையா? அந்நாட்களில் எதிர்பார்த்துக்கொண்டிருந்த மேசியாவை இயேசுவில் கண் உள்ளவர்கள் கண்டார்கள். இந்நாளில் மேசியா, பரிசுத்த ஆவி ஆகும். நான் உங்களுக்கு உண்மையை சொல்லுகிறேன். நான் போகிறது உங்களுக்கு பிரயோஜனமாய் இருக்கும். நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார். நான் போவேனாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன். (யோ.16:7) பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை எல்லாவற்றிலும் உங்களுக்கு போதித்து, நான் (இயேசு) உங்களுக்கு சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். (யோ.14:26) அன்று கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வந்து எல்லாவற்றையும் போதிப்பார் என எதிர்பார்த்தார்கள். இயேசு மரித்து உயிர்தெழுந்தப்பின் பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன் (மேசியா) வந்து எல்லாவற்றையும் போதிப்பார் என இயேசு கூறினார்.

37. பரிசுத்த ஆவிதான் இன்றைய மேசியா. நீங்கள் ஏழாம் சபைக்கால தூதன் என விசுவாசிக்கும் சகோ.பிரன்காம் தனது செய்திகள் **உலகம் விழுந்துபோகுதல்** பத்தி.67, **தேவனின் கழுகுகள்** பக்கம்.50, பத்தி.3ல் கூறுவதாவது : மேசியாவின் மனைவி கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் உள்ள அங்கத்தினர்கள். மேசியாவின் மனைவி தான் மணவாட்டி சபை. ஆதலால் அவளை அவருக்கு அறிமுகப்படுத்த ஒரு தனிப்பட்ட மனிதனோ அல்லது ஒருவர் எழுதும் செய்திபத்திரிக்கையோ தேவையில்லை. அவளை அவர் அறிவார். அவரை அவள் அறிவாள்.

38. ஆக மேசியாவை அறிமுகப்படுத்த மணவாட்டியின் சத்தம் என்ற செய்திபத்திரிக்கை தேவையில்லை. பரிசுத்த ஆவி பெந்தெகொஸ்தே நாளன்றே ஊற்றப்பட்டுவிட்டது. ஒரு காலத்தில் பரிசுத்த ஆவி, அதாவது தேவனுடைய ஆவியின் அபிசேஷகத்தினால் வழிநடத்தப்பட்டார்கள். அற்புதங்களை செய்தார்கள். எலிசபெத் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டாள். (லூக்.1:41) சகரியா பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டான். (லூக்.1:67) தாவீது பரிசுத்த ஆவியை பெற்றிருந்தான்.(சங்.51:11) ஆனால் இப்பொழுதோ பரிசுத்த ஆவி நமக்குள். தேவனுடைய ஆவி / பரிசுத்த ஆவி நமக்குள் வாசமாயிருக்கிறார். ஆதலால் நாம் தேவனுடைய ஆலயம் எனப்படுகிறோம். தேவன் எனக்குள் வாசமாயிருக்கும்போது என்னை அவருக்கு அறிமுகப்படுத்த ஒரு மனிதன், ஒரு செய்திபத்திரிக்கை தேவையா? சகோ.எலியேசர் தன்னைத்தானே வஞ்சித்துக்கொள்வது மாத்திரம் அல்ல பிறரையும் வஞ்சிக்கிறார். கள்ளகபடமுள்ள வார்த்தைகளை கர்ப்பம் தரித்து தன் இருதயத்திலிருந்து பிறப்பிக்கப்பண்ணுகிறார். குருவிகளை தன் கன்னியினால் பிடிக்கப்பார்க்கிறார். ஆனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களை வஞ்சிக்க முடியாது. ஏனென்றால் பரிசுத்த ஆவியின் அபிசேஷம் அவர்களிடத்தில் உண்டு. நீங்கள் அவராலே பெற்ற அபிசேஷம் உங்களில் நிலைத்திருக்கிறது. ஒருவரும் உங்களுக்கு போதிக்க வேண்டுவதில்லை. அந்த அபிஷேகம் சகலத்தையும் குறித்து உங்களுக்கு போதிக்கிறது. அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்கு போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக. (1யோ.2:27)

**39. சாத்தான் செய்திக்குள் இருந்துக்கொண்டே களைகளை விதைத்து வருகிறான். சத்தியத்தை சீர்குலைத்துக்கொண்டு தேவனுக்கு தொண்டு செய்வதாக தன்னை காட்டிக்கொள்கிறான். முற்றிலுமாக தன் இருதயத்தின் நினைவுகளின் படியை நடந்து வருகிறான். பரிசுத்த ஆவியை இவன் பெறவில்லை. ஆதலால் பரிசுத்த ஆவியின் வழிநடத்தலும் இவனிடத்தில் இல்லை. இந்த களைகள் தான் சகோ.பிரன்காமை மேசியா என்று அழைக்கிறார்கள். ஆனால் சகோ.பிரன்காம் இது குறித்து : கே.ப.243, பத்தி.121-ல் அன்றொருநாள் ஒரு அம்மணி மிகவும் இனிமையாக எழுதியிருந்தார்கள். அவர்கள் சகோ.பிரன்காமை நீர் மேசியா அல்லவா? என்றார்கள். நான் இல்லை அம்மணி என்றேன். அடுத்து கே.ப.123, பத்திகள்.440-453 வரை தியானியுங்கள். அவர் என் தோளின்மேல் கைபோட்டு பில்லி**

**நீர் கடைசிகாலத்தின் தேவனுடைய மேசியா என்றும் உம்மிடம் எனக்கு கூறுவது எளிதாயிருக்கும் என்றார். நான் டாக் அப்படி செய்யாதீர்கள் என்றேன். தேவனுடைய ஆவி கிறிஸ்துவுக்குள் பூரணமாக, அளவில்லாமல் வாசம் செய்தது. அவர் சர்வசக்திமான். ஆனால் ஏனைய தீர்க்கதரிசகள் மோசே, எலியா, எலிசா, பிரன்காம் போன்றவர்கள் அந்த ஆவியின் ஒரு பாகம் மாத்திரமே. அவர்கள் தங்களுடைய ஏனைய சகோதரர்களைவிட சற்று அதிகமாக அபிஷேகம் பெற்றிருக்ககூடும். அவர்கள் தேவனுடைய ஆவியின் ஒரு பாகமே. யாராகிலும் நான் (பிரன்காம்) தேவன் என்று கூறுவார்களானால் அது தவறு என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் உங்களிடம் கூற விரும்புகிறேன். நான் கிருபையினால் இரட்சிக்கப்பட்ட ஒரு பாவி. ஆக பிரியமானவர்களே சகோ.பிரன்காமை கிறிஸ்து, மேசியா, தேவன் போன்ற அடைப்புக்களுக்குள் அழைப்பது பிசாசின் வஞ்சகம் ஆகும். அப்படிப்பட்ட வஞ்சகர்களில் ஒருவர் தான் ஸ்ரீலங்கா - எலியேசர் மற்றும் நம் மத்தியில் உள்ள பிரன்காம் கிறிஸ்து கூட்டத்தினர்.**

40. இந்த மாறுபாடுள்ள சந்ததியை சேர்ந்த எலியேசர் தனது உரைக்கப்பட்ட செய்தியே ஜீவஅப்பம் என்ற செய்தியின் முடிவில் ஏழாம் சபைக்கால தூதன் **கிறிஸ்து** அபிஷேகம் பண்ணப்பட்டவர், அவர்தான் இந்நாளின் மேசியா என தனது உபதேசத்தை செய்து, அவரது பித்தலாட்டத்தை விசுவாசியாதவர்கள் ஏற்கெனவே நியாயத்தீர்ப்புக்கு உட்பட்டுவிட்டார்கள் என பயமுறுத்துகிறான். **இதுகுறித்து சகோ.பிரன்காம் அவரிடம் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு அதாவது சகோ.பிரன்காமே நீர் இந்நாளின் மேசியா என்று பொதுவாக விசுவாசிக்கின்றனர். அது அப்படித்தானா? இல்லை, ஐயா! முதலாவதாக நான் மேசியா அல்ல, மேசியா இயேசு கிறிஸ்துவே. ஆனால் நாம் குட்டி மேசியாக்கள் (Messiahettes) நாம் ஒவ்வொருவரும். மேசியா என்றால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் என்று பொருள். தேவத்துவத்தின் பரிபூரணம் எல்லாம் சரீரபிரகாரமாக அவருக்குள் வாசமாயிருந்தது : எனக்குள்ளோ அவருடைய ஆவியின் ஒரு பாகமே வாசமாயிருந்தது. அதுவே உங்களுக்குள்ளும் வாசமாயிருந்தது. சில காரியங்களை அறிந்துக்கொள்ள, முன்கூட்டியே காண எனக்கு ஒரு வரம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் நான் இன்னும் உங்கள் சகோதரனே. நான் மேசியா அல்ல. நான் உங்கள் சகோதரன். மந்தைக்கு ஒரு மேய்ப்பன் மாத்திரமே. நான் மேசியா என்று உங்களிடம் கூறுவேனானால் நான் ஒரு பொய்யனாயிருப்பேன். நான் பொய்யனாயிருக்க விரும்பவில்லை. (கே.ப.265,266 பத்தி.232 நாள். 23.08.1964)**

41. சகோ.பிரன்காமை அபிஷேகம் பண்ணப்பட்ட மேசியா என்று கூறி இந்த பொய்யன், பேலியாளின் மகன் மக்களை வஞ்சிக்கிறான். ஆனால் அவர் தன்னுடைய பலவீனங்களைக் குறித்து என்னக்கூறுகிறார் என்பதற்கு சில எடுத்துக்காட்டுகளை கீழே தருகிறேன்.

(அ) தவறாயிருக்கின்ற காரியங்களை நான் அநேக முறைகளில் செய்திருக்கிறேன். (கே.ப.20. பத்தி. 41)

(ஆ) நான் எத்தனையோ காரியங்களில் தவறியிருக்கிறேன் என்றும் இன்னும் தவறிக்கொண்டிருக்கிறேன் என்றும் அறிவேன். (ஈஸ்டர் முத்திரை பக்கம்.70, பத்தி.3)

(இ) தேவனே இத்தனை ஆண்டுகளாக நான் செய்து வந்த தவறுகள் அனைத்தையும் மன்னிப்பீராக. என்னை மன்னியும். சபையே என்னை மன்னியுங்கள். என் ஊழியத்தில் நான் தவறினதை உணர்கிறேன். தேவனே அதற்காக என்னை மன்னியும். சபையே என் தவறுகள் அனைத்தையும் மன்னியுங்கள். (போட்டி பத்தி.36 நாள்.31-12-1962)

(ஈ) என் தவறுகளை தேவன் மன்னிக்க வேண்டும் என நான் ஜெபிக்கிறேன். நான் மனிதனானபடியினால் நானும் தவறு செய்கிறவனாயிருக்கிறேன். (மணவாட்டி மரம் திரும்ப அளிக்கப்படுதல் பக்கம்.6, பத்தி.2)

(உ) உமது ஊழியனின் தவறுகளை மன்னிப்பீராக. ஆண்டவரே நான் அநேக தவறுகளை செய்திருக்கிறேன். உமது ஊழியனின் தவறுகளை பாராமல். நான் பிரசங்கிக்க முயலும் உமது வார்த்தை மாத்திரமே பார்பீராக. (மணவாட்டி மரம் திரும்ப அளிக்கப்படுதல் பக்கம்.113, பத்தி.3)

(ஊ) நான் ஒரு மனிதப்பிறவி. நான் ஒரு மனிதன். (தேவதூதன் – மணவாட்டி ஊழியம் மொழிபெயர்ப்பு பத்தி.18, நாள்.2-11-1947)

(எ) மேற்கண்ட செய்தியில் சகோ.பிரன்காம் புற்றுநோயால் அவதிப்பட்ட ஒரு சகோதரிக்கு மூன்று தினங்களாக ஜெபித்த பிறகு பூரண சுகம் கிடைத்தது. 8 அல்லது 9 வயது சிறுவனுக்கு ஒரு மணி நேரமாக ஜெபித்த பிறகு அவனுடைய ஒரு கால் நான்கு அங்குலம் குறைவாக இருந்தது. அடுத்த காலை போல் சரியானது என்கிறார். அவர் கிறிஸ்துவானால் இவ்வாறு ஜெபிக்க தேவையா? மாறாக அவர் ஒரு மனிதன் என்பதையே அது நிருபிக்கிறது. இவ்வாறாக சகோ.பிரன்காம் தான் செய்த அநேக தவறுகளுக்காக கர்த்தரிடம் மன்றாடுகிறார். மன்னிப்பு கேட்கிறார். அவருக்கடுத்த காரியங்கள் யாவும் அவருடைய தாழ்மைக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது. இந்த நூற்றாண்டில் மிக்கவல்லமையாக தேவனால் எடுத்து பயன்படுத்தப்பட்ட ஒரு பாத்திரம், தேவனுக்கு முன்பாக தன்னை தாழ்த்துவது போல நான் என் ஊழியத்தின் பாதையில் எந்தவொரு ஊழியக்காரனையும் கண்டது இல்லை. மாறாக பந்தாகேஸ்களைத்தான் பார்த்திருக்கிறேன். இப்படியிருக்க இந்த பேலியாயின் மகன் அவரை அபிஷேகம் பண்ணப்பட்ட மேசியா என்கிறான். தனக்கு கேடு வரதக்கதாக வேதவாக்கியங்களை புரட்டுகிறான். ஆதலால் இவன் கேட்டின் மகனேயன்றி வேறுயாருமில்லை என்பதை அறிந்துக்கொள்ளுங்கள்.

42. **ஏழாம் சபைக்கால தூதனுடைய உரைக்கப்பட்ட செய்தி ஜீவ அப்பம் : எலியேசர்.** அடுத்து இந்த மணவாட்டியின் சத்தம் என்ற செய்திபத்திரிக்கையின் மெயின் தலைப்பு: **உரைக்கப்பட்ட செய்தியே ஜீவஅப்பம் –** (Spoken message is the Bread of Life) என எழுதுகிறார். இங்கு எழுதப்பட்ட / உரைக்கப்பட்ட தேவனுடைய வார்த்தைக்கும், சகோ.பிரன்காமினால் பிரசங்கிக்கப்பட்ட செய்திக்கும் உள்ள வித்தியாசம் தெரியாது. ஏதேதோ தன் மனம்போன போக்கில் காக்குவ் பிலிப்புவை போன்று பிசாசினால் வஞ்சிக்கப்பட்டு, வழிநடத்தப்பட்டு பிதற்றுகிறார் / எழுதுகிறார். கவனியுங்கள். தேவனுடைய உரைக்கப்பட்ட / எழுதப்பட்ட வார்த்தையிலிருந்துதான் செய்தி வரவேண்டும். வார்த்தை வேறு, செய்தி வேறு. கவனியுங்கள். ஒருவன் போதித்தால் அது செய்தியோ, பிரசங்கமோ, போதனையோ, உபதேசமோ அது எதுவாகயிருந்தாலும் தேவனுடைய வார்த்தையின் படியே தேவனுடைய வார்த்தையிலிருந்தே

வரவேண்டும். தியானியுங்கள். (1பேது.4:11) ஆக ஒருவனுடைய செய்தி தேவனுடைய வார்த்தையிலிருந்துதான் வரவேண்டும். தேவனுடைய வார்த்தைதான் ஜீவஅப்பம். ஒருவன் கொடுக்கும் செய்தி ஜீவஅப்பம் ஆகாது. தேவனுடைய வார்த்தையிலுள்ள ஜீவஅப்பம் ஒருவன் கொடுக்கும் செய்தியில் முழுமையாகயிருக்காது. ஆனாலும் இவன் அந்த செய்தியில் பக்கம்.3 முதற்பத்தியில் தன் தவறை தானே அறிந்து திருத்துகிறார்போல் தோன்றுகிறது. இங்கு தேவனுடைய உரைக்கப்பட்ட வார்த்தையை தவிர வேறெதுவுமே ஜீவனை கொடுக்க முடியாது. ஜீவன் வரக்கூடிய ஒரே வழி அவருடைய உரைக்கப்பட்ட வார்த்தையின் மூலம் மாத்திரமே என்று எழுதுகிறார். அதில் உண்மை உண்டு. ஆனால் அதில் வஞ்சகமும் உண்டு. ஏனென்றால் அவன் தேவனுடைய வார்த்தையைக்குறித்து எழுதாமல் சகோ. பிரன்காம் செய்தியைக் குறித்தே மறைமுகமாக எழுதுகிறார்.

43. இப்பொழுது ஜீவ அப்பம் – (Bread of Life) யார்? கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே ஜீவஅப்பம். (I am that Bread of Life) யோ.6:48. தேவனுடைய வார்த்தை இப்படியிருக்க எலியேசர் ஏழாம் சபைக்கால தூதனால் உரைக்கப்பட்ட செய்தியை ஜீவஅப்பம் என்று கூறுவது என்ன? உரைக்கப்பட்ட செய்தி என இவர் சகோ.பிரன்காம் பிரசங்கித்த செய்திகளையே கூறுகிறார் என்பது என் கணிப்பு. ஏழாம் சபைக்கால தூதன் பிரசங்கித்த செய்திகள் ஜீவஅப்பம் ஆக முடியுமா? மணவாட்டியின் சத்தம் தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்து கொண்ட மந்தையை தப்பவிடாத கொடிதான ஓநாயின் சத்தமாக அல்லவா கேட்கிறது.

44. மனிதனின் இயற்கை வாழ்விற்கு அப்பம் மற்றும் தண்ணீர் இன்றியமையாதது. இவை இரண்டும் மிக மிக அத்தியாவசியமான தேவைகள். திஸ்பியனாகிய எலியாவின் காரியத்தில் நாம் இதை காணலாம். அவனுக்கு உண்ண உணவும், குடிக்க தண்ணீரும் கொடுக்கப்பட்டது. (1இரா.17 அதி) இவ்வாறாக இஸ்ரவேல் ஜனங்களை அவருடைய வனாந்திர பிரயாணத்தில் அவர்களுக்கு அப்பமாக மன்னாவும், தண்ணீராக கன்மலையிலிருந்து தண்ணீரும் கொடுக்கப்பட்டது. (யாத்.16,17அதிகள்) அப்பம் என்றால் என்ன? அது ஆகாரம் / உணவு. இயேசு : ஜீவஅப்பம் நானே, பிதாக்கள் வனாந்திரத்திலே மன்னாவை புசித்தார்கள், மரித்தார்கள். நான் வானத்திலிருந்து இறங்கிய அப்பம். என்னை புசிக்கிறவன் மரியான். அவன் என்றென்றைக்கும் பிழைப்பான். நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார். கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை சிறுமைப்படுத்தி அவர்களை பசியினால் வருத்தி, மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல, கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்பதை அவர்களுக்கு உணர்த்தும்படிக்கு அவர்களும் அவர்களுடைய பிதாக்களும் அறியாதிருந்த மன்னாவினால் போஷித்தார்.(உபா.8:3) இதுகுறித்து நீங்கள் யாத்.16 அதியில் மேலும் விளக்கமாக தியானிக்கலாம். இதை புசித்தவர்கள் மரித்தார்கள். (யோ.6:4) ஆனால் மாம்சமான வார்த்தையை புசிப்பவர்கள் மரியாமல் இருக்கும்படி அவர் வானத்திலிருந்து இறங்கி அப்பமானார். (யோ.6:48,51)

45. இப்பொழுது ஜீவஅப்பத்தைக் குறித்து புரிந்திருப்பீர்கள். நம்முடைய அக்கிரமங்களுக்காவும், மீறுதலுக்காகவும் ஆதியில் இருந்த வார்த்தையாகிய (ஆவியாயும், ஜீவனாயும் இருந்தது யோ.6:63) தேவன் மாம்சத்தில் தோன்றி பாடுபட்டு மரித்து அடக்கம்பண்ணப்பட்டு உயிர்தெழுந்து நமக்கு ஜீவனை கொடுத்தார். ஆதலால் தான் இயேசு நானே ஜீவஅப்பம் என்கிறார். நானே வானத்திலிருந்து இறங்கின ஜீவஅப்பம். இந்த அப்பத்தை புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான். நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்கிறார். தியானியுங்கள். (யோ.6:48-50) அவருடைய மாம்சம் நமக்கு ஜீவனை கொடுக்கும் அப்பத்திற்கு ஈடாக ஒப்பிடப்பட்டுள்ளது. அவர் கொடுக்கும் ஜீவன் நித்திய ஜீவன். வார்த்தை மாம்சமானது. (யோ.1:14) அவருடைய மாம்சத்தை புசிப்பது வார்த்தையை புசிப்பதாகும். மனுஷன் அப்பத்தினாலே மாத்திரம் அல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான். (மத்.4:4) தேவனுடைய வார்த்தையில் ஜீவன் உண்டு. (எபி.4:12,1பேது.1:25) ஜீவ வார்த்தையாகிய இயேசு கிறிஸ்துவை சீஷர்கள் கண்களினால் கண்டார்கள். கைகளினால் தொட்டார்கள். (1யோ.1:1) ஆதலால் இந்த ஜீவஅப்பத்தோடு சகோ.பிரன்காமினால் கொடுக்கப்பட்ட செய்திகளை ஒப்பிடமுடியாது. எலியேசர் பிரன்காம் பிரன்காம் எனக்கூறிக்கொண்டு, அவருடைய செய்திகளை ஜீவஅப்பத்திற்கும், அவரை கிறிஸ்து, மேசியா என்றும் கூறுவது எத்தனை அபாண்டமானது? இது எல்லாம் மக்களை திசைதிருப்ப ஆட்டுத்தோலை போற்றிய ஓநாயின் தந்திரமான வஞ்சகமாக உள்ளது.

46. நம்முடைய கரத்தில் உள்ள வேதவாக்கியங்களை கொண்ட புத்தகம், தேவ ஆவியினால் அருளப்பட்டு பரிசுத்த வேதாகமம் என்று அழைக்கப்படுகிறது. இதனோடு ஒன்றையும் கூட்ட குறைக்க முடியாது. வானமும் பூமியும் ஒழிந்து போகும். ஆனால் இதிலுள்ள எந்தவொரு உறுப்பாகிலும் ஒழிந்து போகாது. சகோ.பிரன்காம் பிரசங்கித்த செய்திகளை இதற்கிணையாக பார்க்கலாமா? அன்று சாத்தான் ஏவாளை தந்திரமாக வஞ்சித்தது போல இன்று எலியேசர் வாயிலாக சபைக்கால தூதனுடைய செய்தியில் உள்ளவர்களை, பிசாசின் ஆவியை உடைய எலியேசர் வஞ்சிக்க பார்க்கிறார், திசை திருப்ப பார்க்கிறார். ஆனாலும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை இவரால் வஞ்சிக்க முடியாது.

47. உபவாசத்திற்கு பின் இயேசுவுக்கு பசி உண்டாயிற்று. பிசாசு அவரிடம் வந்து இந்த கல்லுகளை அப்பம் ஆகும்படி சொல்லி அதை சாப்பிடும் என்றான். அதற்கு இயேசு : மனுஷன் அப்பத்தினாலே மாத்திரம் அல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்றார். (மத்.4:2-4) கவனியுங்கள். இங்கு அப்பம் தேவனுடைய வார்த்தையோடு ஒப்பிடப்பட்டுள்ளது. ஆக ஆவிக்குரிய ரீதியில் நாம் பார்க்கும்போது அப்பம், வார்த்தை இது எல்லாம் இயேசு கிறிஸ்துவையே குறிக்கிறது. ஆதலால் ஏழாம் சபைக்கால தூதன் பிரசங்கித்த செய்திகளை ஜீவஅப்பம் என்பது மடமை. அறிவில்லாதவர்களுடைய வார்த்தை.

48. மேலும் யோ.6அதி தியானியுங்கள். இயேசு தான் வானத்திலிருந்து இறங்கியுள்ள ஜீவஅப்பம் என்கிறார். இதை புசிக்கிறவன் என்னென்றைக்கும் பிழைப்பான் என்கிறார். மனுஷகுமாரனுடைய மாம்சத்தை புசியாமல் இருந்தால், அவனுக்குள்ளே ஜீவன் இல்லை என்கிறார். அவருடைய மாம்சத்தை புசிப்பவனுக்கு நித்தியஜீவன் உண்டு. அவனை கடைசி நாளில் எழுப்புவேன். என்னுடைய மாம்சமே மெய்யான போஜனம், என் மாம்சத்தை புசிப்பவன் என்னில் நிலைத்திருக்கிறான். நான் அவனில் நிலைத்திருக்கிறேன் என்கிறார். நமக்கு இத்தனை சிலாக்கியங்களும் கிடைத்தது எதினால்? ஆதியிலே வார்த்தையிருந்தது அந்த வார்த்தை தேவனாயிருந்தது. வார்த்தை மாம்சமாகி, அதாவது தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டு மாம்சத்தில் பாடுபட்டு சரீரத்தை அடக்கத்திற்கு ஒப்புக்கொடுத்து மீண்டும் அதே சரீரத்தில் உயிர்தெழுந்து, மறுரூபமானதினால் தான். கிறிஸ்து மரித்தொரிலிருந்து எழுப்பப்பட்டது போல நாமும் புதிதான ஜீவன் உள்ளவர்களாய் நடந்துக்கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானனத்தினாலே கிறஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால் அவருடைய உயிர்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நம்முடைய பாவ மனுஷன் அவரோடே கூட சிலுவையில் அறையப்பட்டான். ஆதலால் நாம் பாவத்திற்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம். கிறிஸ்துவுடனே கூட நாம் மரித்தோமானால் அவருடனே கூட நாம் பிழைத்தும் இருப்போம். இதினால் என்ன? பாவம் இனி நம்மை மேற்கொள்ள மாட்டாது. பாவத்திலிருந்து விடுதலை. (ரோ.6அதியை தியானியுங்கள்)

49. அடுத்து ஏவாளை தன் தந்திரத்தினாலே வஞ்சித்த பிசாசு இந்த எலியேசர் மூலம் ஏழாம்சபைக்கால தூதனுடைய செய்தியில் உள்ள மக்களை வஞ்சித்து வருகிறான். **லூக்.17:30 ல் கூறப்பட்டுள்ள மனுஷகுமாரன் தோன்றினவராம்.** இவர் லூக்.17:30 யை சுட்டிக்காட்டி குமாரன் தோன்றுவார் (பாலகன் அல்ல) என்று தேவன் உரைத்துள்ளார். குமாரன் தோன்றினார். இக்காலத்திற்கு வாக்களிக்கப்பட்ட மனுஷகுமாரன் லூக்.17:30 சாயங்கால வெளிச்சம் என எழுதுகிறார். கவனியுங்கள் இங்கு இவர் மனுஷகுமாரன் தோன்றுவார் / தோன்றினார், அவர் இக்காலத்திற்கு வாக்களிக்கப்பட்ட மனுஷகுமாரன் என எவ்வளவு நாசுக்காக விளக்கம் கொடுக்கிறார். ஆனால் லூக்.17:30 என்ன கூறுகிறது? மனுஷ குமாரன் வெளிப்படும் நாளில். (When the Son of man is revealed) தேவ ஆவியினால் அருளப்பட்டுள்ள வார்த்தைக்கும், இந்த பிசாசின் மகன் எழுதியுள்ள வார்த்தைக்கும் உள்ள வித்தியாசத்தை உங்களால் புரிந்துக்கொள்ள முடிகிறதா? ஏசா.9:6 என்னக்கூறுகிறது? ஒரு பாலகன் (Child) பிறந்தார். எப்படி? தேவதூதன் மரியாளுக்கு பிரதியுத்திரமாக : பரிசுத்த ஆவி உன்மேல் வரும் உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும் ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தம் உள்ளது தேவனுடைய குமாரன் (Son of God) எனப்படும். (லூக்.1:35) அவள் (மரியாள்) தன் முதற்பேறான குமாரனை பெற்றாள். (லூக்.2:7) She brought forth her first born son. மரியாள் தனக்கு வாக்குதத்தம் பண்ணப்பட்ட பாலகனை பெற்றாள். இந்த பாலகன் யார்? தேவனுடைய ஒரே பேறான குமாரன். (யோ.3:16, 1யோ.4:9) இந்த குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டு போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு அவரை (பாலகனை) தந்தருளி / கொடுத்து (He gave his only begotten Son) உலகத்தில் அன்பு கூர்ந்தார். ஆக பிறந்த குழந்தையும் கொடுக்கப்பட்ட குமாரனும் ஒருவரேயன்றி இருவர் அல்ல. கவனியுங்கள். அவர் கன்னி மரியாளின் வயிற்றிலிருந்து பிறந்த குழந்தை / பாலகன் (Child) ஆகும். அதே வேளையில் பரலோகத்திலிருந்து இறங்கியவர். (யோ.3:13) நான் வானத்திலிருந்து இறங்கி வந்தேன். (யோ.6:38) மனுஷகுமாரன் தாம் முன்னிருந்த இடத்திற்கு ஏறி போகிறதை (யோ.6:62) நான் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு உலகத்திலே வந்தேன் : மேலும் உலகத்தை விட்டு பிதாவினிடத்திற்கு போகிறேன். (யோ.16:28) ஏறினார் என்பதினாலே அவர் அதற்குமுன்னே பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார் என்பது விளங்குகிறது அல்லவா? (எபே.4:9) வானத்திற்கு ஏறி இறங்கினவர் யார்? அவருடைய நாமம் என்ன? அவர் குமாரனுடைய நாமம் என்ன? ஆம் பிரியமானவர்களே உயர வானத்திலும் தாழ பூமியிலும் கர்த்தரே தேவன், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே தேவன். இவரை தவிர ஒருவரும் இல்லை. தியானியுங்கள். உபா.4:39 ஆக பிறந்த பாலகனும், கொடுக்கப்பட்ட குமாரனும் இயேசு கிறிஸ்துவேயன்றி வேறொருவரும் இல்லை. இவர் கொடுக்கப்பட்டவரேயன்றி தோற்றுவிக்கப்பட்டவர் அல்ல. இந்த பிசாசுவின் ஊழியக்காரன் தோற்றுவிக்கப்பட்டவர் என்று யாரை குறிப்பிடுகிறான் என்று புரிகிறதா? இவன் ஏழாம்சபைக்கால தூதனாகிய வில்லியம் மாரியன் பிரன்காமையே குறிப்பிடுகிறான். இவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை சேவிக்காமல், கர்த்தராகிய பிரன்காம் கிறிஸ்துவையே சேவிப்பவன் என்பதை நீங்கள் அறிந்துக்கொள்ளலாம். நிச்சயமாக இவன் ஆட்டுத்தோலை போர்த்திய ஒநாயே! இவன் தேவனை அறியாதவன். (2தெச.1:7) இவன் மேல் வரும் ஆக்கினைக்காக காத்திருக்கிறான்.

50. **எலியேசரின் வேறொரு சுவிசேஷமாகிய பிரன்காம் கிறிஸ்து :** தேவனிடத்திலிருந்து தோன்றி, அவருடைய வார்த்தையுடன் இணைந்துள்ள ஏதாவது ஒன்று எழும்பினால், அதைக் குழப்ப வேண்டுமென்பதற்கென்றே அநேக போலியான செயல்களை சாத்தான் செய்வான். ஏனென்றால் அவன் இப்பிரபஞ்சத்தின் தேவனாயிருக்கிறான். இது கடைசிக் காலத்தில் பரியாசக்காரர்கள் தோன்றுவார்கள் என உரைக்கப்பட்டுள்ள தீர்க்கதரிசனங்கள் நிறைவேறுதலாகும். இது பிசாசின் தந்திரமான செயல்பாடுகள். சகோ.பிரன்காம் பெயரைக் கூறிக்கொண்டே வேதவாக்கியங்களை புரட்டுகிறான். வெட்கம் இவனுக்கே உரியது. கள்ளகபடமுள்ள வேலையாட்கள். சத்தியத்தை சீர்குலைக்க மக்களை விசுவாசத்திலிருந்து வழிவிலகச் செய்ய வேறொரு சுவிசேஷத்தை கொண்டு வந்து, ஒன்றான மெய்த்தேவனாகிய பிரன்காம் கிறிஸ்து என்று சகோ. பிரன்காமை அழைக்கிறான். அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷனுக்கு ஒப்பாக மாற்றினான். தேவனுடைய சத்தியத்தை இவன் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரை தொழுது சேவியாமல், சிருஷ்டியை தொழுது சேவிக்கிறான். தேவனை அறியும் அறிவை பற்றிக்கொண்டிருக்க இவனுக்கு மனதில்லாதிருத்தபடியால் தேவன் இவனை கேடான சிந்தனைக்கு ஒப்புக்கொடுத்தார். ஆதலால்தான் நானும் என் வீட்டாருமோவென்றாள் கர்த்தராகிய பிரன்காம் கிறிஸ்துவையே

சேவிப்போம் என்கிறான். கர்த்தத்துவத்தை அசட்டை பண்ணி, மகத்துவத்தை தூஷிக்கிறான். இந்த உபதேசம் குறித்து சகோ. பிரன்காம் :

(அ) முதலாவதாக நான் மேசியா அல்ல. மேசியா இயேசு கிறிஸ்துவே. நாம் குட்டி மேசியாக்கள். நாம் ஒவ்வொருவரும் மேசியா என்றால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் என்று பொருள். தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப் பிரகாரமாக கிறிஸ்துவுக்குள் வாசமாய் இருக்கிறது. எனக்குள் அவருடைய ஆவியின் (பரிசுத்த ஆவியின்) ஒரு பாகமே வாசமாய் உள்ளது. அதுவே உங்களுக்குள்ளும் வாசமாய் உள்ளது. நான் மேசியா என்று உங்களிடம் சொல்வேனானால் நான் ஒரு பொய்யனாய் இருப்பேன். பாருங்கள் நான் பொய்யனாய் இருக்க விரும்பவில்லை. (கே.ப.2 : 19, பக்.88, பத்தி.232, நாள்.23-8-14964) அப்படியானால் சகோ.பிரன்காம் கிறிஸ்து என அறிக்கையிடும் யாவரும் பொய்யர், ஓயாப் பொய்யர், கிரேத்தாதீவார் ஆகும். தீத்.1:11,12.

(ஆ) என்னை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் நபராகச் செய்வது அந்திக்கிறிஸ்து. கே.ப.2:21, பக்கம்.36, பத்தி.88, நாள். 30-8-1964. ஆக பிரியமானவர்களே, கர்த்தராகிய பிரன்காம் கிறிஸ்து என்னும் கோஷம் அந்திக்கிறிஸ்துவினுடையதே! பிசாசினுடையதே!! சாத்தானுடையதே!!! அவனை எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது அவன் ஓடிப்போவான்.

(இ) நான் ஊழியத்தைவிட்டு விலகுகிறேன் என்று கூறும்படி நிர்ப்பந்தப்படுத்தப்பட்டுள்ளேன். ஏனென்றால் ஜனங்கள் மத்தியில் ஒரு காரியம் எழும்பியுள்ளது. அது என்னவெனில் நான் ஊழியக்காரன் அல்லது சகோதரன் என்று அழைக்கப்படும் அடைப்புக் குறியிலிருந்து எடுக்கப்பட்டு இயேசு கிறிஸ்து என்றழைக்கப்படுகிறேன். அவ்விதமாக என்னை அழைப்பது அந்திக்கிறிஸ்துஎன்னும் பட்டத்தை எனக்கு சூட்டிவிடும். நான் அவரை ஒரு அந்திக்கிறிஸ்துவாக சந்தித்து, அவரை விட்டு அகன்றிருப்பதற்கு முன்னால் ஊழியத்தை விட்டு விலகி ஓடிப் போனவனாகவே சந்திக்க விரும்புகிறேன். (**இயேசு கிறிஸ்துவை பற்றி வெளிப்படுத்தல்,** 2ம் பாகம், தலை நசுக்கப்பட்ட சர்ப்பம், புதிய பதிப்பு, பக்கம்.1316, பத்தி.25, நாள்.11-6-1961) ஆக அக்கிரமக்காரர்கள் அவரை கிறிஸ்து என அழைக்கிறார்கள். ஆனால் அவரோ அதை மறுக்கிறார். ஆதலால் பிரன்காம் கிறிஸ்து கோஷத்தினர் உண்மையான வசனத்தை நான்றாய் பற்றிக்கொள்ளாதவர்கள். ஆரோக்கியமான உபதேசத்தை பற்றிக்கொள்ளாமல், வீண் பேச்சுக்காரர்களும் மனதை மயக்குகிறவர்களும், முழு குடும்பத்தை தகாதவைகளை போதித்து கவிழ்த்து போடுகிறவர்களுமாய் இருக்கிறார்கள். அப்.பவுல் இவர்களை சபிக்கப்பட்டவர்கள் என அழைக்கிறான். ஆதலால் இவர்களை விட்டு விலகுங்கள். வேறொரு சுவிசேஷம் கட்டுக்கதைகளுக்கும், சத்தியத்தை விட்டு விலகுகிற மனுஷருடைய கற்பனைகளுமாய் இருக்கிறது. தீத்.1:10-16.

(ஈ) அபிஷேகம் பண்ணப்பட்ட கிறிஸ்து என்று அழைக்கப்படும் நிலைக்கு நான் வரும்போது, அது என்னால் தாங்கிக்கொள்ள முடியாத காரியமாயிருக்கிறது….. ஜனங்கள் மேல் எனக்கு இருந்த செல்வாக்கெல்லாம் போய், அது ஒரு அந்திக் கிறிஸ்துவின் காரியம் என்பதாகிவிடும். (தலை நசுக்கப்பட்ட சர்பம். பத்தி.34,35) இப்பொழுது கவனியுங்கள் சகோ. பிரன்காம் மீது மக்கள் கொண்டிருக்கும் செல்வாக்கை ஜோர்ஜ் எலியேசர் சீர்குலைத்துக்கொண்டு இருப்பதினால் இவன் ஒரு பிசாசே, பிசாசின் மகனே.

(உ) நான் கிறிஸ்து என்று கூறுகிறதான எல்லாவித கடிதங்களும், தொலைபேசி அழைப்பு மூலம் கூறுவதும் கடந்த சில நாட்களாக எனக்கு வந்துள்ளன. சகோதரரே அது பிசாசினுடைய, பயங்கரமான, வெட்கக்கேடான தேவபக்தியற்ற ஒரு பொய்யாகும். நான் உங்கள் சகோதரன் என்பதை உணருங்கள். (தலை நசுக்கப்பட்ட சர்பம். பத்தி.30) எலியேசர் ஒரு தேவபக்தியற்றவன்.

(ஊ) நான் கிறிஸ்து என்னும் போதகம் சத்தியத்திற்கு விரோதமான நெறி பிறண்டதாக இருக்கிறது. அது பொய்யானதாக இருக்கிறது. கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால் அது முறைகேடானதாக இருக்கிறது. அப்படிப்பட்டதொரு எந்த விதமான சம்பந்தமும் வைத்துக்கொள்ளாதீர்கள். நான் உங்கள் சகோதரன். (தலை நசுக்கப்பட்ட சர்பம். பத்தி.44) ஆதலால் என் சகோதரர்களே நீங்கள் ஜோர்ஜ் எலியேசருடன், பிரன்காம் கிறிஸ்து கோஷ்டியினருடன் எந்த தொடர்பும் வைத்துக்கொள்ளாதீர்கள் என சகோ. பிரன்காமே உங்களுக்கு அறிவுரை கூறுகிறார். அவர் அறிவுரையில் நிலைத்திருங்கள்.

(எ) நீங்கள் என்னை ஒரு ஊழியக்காரன் என்று நம்பினதுண்டானால் ஞாபகம் இருக்கட்டும், அந்த உபதேசம் தவறு, அது பொய். கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், அது தப்பு, அதனுடன் சேராதே. நான் உங்களுடைய சகோதரன். தேவனே சத்துருவினால் அக்கள்ள போதகத்தை எடுத்துக்கொண்டு எங்களது சகோதர சகோதரிகளையும் அணுகி இருக்கிறான், அவன் இனிமேலும் நிலைத்திருக்காதபடி சாவுக்கேதுவான காயத்தை பெற்றுக்கொள்ளட்டும். அது அப்படியே மரித்துப்போகும். (தலை நசுக்கப்பட்ட சர்பம். பத்தி.46) எலியேசர் நம்முடைய சத்துருவாகிய சாத்தான்.

இந்த உபதேசம் சகோ. பிரன்காம் ஊழியக்காலத்திலும் இருந்தது. அவருடைய ஊழியத்தில் நடக்கும் அற்புதங்களை கண்ட மக்கள் நிச்சயமாக அவரே தேவன் என்று விசுவாசித்தார்கள். ஆதலால் வில்லியம் பிரன்காம் எங்கள் கர்த்தர் என்று அழைத்தார்கள். வில்லியம் பிரன்காம் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றார்கள். அவரிடம் வந்து தங்கள் பாவங்களையும் தவறுகளையும் அறிக்கையிட்டார்கள். ஆனால் அவர் அதை கடிந்துக் கொள்ளுகிறார்.

51. **சகோ. பிரன்காம் மனுஷ குமாரன் என்ற உபதேசம் எலியேசரின் வேறொரு சுவிசேஷம் :** பொய்யை கர்ப்பந்தரித்து, அதிலே பிறந்து வளர்ந்த இந்த பொய்யர்களின் மற்றொரு உபதேசம் சகோ.பிரன்காம் மனுஷகுமாரன் என்பது. ஆனால் இயேசுதான் மனுஷகுமாரன் என்பதற்கு வேதவாக்கியங்களிலிருந்து கீழ்க்கண்ட ஆதாரங்களை தருகிறேன்.

(அ)இயேசு: பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறிய வேண்டுமென்று சொல்லி திமிர்வாதகாரனை நோக்கி : நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு உன் வீட்டிற்குப் போ என்றார். மத்.9:6. ஒருவனுடைய பாவங்களை மன்னிக்க சகோ. பிரன்காமிற்கு அதிகாரம் இருந்ததா? இல்லை.

(ஆ)இயேசு: மனுஷகுமாரன் போஜனபானம் பண்ணுகிறவராய் வந்தார்: அதற்கு அவர்கள் இதோ, போஜனப்பிரியனும், மதுபானப் பிரியனுமான மனுஷன், ஆயக்காரருக்கும், பாவிகளுக்கும் சிநேகிதன் என்கிறார்கள் என்றார். மத்.11:19.
(இ)இயேசு: தியானியுங்கள் மத். 12:1-8 வசனங்களை. இங்கு இயேசு தான் மனுஷகுமாரன் என்பதை உறுதிப்படுத்துகிறார்.
(ஈ)இயேசு: மனுஷக்குமாரன் பூமியின் இருதயத்தில் மூன்று பகல்கள் மூன்று இரவுகள் இருப்பார் என்று தமது மரணம், அடக்கம், உயிர்தெழுதல் குறித்து கூறுகிறார். மத்.12:40. சகோ. பிரன்காமுடைய மரணம், அடக்கம், உயிர்தெழுதல் குறித்து என்ன?
(உ)இயேசு: மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள். மத்.16:13.
(ஊ)இயேசு: மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும் வரைக்கும் இந்த தரிசனத்தை ஒருவருக்கும் சொல்ல வேண்டாம் என்று கட்டளையிட்டார். மத்.17:9.
(எ)இயேசு: அவர்களை நோக்கி மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவார் என்றார். மத்.17:22.
(ஏ)இயேசு: மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும் என்றார். மத்.24:30.
(ஐ)இயேசு: நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார் என்றார். மத்.24:44.
(ஒ)இயேசு: மனுஷகுமாரன் தமது மகிமைப் பொருந்தினவராய் சகல பரிசுத்த தூதரோடும்கூட வரும்பொழுது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார் என்றார். மத்.25:31.
(ஓ)இயேசு: மனுஷகுமாரன் சிலுவையில் அறையப்படுவதற்கு ஒப்புக்கொடுக்கப்படுவார் என தம்மைக் குறித்து கூறினார். மத்.26:2.
(ஔ)இயேசு: எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக்கொடுக்கப்படுகிறாரோ அந்த மனுஷனுக்கு அய்யோ என்றார். மத்.26:24.
(ஃ )இயேசு: இதோ மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிற வேளை வந்தது என தம்மைக் குறித்துக் கூறினார். மத்.26:45.
இவ்வாறாக தான் மனுஷகுமாரன் என்பதை இயேசு உறுதிப்படுத்தினார். ஆதலால் இயேசு மனுஷகுமாரன் என்ற ஸ்தானத்தில் வேறொருவரை கொண்டுவருவது வேறொரு சுவிசேஷம். மேலும் இயேசுதான் மனுஷகுமாரன் என்பதற்கு வேதவாக்கியங்களில் சுமார் 47 வசன ஆதாரங்கள் உண்டு என அறிய வந்தேன்.

52. **பிரன்காம் மனுஷகுமாரன் என்று உபதேசிக்கும் இவர்களுக்கு சகோ.பிரன்காம் என்ன அறிவுரை கூறுகிறார்?** நான் அந்த மனுஷகுமாரன், (The Son of Man) அல்ல. ஆனால் ஒரு மனுஷகுமாரன். (A son of man) இவ்விரண்டிற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. இயேசு கிறிஸ்து : மனுஷகுமாரன், தேவகுமாரன், தாவீதின் குமாரன். நான் அந்த அபிஷேகிக்கப்பட்ட மனுஷகுமாரன் அல்ல. என்னை உங்கள் சகோதரன் என்று அழைத்துக்கொள்வதை தவிர வேறு எந்த பெயரினாலும் என்னை அழைத்துக்கொள்ள விரும்பவில்லை. (கே.ப.2:20, பக்கம்.43, பத்தி.101,103, பக்கம்.45, பத்தி.104, நாள்.23-8-1964) மனுஷகுமாரன் என்றால் அது கிறிஸ்து. தூதன் மனுஷகுமாரன் அல்ல. ஆனால் அவரால் அனுப்பப்பட்ட தூதன் (**கடைசி காலத்தில் ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளவர்கள்,** பக்கம்.94, பத்தி.269, நாள்.25-7-1965). When the Son of man is revealed. மனுஷகுமாரன் வெளிப்படும் நாளில், லூக்.17:30 தேவன், தம்முடைய குமாரனை பவுலில் வெளிப்படுத்தினார். கலா.1:16. புறஜாதிகளிடத்தில் சுவிசேஷத்தை எடுத்துச்செல்வதற்காக. அதுபோன்று லூக். 17:30 நிறைவேற மனுஷகுமாரன் தன்னை சகோ.பிரன்காமில் வெளிப்படுத்தினார். ஆனால் அவர் மனுஷகுமாரன் அல்ல. மனுஷகுமாரன் வெளிப்படும் அதே நாளில் ஏழாம் தூதன் செய்தி முத்திரைகளை திறக்கும். ஏழாம் தூதன் மனுஷகுமாரன் அல்ல. ஆனால் அந்த தூதன் மனுஷகுமாரனை வெளிப்படுத்துகிறார். (**கடைசி காலத்தில் ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளவர்கள்.** பக்கம்.91, பத்தி.260, நாள்.25-07-1965). பாருங்கள் சகோ.பிரன்காம் தான் மனுஷகுமாரன் அல்ல அல்ல என்று தனது செய்திகளில் கூறிவருகிறார். ஆனால் ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்தவர்கள் வேறொரு சுவிசேஷத்தைக் கொண்டு வந்து சகோ.பிரன்காம்தான் மனுஷகுமாரன் என்கிறார்கள். அதோடு மட்டுமல்லாது இறந்துபோன பாலாசீர்லாறி, அவரது சீஷன் வேலூர் தாமசையும் மனுஷகுமாரன் என்று கூறுமளவிற்கு அவர்கள் இருதயம் அந்நாட்களில் மேட்டிமையானது.

53. சகோ.பிரன்காம் தன்னை தீர்க்கதரிசி, ஏழாம் சபைக்காலதூதன் என அழைத்துக்கொள்கிறாரேயன்றி தன்னை ஒருபோதும் கிறிஸ்து / மேசியா என்று அழைக்கவில்லை. ஆனால் இந்த வேதபுரட்டனாகிய மதிகெட்டவன் தான் அவரை கிறிஸ்து மேசியா என்று அழைக்கிறான்.
(அ) ஏழாம் தூதனின் செய்தி ஏழு முத்திரைகளின் கீழ் அடங்கியுள்ள தேவரகசியங்களை வெளிப்படுத்துவதாகும். தேவரகசியங்கள் தேவனுடைய வார்த்தையாய் இருக்குமானால் அந்த வார்த்தை வருவதற்காக ஏழாம் தூதன் தீர்க்கதரிசியாக இருக்க வேண்டும். தேவனுடைய வார்த்தை எப்பொழுதுமே தீர்க்கதரிசிகளிடத்தில்தான் வருகிறது. (ஏழு சபையின் காலங்களுக்கும் ஏழு முத்திரைகளுக்கும் இடையேயுள்ள பிளவு பக்கம்.166, 167 பத்தி.214,216 நாள்.17-3-1963)
(ஆ) சகோ.பிரன்காம் தன்னை ஒரு தீர்க்கதரிசி என்று மட்டுமே அழைக்கிறார். (மலையின் மேல் உள்ள கவர்ச்சி என்ன? பத்தி.172, நாள்.25-7-1965)
(இ) அவளது செவிகள் முழுவதுமாக திறக்கப்படும். இது கர்த்தர் உரைக்கிறதாவது ஆகும். அது நிகழவில்லையானால் என்னை கள்ளத்தீர்க்கதரிசி என்று அழையுங்கள். (தேவதூதன் – மணவாட்டி ஊழியம் மொழிபெயர்ப்பு பத்தி.29 நாள்.2-11-1947)
**எலியேசர் கிரியைகளினால் அவரை அறிந்திருந்தார்கள்** என்ற தன்னுடைய செய்தியில் எந்த உண்மையான தீர்க்கதரிசியும் நேரடியாக அவர் ஒரு தீர்க்கதரிசி என கூறமாட்டான். வார்த்தை தன்னை அடையாளம் காட்டும்படி செய்வான். அவன் தன்னை நேரடியாக தீர்க்கதரிசி என்று கூறினால் அவன் உண்மையான தீர்க்கதரிசி இல்லை என

பக்கம்.14ல் எழுதுகிறான். அப்படியானால் சகோ.பிரன்காம் ஒரு கள்ளதீர்க்கதரிசியா? ஒரு கள்ளதீர்க்கதரிசியையா இந்த மதிகேடன் மேசியா, சர்வ வல்லமையுள்ள தேவன் என அழைக்கிறான்? அடுத்து மோசே தன்னை போல் ஒரு தீர்க்கதரிசி என இயேசுவை முன் அறிவிக்கவில்லையா? (உபா.18:15) எலியா தன்னை ஒரு தீர்க்கதரிசி என்று அழைக்கவில்லையா? (1இரா.18:22, 19:14) நண்பனே உனக்கு கண்கள் இருந்தும் நீ குருடாக்கப்பட்டிருக்கிறாய். ஆதலால்தான் சகோ.பிரன்காமை மேசியா என்று அழைக்கிறாய்.

54. முடிவாக இந்த கேட்டின் மகனுக்கு இவன் இக்காலத்திற்குரிய மேசியா சகோ.பிரன்காம் என்று போதிக்கும் அவரே அவனுக்கு கொடுக்கும் அறிவுரை என்னவென்றால் : லூக்கா.17:22 முதல் 30 வசனங்கள் அவர் லோத்தினுடைய நாட்களில் நடந்தது போல சோதோம் எரிவதற்கு முன்பு மனுஷகுமாரன் திரும்பவரும்போது, மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும் என்று கூறியுள்ளார். ஓ! தேவ வசனங்களை பாருங்கள் மனுஷகுமாரன் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிற இயேசு கிறிஸ்து. (மலையின் மேல் உள்ள கவர்ச்சி என்ன? பத்தி.117,118) இப்பொழுதாவது இந்த குருடனுக்கு கண்கள் திறக்காதா? தேவன் இவன் மனதை கடினப்படுத்தி இவன் இருதயத்தை உரங்கொள்ள பண்ணியிருக்கிறார். லூக்.17:30 மனுஷகுமாரன் யார்? அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிற இயேசு கிறிஸ்து. (எபி.13:8) என்பதை இவனால் புரிந்துக்கொள்ள முடியவில்லையே. அந்த மனுஷகுமாரனை சகோ. பிரன்காம் வெளிப்படுத்துகிறாரேயன்றி அவர் அந்த மனுஷகுமாரன் அல்ல.

55. **இயேசுவைவிட பிரன்காம் அநேக அற்புத அடையாளங்களை செய்தார் என பிதற்றுகிறான் இந்த எலியேசர்.** இப்பொழுது இந்த கேட்டின் மகன் ஜோர்ஜ் எலியேசர் இயேசு செய்த அற்புதங்களையும் மோசே செய்த அற்புதங்களையும் சகோ.பிரன்காம் செய்த அற்புதங்களுடன் எவ்வாறு விமர்சிக்கிறான் என்பதை கவனியுங்கள். ஐந்து வாற்கோதுமை அப்பங்களும், இரண்டு மீன்களும் இருந்தன. இந்த மூலப்பொருட்களிலிருந்து ஒரு அப்பத்தை மற்றொரு அப்பம், ஒரு மீனிலிருந்து மற்றொரு மீன் இப்படியாக பெருக பண்ணி ஐயாயிரம் பேரை போஷித்தார். அதாவது ஒன்றிலிருந்து ஒன்று பெருகியது. மோசே புழுதியை கையிலெடுத்து காற்றில் தூவி, வண்டுகள் உண்டாககடவது என்றான். ஆக ஒன்றிலிருந்து ஒன்று உண்டானது. ஆனால் இந்த கடைசி நாளில் அவர் ஒன்றையும் வைத்திராமலே வார்த்தையை உரைத்து அது அங்கிருக்கும் சொல் என்றார். எதுவுமே இல்லாமலே அது அங்கு உண்டாயிற்று. அவர் தொடக்கத்தில் அணில்களை கொண்டிருக்கவில்லை. அங்கு ஒன்றுமே இல்லை. அவர் உண்டாக கடவது என்றார். அது உண்டாயிற்று. ஆனால் முதலில் ஆதியாகமத்தின் தேவன் ஒன்றுமில்லாமையில் இருந்து ஒன்றை உருவாக்குகிறார். அவர் சிருஷ்டிப்பின் கர்த்தர் எனவும் எழுதுகிறான். இந்த மடையன் சகோ.பிரன்காமிற்கு இங்கு சொல் என்று கூறியவர் யார் என்பதை மறந்துவிட்டான். பிரன்காமிற்கு தேவன் சொல் என்று கூறவே அவர் கூறினார், அற்புதங்கள் நடந்தது. தரிசனங்களினால் கண்டதை செயலுக்கு கொண்டு வந்தார். ஆதலால் இதில் சகோ.பிரன்காமிற்கு மேன்மை ஒன்றும் இல்லை. சகோ. பிரன்காம் தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்படிகிறார். அவர் கீழ்படிந்ததினால்தான் அவரைக்கொண்டு தேவன் அற்புத அடையாளங்களை நடப்பித்தார். அவர் கீழ்படியாதிருந்தால் அற்புத அடையாளங்கள் எதுவுமே அவருடைய ஊழியத்தில் நடந்திருக்காது. தேவனால் அன்றி அவரால் ஒன்றும் செய்ய இயலாது.

56. இவன் வேதவாக்கியங்களை சரியாக தியானிக்கவில்லை. ஏனென்றால் அவையாவும் அவனுக்கு மறைபொருளாக இருந்து வருகிறது. அது மோசேயாக இருகட்டும், சகோ.பிரன்காமாக இருகட்டும், கர்த்தர் அவர்களிடம் உரைத்ததைதான் அவர்கள் செய்து அற்புதங்களை நடப்பித்தார்கள். அவர்களாகவே எதுவும் செய்யவில்லை. ஏனென்றால் அவர்கள் அதை தங்களுடைய சுய பலத்தினால் செய்யமுடியாது. கவனியுங்கள் கர்த்தர் மோசேயை நோக்கி உன் கையை வானத்திற்கு நேராக நீட்டு என்றார். மோசே தன் கோலை வானத்திற்கு நேராக நீட்டினான். அப்பொழுது கர்த்தர் இடி முழக்கங்களையும், கல் மழையையும் அனுப்பினார். (யாத்.9:22,23) பாருங்கள் தொடக்கத்தில் அங்கு ஒன்றுமேயில்லை. மோசே தன் கோலை வானத்திற்கு நேராக நீட்டினான். ஒன்றுமில்லாதிருந்த நிலையில், அவன் தன் கோலை நீட்டியவுடன் இடி முழக்கங்கள், கல் மழை உண்டாயிற்று. இந்த பேலியாளின் மகன் கர்த்தர் மோசேயை கொண்டு நடப்பித்த அற்புத அடையாளங்களின் மறுபக்கத்தை காண தவறிவிட்டான். ஆதலால் தான் மோசேயை விட சகோ.பிரன்காம் ஊழியத்தை மேன்மைபடுத்தி எழுதிகிறான். இதுவும் இவனிடத்தில் குடிகொண்டிருக்கும் பொல்லாங்கனுடைய செயலே. அன்று மோசேயை கொண்டு கர்த்தர் நடப்பித்த அற்புத அடையாளங்களை சகோ.பிரன்காம் ஊழியத்தில் செய்யவில்லையே. அன்று பேதுரு நிழல்பட்டு குணமானவர்கள் உண்டு. பேதுருவிடம் பொய் சொல்லி சடுதியில் தங்கள் உயிரை விட்ட அனனியா, சப்பிராள் உண்டே? இப்படிப்பட்ட அற்புதங்கள் சகோ.பிரன்காம் ஊழியத்தில் நடைப்பெற்றதாக நான் காணவில்லை. காரியம் என்னவென்றால் கர்த்தர் தமது கிருபையுள்ள வசனத்திற்கு சாட்சியாக அடையாளங்களும் அற்புதங்களும் அவர்களின் கைகளினால் செய்யும்படி அநுக்கிரகம் பண்ணினார். (அப்.14:3) இதுதான் உண்மை. இவ்வாறாக தேவன் பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் அவர்களை கொண்டு நடப்பித்து அவைகளாலே அவரை வெளிப்படுத்தினார், அதாவது மெய்பித்துகாட்டினார். இதுதான் உண்மை ஆதலால் சகோ.பிரன்காமை குறித்து மேன்மை பாராட்டுவது பிசாசின் தந்திரம். மக்களது விசுவாசத்தை சீர்குலைக்க, அவர்களை திசைதிருப்ப சாத்தான் ஜோர்ஜ் எலியேசர் மூலம் கொண்டுள்ள முயற்சி, அதற்கு நீங்கள் பலிகடா ஆகிவிடாதீர்கள்.

57. **சகோ. பிரன்காம் செய்திக்கு வெளியே ஜீவனை பெறமுடியாது என்று இந்த மதிகேடன் ஜோர்ஜ் கூறுகிறான்.** அடுத்து இவனுடைய வஞ்சகமான கபடமுள்ள போதனைகளில் மற்றொன்றை கவனியுங்கள். சகோ.பிரன்காம் பிரசங்கித்த செய்திக்கு வெளியே இருந்து எதுவும் ஜீவனை பெறமுடியாது. வித்து மாத்திரமே செய்தியிலிருந்து ஜீவனை பெறும். இவனுடைய இதுபோன்ற உபதேசங்கள் யாவும் பிசாசுனுடையதே. இவன் மார்க்கம் தப்பி அலைகிற நட்சத்திரமாக இருந்து வேதவாக்கியங்களை கவிழ்த்து போடுகிறான். இவனுடைய உபதேசங்கள் யாவும்

சத்தியத்திலிருந்து மக்களை திசைதிருப்பும் உபதேசங்களாக காணப்படுகிறது. நலமல்லாத வழியிலே தன் நினைவுகளின்படி நடக்கிற குருட்டாட்டமான சந்ததியாக இருக்கிறான். நாம் நித்திய ஜீவனை பெறுவதற்கு இயேசு கூறும் வழி : மத்.19:17-24, 27:35 ல் கூறப்பட்டுள்ளது. மேற்கண்ட வசனங்களின் படி தங்களை காத்துக் கொள்கிறவர்கள் நித்திய ஜீவனை அடைவார்கள். தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுபோகாமல் நித்திய ஜீவனை அடைவான் என்றார். (யோ.3:15) வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள், அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு என்கிறார். (யோ.5:39) என் மாம்சத்தை புசித்து, என் இரத்தத்தை பாணம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு என்கிறார். (யோ.6:54) பேதுரு : ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே என்றான்.(யோ.6:68) இந்த நித்திய ஜீவ வசனங்கள் ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிறது. (யோ.6:63) நாம் தேவனுடைய வார்த்தைகளினால் மாத்திரமே போதனை அடைய வேண்டியவர்களாயிருக்கிறோம். (உபா.33:3) ஒன்றான மெய்த் தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன். (யோ.17:3) நித்திய ஜீவனுக்கென்றே நியமிக்கபட்டவர்கள் மாத்திரமே தேவனுடைய வசனத்தை மகிமைபடுத்தினார்கள். (அப்.13:48) சோர்ந்து போகாமல் நற்கிரியைகளை செய்து மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிக்கிறார். (ரோ.2:7) கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் நித்திய ஜீவனுக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது. (ரோ.5:21) நீங்கள் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு தேவனுக்கு அடிமைகளானதினால் பரிசுத்தமாகுதல் உங்களுக்கு கிடைக்கும் பலன், முடிவோ நித்திய ஜீவன். (ரோ.6:22) விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை போராடு. நித்திய ஜீவனை பற்றிக்கொள். (1தீமோ.6:12) தேவனுடைய கிருபையினாலே நாம் நீதிமானாக்கப்பட்டு, நித்திய ஜீவன் உண்டாக்கும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்தரராகத்தக்கதாக பரிசுத்த ஆவியை நம்மேல் சம்பூரணமாய் பொழிந்தருளினார். (தீத்.3:6,7) நித்திய ஜீவனை அடைவோம் என்பது தேவன் நமக்கு செய்த வாக்குதத்தம்.(1யோ.2:25) உங்களை வஞ்சிக்கிறவர்களை குறித்து இவைகளை உங்களுக்கு எழுதினேன். முதலாவதாக தேவன் நமக்கு நித்திய ஜீவனை தந்திருக்கிறார். அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறது. (1யோ.5:11) இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார். ஆக சகோ.எலியேசர் கூறுவது போன்று பிரன்காம் பிரசங்கித்த செய்திக்கு வெளியேயிருந்து எதுவும் ஜீவனை பெறமுடியாது. வித்து செய்தியில் ஜீவனை பெறவேண்டும் என்பதெல்லாம் வேதவாக்கியங்களுக்கு புறம்பானது, மாறுபாடானது. வஞ்சகமான போதனை மக்களை திசை திருப்பும் சாத்தானின் உபதேசங்கள். நித்திய ஜீவனை பெறுவதற்கு பதிலாக அதை இழந்து போவதற்கு எலியேசர் வழிகாட்டுகிறான். ஆதலால்தான் இவன் சகோ. பிரன்காம் செய்தி புத்தகத்தை கைகளில் கொண்டுதான் பிரசங்க பீடத்தில் நின்று பிரசங்கிக்க வேண்டும் என்கிறான்.

58. மேலும் இந்த மடையனுக்கும் ஆப்பிக்கா காக்குவ் பிலிப்புவுக்கும் வேற்றுமையில்லை. இருவரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள். ஜோர்ஜ் எலியேசர் ஊழியர்களுக்கு கொடுக்கும் ஆலோசனையாவது : அவர்கள் பிரசங்க பீடத்திற்கு ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்தி புத்தகத்துடன் போய் அதிலிருந்து எடுத்து பிரசங்கிக்க வேண்டும் என்பதாகும். கேட்டின் மகனாகிய இவன் தான் கெட்டதோடு மாத்திரம் அல்ல மற்றவர்களையும் தன் வசப்படுத்த பார்க்கிறான். நமது கரத்தில் உள்ள பரிசுத்த வேதாகமத்திலிருந்து எந்தவொரு வசனத்தையாகிலும் நாம் எடுத்து போடவும் கூடாது அவைகளோடே எதையும் கூட்டவும் கூடாது. இதுகுறித்து நீங்கள் வெளி. 22:18,19, உபா.12:32, நீதி.30:5,6 வசனங்களை தியானிக்கலாம். மேலும் வானமும் பூமியும் ஒழிந்துபோம் என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை என இயேசு கூறுகிறார். (லூக்.21:33) ஒருவனை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்குவது பரிசுத்த வேத எழுத்துக்கள் மாத்திரமே. (2தீமோ.3:15) வேதவாக்கியங்களில் நித்திய ஜீவன் உண்டு. (யோ.5:39) தேவனுடைய வசனங்கள் நம்முடைய கால்களுக்கு தீபமும், பாதைக்கு வெளிச்சமுமாய் இருக்கிறது. (சங்.119:105) ஆனால் சகோ.பிரன்காம் பிரசங்கித்த செய்திகள் குறித்து என்ன? அதில் பல இடங்களில் செய்தி ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கும். அவர் பலருடைய செய்தி புத்தகங்களை தியானித்து, தம்முடைய கருத்தைக்கொண்டு பிரசங்கித்தார். முற்றிலுமாக அவர் தேவ ஆவியினால் ஏவப்பட்டு பிரசங்கித்தார் என கூற முடியாது. சகோ. பிரன்காமின் செய்தியில் உள்ள சில தவறுகளை நானும் அவ்வப்போது சுட்டிகாட்டியிருக்கிறேன். அவரும் தன்னுடைய தவறான பிரசங்கத்தை காலப்போக்கில் திருத்தியிருக்கிறார். இப்படியாக அவருடைய செய்தியில் பரத்திலிருந்து வந்த ஞானமும் இப்பிரபஞ்சத்திற்குரிய மனித ஞானமும் உண்டு. தீர்க்கதரிசியாகிய நாத்தான் தன் லௌகிக ஞானத்தைக்கொண்டு தாவீதுக்கு ஆலயகட்டுமானத்தில் ஆலோசனை கூறவில்லையா? தேவன் அதை திருத்தவில்லையா? உதாரணத்திற்கு ஏழுசபைகளின் காலங்களுக்கும் ஏழு முத்திரைகளுக்கும் இடையே உள்ள பிளவு பக்கம்.120, பத்தி.31 இவர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு செய்தியாளனாக, தூதனாக வருகிறார். பாருங்கள்? சபை ஏற்கெனவே எடுக்கப்பட்டுவிட்டது, அல்லது அது எடுக்கப்படவிருக்கிறது. அவர் தமது சபைக்கு வருகிறார் என்கிறார். இப்பொழுது ஒரு ஊழியக்காரன் சபை எடுக்கப்பட்டுவிட்டது என பிரசங்கிப்பானா? அல்லது சபை எடுக்கப்படவிருக்கிறது என பிரசங்கிப்பானா? செய்தியில் சரியான பதில் இல்லை. அடுத்து தானியேலுக்கு காபிரியேல் அறிவுரைகள் என்ற செய்தியில் 144 பத்தியில் கீழ்கண்டவாறு பிரசங்கிக்கிறார். இது 30-7-1961 ல் பிரசங்கிக்கப்பட்டது. கடந்த ஆண்டில் தேசங்கள் அவர்களை ஒரு தேசமாக அங்கீகரித்து பிரகடணம் செய்து விட்டனர். (அப்படியானால் இது ஒரு முடிவு பெற்ற சம்பவம் – கா.யோ.) அது நடக்கும் போது நாம் முடிவுக்கு சமீபமாயிருக்கிறோம். (அப்படியானால் இஸ்ரவேல் ஒரு தேசமாக அங்கீகரிக்கப்பட்டபோது நாம் முடிவுக்கு சமீபமாயிருக்கிறோம் – கா.யோ) புறஜாதி சபையானது போய்விட்டிருக்கும் (அப்படியானால் புறஜாதி சபை அப்பொழுது போய்விட்டதா) அது சற்று முரண்பாடாக தெரியவில்லையா? கவனியுங்கள் சபை இன்னும் எடுத்துக்கொள்ளபடவில்லையே! இல்லாவிட்டால் உலகம் இஸ்ரவேலரை ஒரு தேசமாக அங்கீகரித்து விட்டாலும், தேவன் அதை ஒரு தேசமாக இன்னும் அங்கீகரிக்கவில்லையா? அப்படியானால் அத்திமரம் இன்னும் துளிர் விடவில்லையா? அத்திமரம் துளிர் விட்டது என்று இஸ்ரவேல் ஒரு பிரகடணம் செய்யப்பட்ட நாளை நாம் கூறுகிறோமே? அதை சகோ.பிரன்காமும் அங்கீகரிக்கிறாரே?

59. பிரியமானவர்களே, அடுத்து நம்முடைய கரத்தில் உள்ள தேவனுடைய வார்த்தையைக் கொண்ட பரிசுத்த வேதாகமம் கடந்தகாலம், நிகழ்காலம், வருங்காலம் ஆகிய இம்மூன்று காலங்களுக்கும் உரிய சம்பவங்களை கொண்ட ஒரு தீர்க்கதரிசன புத்தகம் (வெளி.1:19) ஆதலால் இது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குரிய சம்பவங்களை கொண்ட புத்தகம் என கூறக்கூடாது. ஆதலால் இது ஏழாம் சபை காலத்து மணவாட்டிக்கு உரியது அல்ல என கூறமுடியாது. அவ்வாறு கூறுவது பிசாசு. இந்நாட்களில் பிரன்காம், பிரன்காம், இக்காலத்திற்குரிய செய்தி, செய்தி, தாங்கள் கிறிஸ்துவின் மணவாட்டி என கூறிக்கொண்டு, தேவனுடைய வார்த்தை, இக்காலத்திற்குரிய செய்தியை கூட்டியும், குறைத்தும், தங்களுக்கு கிடைத்த வெளிப்பாடு என தாங்கள் யூகித்ததை கூறிக்கொண்டு கள்ளகபடமுள்ள வேலையாட்கள் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதான மாறுபாடான / தவறான போதனைகளை கூறிக்கொண்டு மக்களை வஞ்சித்து வருகிறார்கள். ஆனால் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களை இவர்கள் நிச்சயமாக வஞ்சிக்க முடியாது.

60. **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு – இன்றைய பரிசுத்த வேதாகமம் என கூறும் உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் – எலியேசர்.** ஏழாம் சபைக்கால தூதனும், தீர்க்கதரிசியுமாகிய சகோ.வில்லியம் மாரியன் பிரன்காமினால் சபைக்கு பிரசங்கிக்கப்பட்டு, அந்த செய்தியை எழுத்து வடிவத்தில் கொண்டுள்ள **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு** என்ற புத்தகம், திவ்யவாசகனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷத்தில் 5 அதி. யில் கூறப்பட்டுள்ள ஏழு முத்திரைகளினால் முத்தரிக்கப்பட்ட புத்தகத்தில் உள்ள ஏழு முத்திரைகளின் வெளிப்பாட்டை கொண்ட புத்தகம் ஆகும். இந்த புத்தகம் **கர்த்தர் உரைக்கிறார்** என்பதை கொண்டது. ஆதலால் இந்த புத்தகத்தில் தொடக்கம் முதல் முடிவு வரை நாம் எதையும் நிராகரிக்கக்கூடாது. அதை, அது எழுதப்பட்ட / பிரசங்கிக்கப்பட்ட பிரகாரமே ஏற்றுக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் மணவாட்டிக்கு இது இன்றைய பரிசுத்த வேதாகமம் என்பது போன்ற வேற்றுமையான உபதேசங்களை போதித்து பிசாசு மக்களை வஞ்சித்து வருகிறான். இது பரிசுத்த வேதாகமத்தில் ஆதி.1: 1 முதல் வெளி 22:21 வரை அடங்கியுள்ள / மறைக்கப்பட்டுள்ள வேதஇரகசியங்கள் அனைத்தையும் சகோ.பிரன்காம் பிரசங்கித்த ஏழு முத்திரைகளின் வெளிப்பாடுகளையும் வெளிப்படுத்தின புத்தகம் என்று கள்ளகபடமுள்ள வேலையாட்கள் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏழு முத்திரைகளின் வெளிப்பாட்டை ஏழு தூதர்களிடமிருந்து பெற்று, அவ்வண்ணமாக பெற்ற வெளிப்பாட்டை அவர் செய்தியாக பிரசங்கிக்கிறார், அன்றன்று பிரத்தியேகமாக அதற்கென்றே அனுப்பப்பட்ட தேவதூதன் மூலமாக வெளிப்பாட்டை பெற்று, அதை செய்தியாக பிரசங்கிக்கிறார். வெளிப்பாடுகள் – கர்த்தர் உரைக்கிறதாவது என்பதை கொண்டதாகும். அவ்வளவுதான். ஆதலால் ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு **கர்த்தர் உரைக்கிறார்** என்பதை கொண்ட புத்தகம் என்று கூறமுடியாது. ஏனென்றால் இந்த புத்தகத்தில் தவறுகள் உண்டு. ஒன்றுக்கொன்று மாறுபட்ட போதனைகள் உண்டு. அவைகள் அறியாமலே நடந்தவைகள் ஆகும். ஆதலால் அவைகள் பின்னால் திருத்தப்படுகின்றன. ஆனால் சில தவறுகள் அறியாமல் சொற்தவறுகளினால் நடந்தது ஆகும். ஒரு புத்தகம் **கர்த்தர் உரைக்கிறார்** என்பதை கொண்டிருக்குமானால் அது வானமும் பூமியும் ஒழிந்து போகும், அவர் வார்த்தையோ ஒழிந்து போவதில்லை (லூக்.21:33) என்பதை கொண்டதாக இருக்கும்.

61. இப்பொழுது கவனியுங்கள் **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு** என்ற புத்தகத்தில் **ஏழு சபை காலங்களுக்கும் ஏழு முத்திரைகளுக்கும் இடையில் உள்ள பிளவு** என்ற செய்தியில் பக்கம் 106, பத்தி 3, பிரசங்கிக்கப்பட்ட நாள். 17.03.1963, இதில் ஏழு சபையின் காலங்களில் ஏழு தீர்க்கதரிசிகள் புறப்பட்டு சென்றனர் – ஏழு ஞானதிருஷ்டிக்காரர்கள். கண்கள். ஆகவே கடைசி சபையின் காலத்தில் உள்ளவரும் ஒரு ஞானதிருஷ்டிக்காரராகவே இருக்க வேண்டும் என்கிறார். அடுத்து மறுநாள் 18.03.1963-ல் பிரசங்கிக்கப்பட்ட **முதலாம் முத்திரை,** பக்கம் 149, பத்தி 2ல் கடைசி சபையின் காலத்து தூதன் ஓர் சீர்திருத்தக்காரன் (Reformer) அல்ல. அவன் ஒரு தீர்க்கதரிசி (Prophet). தேவனுடைய வார்த்தை முழுவதும் அவர்களிடத்தில் (முந்திய காலத்து சபை தூதர்களிடத்தில்) வரவில்லை. ஏனென்றால் அவர்கள் தீர்க்கதரிசிகள் அல்ல. அவர்கள் சீர்திருத்தக்காரர்கள் என்கிறார். அதாவது ஏழாவது சபை காலத்து தூதன் மட்டும் தீர்க்கதரிசி. ஏனைய சபை காலத்து தூதர்கள் யாவரும் சீர்திருத்தகாரர்கள் என்கிறார். அப்படியானால் முதல் சபை எபேசுவின் தூதன் அப்.பவுலும் ஒரு சீர்திருத்தக்காரனா? மீண்டும் 25.11.1965-ல் பிரசங்கித்த **கிறிஸ்துவின் மணவாட்டியின் காணக்கூடாத இணைப்பு** பக்கம் 67, பத்தி 1ஐ கவனியுங்கள். இங்கு ஏழு சபை காலங்களில் சீர்திருத்தக்காரர்கள் தோன்றி, முடிவில் ஏழாம் சபையின் காலத்தில், இந்த நேரத்தில், அது வெளி.10 ல் உரைத்துள்ளது நிறைவேறவேண்டியதாய் உள்ளது. அந்த ஒரு மாற்றம் மாத்திரமே. அது அவ்வாறே நிகழ்ந்தது. பாருங்கள் ஒரு சம்பவம் குறித்து மூன்று வித்தியாசமான போதனைகள். அதுவும் **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு** என்ற புத்தகத்தில். காரியங்கள் இப்படியிருக்க **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு** என்ற புத்தகம் **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதை கொண்டுள்ள ஒரு புத்தகமாக இருக்கமுடியுமா? முடியாது. முடியவே முடியாது. முடியும் என்பவன் பிசாசே.

62. மேலும் ஒரு சம்பவத்தையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன் முதலாம் முத்திரையின் வெளிப்பாடு குறித்து சகோ.பிரன்காம் 18.03.1963 அன்று பிரசங்கித்தார். அந்த செய்தியில் பக்கம் 215, பத்தி 75ல் கீழ்கண்டவாறு கூறுகிறார். பின்னர் வேதத்தில் எழுதப்படாத ஏழு இரகசியமான இடிமுழக்கங்கள். அது சரி. ஆகவே எடுத்துக்கொள்ளப்படுவதற்கான விசுவாசத்திற்காக மணவாட்டியை ஒன்று சேர்ப்பதற்கென்று, இந்த கடைசி நாட்களில் அந்த ஏழு இடிமுழக்கங்களின் மூலமாக வெளிப்படுத்தப்படும் என்று நான் நம்புகிறேன் என்கிறார். அதாவது இங்கு வேதத்தில் எழுதப்படாத ஏழு இரகசியமான இடிமுழக்கங்கள் என்கிறார். மேலும் கீழ்கண்ட செய்தியில் இந்த ஏழு இடிமுழக்கங்களின் சத்தங்கள் ஒன்று மாத்திரமே, புத்தகத்துடன் ஒட்டிக்கொண்டு, வெளிப்படுத்தப்படாமல் உள்ளது. அவை அந்த புத்தகத்தில் எழுதப்படவில்லை. (**ஐயா, இதுதான் முடிவின் அடையாளமா?** பக்கம்.96, பத்தி.306, நாள் : 30.12.1962) ஆனால் இந்த இரு போதனைகள் குறித்து, இதை தவறாக கூறிவிட்டேன் என பின்

மற்றொரு செய்தியில் தன் தவறை உணர்ந்து, அந்த தவறை திருத்திக்கொள்கிறார். பாருங்கள், புத்தகத்தின் புறம்பாக முத்தரிக்கப்பட்டிருந்தது எனவும், அவை (முத்தரிக்கப்பட்டிருந்த இரகசியங்கள்) வேதத்திலே எழுதப்பட்டிருக்காத காரியங்களாக இருக்கும் என்றும் நான் எப்பொழுதும் நினைப்பேன்: ஆனால் அவர் அவ்விதமாக செய்யமாட்டார் என்று விளங்க வைக்கப்பட்டது. அவை வேதத்திலே எழுதப்பட்டிருக்கும் காரியங்கள் அல்ல. அவை வேதத்திலே மறைத்து வைக்கப்பட்டிருக்கும் காரியங்களாக இருக்கின்றன. ஆகவே ஒருவன் இத்துடன் ஒரு வார்த்தையை கூட்டினாலும் அல்லது எதையாகிலும் எடுத்துப்போட்டாலும் (சகோ. பிரன்காம் வெளி.22:18, 19 வசனங்களை குறிப்பிடுகிறார்)..... ஆகவே இந்த ஏழு சபையின் காலங்களாக வேதத்திலேயே இருக்கும் இரகசியமாக அவை இருக்கின்றன. செய்தி: **ஏற்றகாலத்தின் ஆவிக்குரிய ஆகாரம்,** பக்கம்.24,25, பத்தி.83, நாள்: 18-07-1965 இங்கு நன்கு கவனியுங்கள் : **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு** செய்தியில், 1962 டிசம்பர் மற்றும் 1963 மார்ச் மாதம் பிரசங்கித்த செய்தியில் உள்ள தவறுகளை 1965 ஜீலை மாதத்தில் திருத்துகிறார். காரியம் இப்படியிருக்க, **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு** புத்தம் எப்படி தொடக்கம் முதல் முடிவு வரை **கர்த்தர் உரைக்கிறார்** என்பதை கொண்டதாக இருக்கமுடியும்? ஆனால் பரிசுத்த வேதாகமம் ஆதி.1:1 முதல் வெளி.22:21 வரை **கர்த்தர் உரைக்கிறார்** என்பதை கொண்டதான புத்தகம். இதில் குறைத்தல் கிடையாது, கூட்டுதல் கிடையாது, திருத்தம் கிடையாது.

63. பரிசுத்த வேதாகமத்திற்கு ஒப்பாக அல்லது இதற்கு ஒரு மாற்று புத்தகமாக சகோ.பிரன்காம் பிரசங்கித்த **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு** புத்தகத்தை கொண்டு வருபவர்கள் வஞ்சகர்கள், ஏமாற்றுக்காரர்கள், அவர்கள் பிசாசே. இக்காலத்திற்குரிய செய்தியில் உள்ள விசுவாசிகளுக்கு சகோ.பிரன்காம் பிரசங்கித்த செய்திகள் தான் வேதாகமம் என கூறும் பேலியாளின் மக்களை குறித்து எச்சரிக்கையாயிருங்கள். ஆனாலும் இவர்களை நம்பி ஒரு கூட்டம் ஜனங்கள் இருக்கத்தான் செய்வார்கள். இந்த கூட்டத்தை சார்ந்தவர்கள் தங்கள் ஆத்துமாவை மரணத்துக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார்களேயன்றி, அவர்கள் கர்த்தராகிய கிறிஸ்துவின் இரகசிய வருகைக்காக ஆயத்தப்படுத்துகிறவர்களாக அல்ல. இவர்களுக்காக நான் பரிதபிக்கிறேன். என் மூலமாக கேள்விப்பட்டதை விசுவாசித்தவர்கள் யார்?

64. ஏழாம் சபைக்கால தூதனாகிய சகோ. வில்லியம் மாரியன் பிரன்காம், நான் அறிந்த வரையில் 1947-ம் ஆண்டு முதல் 1965 வரை சுமார் 1299 செய்திகளை பற்பல இடங்களில் பிரசங்கித்திருக்கிறார். இங்கு அவர் பிரசங்கித்த செய்திகளின் வருடத்தையும், ஒலிநாடாக்களில் பதிவுசெய்யப்பட்ட செய்திகளின் எண்ணிக்கைகளையும் உங்களின் அறிந்துக்கொள்ளுதலுக்காக கீழே தருகிறேன். இதன் ஆதாரம் : Master index to sermons by Rev. William M. Branham by Bro. David Mamalis, published in the year 1981 by The William Branham Library, Arizona, U.S.A. தேதியிடப்படாத செய்திகள் – 5, 1947ம் வருடம் – 6 செய்திகள், 1948/2, 1949/7, 1950/26, 1951/35, 1952/22, 1953/63, 1954/67, 1955/82, 1956/80, 1957/108, 1958/85, 1959/106, 1960/99, 1961/95, 1962/102, 1963/96, 1964/76, 1965/52. ஆக மொத்தம் 1299 செய்திகள். இவைகள் யாவும் தூதனுடைய தாய்மொழியாகிய ஆங்கிலத்தில் உள்ளது. ஆனால் அவர் சபைக்காலங்களில் கடைசி சபையாகிய லவோதிக்கேயா சபையின் தூதனாக இருப்பதால், அவரால் பிரசங்கிக்கப்பட்ட செய்திகள் விசுவாசிகளின் ஆத்தும ஆகாரமாயிருக்கிறது. கடைசி சபைக்கு கடைசி செய்தியாக இருக்கிறது. செய்திகள் மணவாட்டி எடுத்துக்கொள்ளப்படுதலுக்குரிய விசுவாசத்தை அவள் உள்ளத்தில் கொண்டு வருவதாக இருக்கிறது. விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தை காணாதபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான். (எபி.11:3) பாருங்கள் எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு நமக்கு விசுவாசம் தேவைப்படுகிறது. அந்த விசுவாசம் இக்காலத்திற்குரிய செய்தியிலிருந்து வரும். ஆதலால் அவரது செய்தி உலகம் முழுவதும் செல்ல வேண்டியதாயிருக்கிறது. இந்நாட்களில் அவரது செய்திகள் உலகம் முழுவதும் முக்கியமான அனைத்து பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு, பிரசுரிக்கப்பட்டு, இலவசமாக விநியோகிக்கப்பட்டு வருகிறது. அதற்கென்று ஒவ்வொரு நாடுகளிலும் கர்த்தர் வாசல்களை திறந்துக்கொடுத்துள்ளார். நமது நாட்டிலும் அது அனைத்து முக்கியமான மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவரது செய்திகள் கிறிஸ்துவின் மணவாட்டிக்கு, அவள் மணவாளனாகிய கிறிஸ்துவை பற்றிய அனைத்து வெளிப்பாடுகளையும் கொண்டதாக இருக்கிறது. ஏனென்றால் மணவாட்டி, தன் மணவாளனைப் பற்றிய விவரங்கள் அனைத்தையும் அறிந்துக்கொள்ள வேண்டியவளாயிருக்கிறாள். அநேகர் சகோ.பிரன்காம் ஆதி.1:1 முதல் வெளி.22:21 வரை அடங்கியுள்ள தேவனுடைய இரகசியங்கள் (Mystries of God) அனைத்தையும் அறிந்தவர். அவைகளை சபைகளுக்கு வெளிப்படுத்திவிட்டார் என்கிறார்கள். நான் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. வேதவாக்கியங்களில் கண்ட அனைத்து தேவனுடைய இரகசியங்களையும் (Mystries of God) கர்த்தர் தூதனுக்கு வெளிப்படுத்தாமல், மணவாட்டிக்கு தேவையான தேவரகசியத்தை (Mystries of God) வெளி.10:6 மாத்திரமே வெளிப்படுத்திக் கொடுத்துள்ளார் என்று நான் விசுவாசிக்கிறேன். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றிய வெளிப்பாடு உலகத்தோற்றம் முதல் மறைபொருளாக இருந்து ஆறு சபைக்காலங்கள் தோறும் கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படுத்தப்பட்டு, இந்த கடைசி சபைக்காலத்தில், கடைசி சபைக்கால தூதன் மூலமாக மறைப்பொருளாக இருந்த இரகசியம் முற்றிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. யாருக்கு? கிறிஸ்துவின் மணவாட்டிக்கு மாத்திரமே. பாருங்கள் நீங்கள் கேள்வி பதில்களை தியானித்தால், அநேக இடங்களில் தூதன், இது குறித்து தனக்கு தெரியாது, தெரியாது என பதில் கொடுக்கிறார். அவர் தேவரகசியங்கள் அனைத்தையும் தெரிந்துள்ளதாக காட்டிக்கொள்வதில்லை. அறிந்ததை கூறுகிறார் அறியாததை தெரியாது என்று கூறுகிறார். ஆனால் இன்று நம்மிடத்தில் உள்ள சில பந்தாக்கள் தங்களுக்கு தெரியாதது ஒன்றுமில்லை என அலட்டிக்கொள்கிறார்கள். இப்படிப்பட்டவர்களில் உங்கள் மும்பை பாஸ்டரும் ஒருவர். தமிழ்நாட்டிலும் சிலர் எழும்பியுள்ளார்கள். இந்த மேதாவிகள் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள். ஆனால் தூதன் தனக்கு தெரியாததை வெளிப்படையாக தனக்கு தெரியாது என்றே கூறுகிறார். உங்கள் கவனத்திற்கு இங்கு சில உதாரணங்களை எடுத்துக்காட்டுகிறேன்.

(அ) **கே.ப. 166** ஐ பார்த்தால் அங்கு மத்.16:9,10 வசனங்களில் கூறிய 12 கூடைகள், 7 கூடைகள் எதற்கு எடுத்துக்காட்டு என்ற கேள்விக்கு அது என்னவென்று இப்பொழுது எனக்கு நிச்சயமாக தெரியவில்லை என்கிறார் (கூடைகள் 12 குறித்து மத்.14:20, கூடைகள் 7 குறித்து மத்,15:37 ல் வாசியுங்கள்).
(ஆ) **கே.ப. 393** ஐ தியானியுங்கள். எக்காளங்களுக்கும் மணவாட்டிக்கு சம்பந்தம் இல்லை என்று பரிசுத்த ஆவியானவர் உம்மிடம் உரைத்திருக்கிறார். 7 கலசங்களுக்கும் நமக்கும் ஏதாயிலும் சம்பந்தம் உண்டா? பரிசுத்த ஆவியானவர் அவ்விதம் வெளிப்படுத்தியிருக்கிறாரா என்று நான் பொறுத்திருந்து பார்க்கிறேன். இதுவரைக்கும் எனக்கு தெரியாது என்கிறார்.
(இ) **கே.ப. 396**, உயிரோடிருக்கின்ற மணவாட்டியின் சிறுகூட்டம், முதலாவது மணவாட்டி செய்தது போல, கர்த்தராகிய இயேசு மேகங்களின் மேல் வருவதற்கு முன்பு, எப்பொழுதாகிலும், எங்காகிலும் ஒன்றுகூடி எல்லாவற்றையும் பொதுவாக அனுபவிப்பாள் என்று நீங்கள் நம்புகின்றீரா? வேதவாக்கியங்களை ஆதாரமாக கொண்டு என்னால் நிருபிக்க முடியாது. ஒருகால் அத்தகைய நேரம் ஒன்று வரக்கூடும், எனக்கு தெரியாது என்கிறார். ஆதலால் சகோ.பிரன்காம் அறியாத அநேக தேவரகசியங்கள் இன்னும் வேதவாக்கியங்களில் உண்டு. அவர் எல்லாம் அறிந்திருப்பாரானால் அது அவரை தேவனாக்கிவிடும். பாருங்கள் தேவன் ஒருவரே எல்லாவற்றையும் அறிகிறவர், அறிந்திருக்கிறவர், சர்வஞானி. சகோ.பிரன்காமிற்கு எல்லாம் தெரியும் என கூறுபவர்கள் அவரை தேவன் ஆக்குகிறார்கள். அப்படியானால் அது பிசாசு. பாருங்கள் பிரன்காம் கிறிஸ்து உபதேசம் பிசாசினுடையதே. சகோ.பிரன்காம், பிரன்காம் என துதி பாடிக்கொண்டே இருக்கும் கூட்டம் அனைத்தும் பிசாசினுடையதே. மக்களை வஞ்சிக்கும் கூட்டமே.

65. **சபைக்காலம் முடிந்து விட்டது, இப்பொழுது நாம் நித்தியத்தில் இருக்கிறோம் என்கிறான் இந்த கேட்டின் மகன் எலியேசர்** : அடுத்து இவர் எழுதுகிறார் : இப்பொழுது இது சபைக்கான யுகம் அல்ல. இது எட்டாம் நாளாகும், நித்தியம். ஆகவே சபைக்கால முடிவில் வந்த செய்தி. கர்த்தர் உரைக்கிறதாவது என்ற செய்தியாகும். அப்படியானால் தேவனே இறங்கி வந்து பேசுகிறார் என்பதாகும். (எலியேசரின் செய்தி : உங்கள் செய்தி என்ன? பக்கம்.16, முதலாம் பத்தி) இவர் சபைக்காலயுகம் முடிந்துவிட்டது என்கிறார். இப்பொழுது நித்தியத்தில் இருக்கிறோம் என பிதற்றுகிறார். ஆனால் இவர் ஆராதிக்கும் தேவன் வில்லியம் மரியன் பிரன்காம். இன்னும் சபைக்காலம் முடியவில்லை, சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்புதான் சபைக்காலம் முடியும் என்கிறார். அப்படியானால் இந்த எலியேசர் கைவிடப்பட்டவர்தானா? இவருக்கடுத்த காரியங்கள் யாவும் செய்தியை புரட்டி புரட்டி மக்களை திசை திருப்பும் பிசாசின் வேலையாகவே இருக்கிறது. ஆதலால்தான் நாம் இப்பொழுது நித்தியத்தில் இருக்கிறோம் என்கிறார். காலமும் நித்தியமும் எப்பொழுது ஒன்றாக இணையும்? இதற்கு முன் நடக்க வேண்டிய சம்பவங்கள் அநேகம் இருக்கின்றனவே. சபை எடுத்துக்கொள்ளப்பட்டு மகிமைக்கு செல்லவேண்டும், மூன்றரை ஆண்டுகள் உபத்திரவகாலம் சம்பவிக்க வேண்டும், இஸ்ரவேல் தன் இரு தீர்க்கதரிசிகளையும் பெற வேண்டும், ஆயிரம் வருட அரசாட்சியாகிய தாவீதின் குமாரன் ஆட்சி நடைபெற வேண்டும். வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு நடந்தேற வேண்டும், புதிய வானம் புதிய பூமி புதிய நகரம் பரலோகத்தை விட்டு இறங்க வேண்டும். இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்ற பின்புதான், காலமும் நித்தியமும் இணையும், ஆதலால் நாம் இப்பொழுது நித்தியத்தில் இருக்கிறோம் என்ற உபதேசத்தை, தான் என்ன எழுதுகிறான் என்று அறியாமல் தன் கரங்களில் உள்ள பேனா போன போக்கில் எழுதுகிறான். நித்தியம் என்ற சொல்லின் வாசனையே இவனிடம் கிடையாது.

66. **சகோ. பிரன்காம் செய்தி முற்றிலுமானது, கர்த்தர் உரைக்கிறதாவது என பிதற்றுகிறான் இந்த பித்தலாட்டகாரன் எலியேசர் :** அடுத்து இவர் எழுதுகிறதாவது : சகோ.பிரன்காம் பிரசங்கித்த செய்திகள் முடிவானதும் முற்றிலுமானதுமான கர்த்தர் உரைக்கிறதாவது என எழுதுகிறார். பிசாசு எந்த அளவிற்கு இந்த மனுஷனை ஆட்கொண்டு, இவன் மூலமாக தேவனுக்கு விரோதமாக இவனைக்கொண்டு செயல்பட வைக்கிறான் என்பதை நீங்கள் நன்கு அறிந்துக்கொள்ளலாம். இந்த மனுஷனுக்கு பரிசுத்த வேதாகமம் தேவையில்லை. வேறுயாரும் எழுதின புத்தகங்களும் தேவையில்லை. மாறாக இவனுக்கு சகோ.பிரன்காம் பிரசங்கித்த செய்தி புத்தகங்கள் மாத்திரமே போதும். ஏனென்றால் அவையாவும் கர்த்தர் உரைக்கிறதாவது என்கிறான். கவனியுங்கள் நான் ஏற்கெனவே எழுதினபடி சகோ.பிரன்காம் தன் பிரசங்கங்களுக்கு / செய்திகளுக்கு முற்றிலுமாக தேவனுடைய சத்தியத்தை சார்ந்திருக்கவில்லை. முற்றிலுமாக பரிசுத்த ஆவியின் ஏவுதலையும் பெற்றிருக்கவில்லை. அதாவது தேவனுடைய சத்தத்தை கேட்டார். பரிசுத்த ஆவியின் ஏவுதலை பெற்றார். முற்றிலுமாக அது உண்மை. ஆனால் தன் ஊழியத்தின் பாதையில் முற்றிலுமாக தேவனுடைய சத்தத்தை பரிசுத்த ஆவியின் ஏவுதலை சார்ந்திருக்கவில்லை. அவருடைய பிரசங்கங்கள் / செய்திகள் பிரபலமான ஊழியக்காரர்களுடைய கருத்துக்களை சார்ந்ததாகவும் இருந்தது. தனது சுயகருத்துக்களையும் கொண்டிருந்தது. தன்னுடைய சுய எண்ணங்களும் சிந்தனைகளும் காணப்பட்டது. உதாரணமாக : பின்னர் வேதத்தில் எழுதப்படாத ஏழு இரகசியமான இடி முழக்கங்கள். அது சரி (முதலாம் முத்திரை பத்தி.75, மார்ச்.18, 1963) இந்த ஏழு இடிமுழக்கங்களின் சத்தங்கள் ஒன்று மாத்திரமே புத்தகத்துடன் ஒட்டிக்கொண்டு வெளிப்படாமல் உள்ளது. அவை அந்த புத்தகத்தில் எழுதப்படவில்லை. (ஐயன்மீர் இதுதான் முடிவின் அடையாளமா? பத்தி.306, நாள்.30-12-1962) புஸ்தகத்தின் புறம்பாக முத்தரிக்கப்பட்டிருந்து என்றும் அவை (முத்தரிக்கப்பட்ட இரகசியங்கள்) வேதத்திலே எழுதப்பட்டிருக்காத காரியங்களாக இருக்கும் என்றும் நான் எப்பொழுதும் நினைப்பேன். ஆனால் அவர் அவ்விதமாக செய்யமாட்டார் என்று விளங்க வைக்கப்பட்டது. (ஏற்றகாலத்தில் ஆவிக்குரிய ஆகாரம் பத்தி.83, நாள்.18-7-1965) கவனியுங்கள். சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு பின்பு ஒருமுறை தான் பிரசங்கித்ததை திருத்துகிறார். முத்திரையில் அவர் பிரசங்கித்ததுஅவரது சுயகருத்து, சிந்தனை, எண்ணம் ஆனால் பின் ஆவியானவருடைய வழிநடத்துதலின்படி தவறை திருத்துகிறார். அடுத்து நான் பழைய பிரசங்கங்களிலிருந்து அப்பொழுது குறிப்பு எழுதிக்கொண்டிருந்தேன்... அப்பொழது நான் டாக்டர்.ஸ்மித் என்பவரின் எழுத்துக்களையும் அநேக பிரசித்தி வாய்ந்த போதகர்கள் கொண்டிருந்த கருத்துக்களையும் ஒன்று தொகுத்து, அப்பிரசங்கத்தை (முதலாம்

முத்திரை குறித்து) ஆயத்தம் செய்தேன். இவைகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு முதலாம் முத்திரையை இந்த கோணத்திலிருந்து படிக்கலாம் என்று தீர்மானம் செய்தேன். ஆனால் இன்று (18-3-1963) பன்னிரெண்டு மணிக்கு பரிசுத்த ஆவியானவர் வேகமாய் என் அறைக்குள் நுழைந்தார். உடனே முதலாம் முத்திரைக்குறித்த இரகசியம் முழுவதும் திறக்கப்பட்டு வெளிப்பட்டது. (முதலாம் முத்திரை பத்தி.37,38) இங்கு நான் உதாரணமாக எழுதியுள்ள சம்பவங்களை கொண்டு சகோ.பிரன்காம் கிறிஸ்துவா? சர்வ வல்லமையுள்ள தேவனா? என்பதை நீங்களே நிதானித்துக்கொள்ளுங்கள். ஜோர்ஜ் எலியேசர் இருதயம் தேவனுக்கு முன்பாக செம்மையாகயில்லை. இவர் கசப்பான பிச்சிலும், பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறான் என்பதையே நான் காண்கிறேன்.

67. ஆனால் பரிசுத்த வேதாகமானது முற்றிலுமாக பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு ஏழுதப்பட்டது. இதில் மனுஷருடைய கருத்துக்களுக்கும் அபிப்பிராயங்களுக்கும், அனுமானங்களுக்கும், அனுபவங்களுக்கும் இடமே இல்லை. ஆகவேதான் பரிசுத்த வேதாகமம் தேவ ஆவியினால் எழுதப்பட்ட தேவனுடைய சத்தமாகயிருக்கிறது. ஆதலால் இதிலிருந்து நீங்கள் ஒன்றை கூட்டவும் குறைக்கவும் முடியாது. ஆனால் சகோ.பிரன்காம் செய்தியில் கூட்டலும் குறைத்தலும் உண்டு. ஆதலால் இவருடைய செய்தி முழுவதும் கர்த்தர் உரைக்கிறதாவது என்பது ஜோர்ஜ் எலியேசருடைய மதியீனம். பரிசுத்த வேதவாக்கியங்கள் வார்த்தைகள் யாவும் தேவனுடைய ஏவுதலினாலும் பரிசுத்த ஆவியை கொண்டு நமக்கு அருளப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய சொற்கள் மண்குகையில் ஏழுதரம் உருக்கி புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது. (சங்.12:6) (The Words of the LORD are pure Words) தேவனுடைய வசனம் எல்லாம் புடமிடப்பட்டவைகள். (நீதி.30:6) (Every Word of God is Pure) ஆக இங்கு தவறுகள் எதுவும் கிடையாது. மேலும் கூட்டல் குறைத்தல் கிடையாது. யாராவது ஒருவர் கூட்டி குறைத்தால ஜீவ புஸ்தகத்திலிருந்து அவர் பங்கை தேவன் எடுத்து போடுவார். இந்த தன்மைகள் சகோ.பிரன்காம் பிரசங்கித்த செய்திகளில் உண்டா? சகோ.பிரன்காமின் செய்தியில் கூட்டல், குறைத்தல் உண்டு. அறிந்தது, அறியாதது உண்டு. பலருடைய கருத்துக்களும் உண்டு. ஆதலால் வேதவாக்கியங்களுக்கு இணையாக நிகராக சகோ.பிரன்காம் செய்தியை ஒப்பிடுவது பிசாசின் வஞ்சிப்பு.

68. **ஏழாம் சபைக்கால தூதனே தேவன் என்கிறான் இந்த பிசாசு – எலியேசர் :** ஓஹியோ நதியில் நிகழ்ந்த சம்பவம் என்ன? இதுகுறித்து இந்த வேதப்புரட்டன் எழுதுகிறதாவது : தூதனும் தீர்க்கதரிசியும் ஒரே நேரத்தில் ஓஹியோ நதியில் நின்றார்கள். இஸ்ரவேலரை வனாந்திரத்தில் வழிநடத்திய கர்த்தருடைய தூதனானவர். அதே அக்கினி ஸ்தம்பம் இறங்கி தமது பூமிக்குரிய கூடாரத்தை – மண்பாண்டத்தை பிரதிஷ்டை செய்தாராம். தேவன் அந்த கூடாத்திற்குள் வந்து தங்கினாராம். அது பிரன்காம் கூடாரம் அல்ல, பிரன்காமே அந்த கூடாரம். அங்கே தேவனும் தீர்க்கதரிசியும் இரண்டு நபர்களாக இருந்தனர். (இயேசு – யோவான் ஸாநானன்) இங்கே தூதனும் தீர்க்கதரிசியும் ஒரே நபராக இருக்கிறார்களாம். தூதனே தேவன் என்கிறார். உண்மையாகவே இந்த ஏலியேசர் ஒரு புத்தி சுயாதீனமில்லாதவனாகத்தான் இருக்க வேண்டும். சாத்தான் இவனை புத்திசுயாதீனனாக்கி தன் பணியை / வஞ்சிப்பை இவனைக் கொண்டு நடத்தி வருகிறான். இவன் தன் சுயபுத்தியை சார்ந்து, தான் என்ன விசுவாசிக்கிறான், எழுதுகிறான் என்ற சுயநினைவே இல்லாமல் எதை எதையோ மனம்போன போக்கில் உளறுகிறான். இந்த அக்கிரமக்காரனுடைய வஞ்சகத்திலே இழுப்புண்டு போகாதப்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

69. **ஓஹியோ நதிக்கரையில் நடந்தது என்ன?** 1933 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 15-ஆம் தேதி மதியம் ஓஹியோ நதிக்கரையில் சகோ.பிரன்காம் சுமார் ஐநூறு பேருக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுக்க இருந்தார். மதியம் சுமார் 2 மணிக்கு பதினேழாவது நபருக்கு ஞானஸ்நானம் கொடுத்துக்கொண்டிருக்கையில் ஒரு தெய்வீக வெளிச்சம் நதியின் அடுத்தப்பக்கம் விழுந்தது. அது ஒரு நட்சத்திரம் வானத்திலிருந்து விழுந்தது போல் இருந்தது. அதிலிருந்து மேலே பார் என்ற சத்தம் உண்டாயிற்று. தேவன் அக்கினி ஸ்தம்பத்தில் காட்சியளித்தார். தேவன் இறங்கினார். யோவான் ஸ்நானன் கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக அனுப்பப்பட்டதுபோல **உன் செய்தி கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன் சென்று உலகத்தின் எல்லா பாகங்களுக்கும் போகும் என விளங்கிற்று.** (இந்த வேதவாக்கியம் இன்றைய தினம் நிறைவேறிற்று. பத்தி.143-145 நாள்.19-2-1965) இப்பொழுது கவனியுங்கள் தூதன் முன்னோடி அல்ல. தூதனுடைய செய்தியே முன்னோடி. அதைத்தான் என்னிடம் கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாய் யோவான் ஸ்நானன் அனுப்பப்பட்டது போல உன் செய்தி என் கூறினார். நான் இந்த செய்தியை எடுத்து செல்ல வேண்டும். (இயேசுவின் பட்சம் சேர்ந்திருத்தல் பத்தி.58 நாள்.1-06-1962 பாருங்கள் தூதன் தனக்கு கொடுக்கப்பட்ட செய்தியை எடுத்துசெல்லவேண்டியவராயிருக்கிறாரேயன்றி அது அவருடைய செய்தி அல்ல. செய்திக்குரியவரும் அல்ல. (Nor that I would be the fore runner but the message was the fore running (Testimony of William Branham 0.02.1960) கவனியுங்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு சகோ.பிரன்காம் முன்னோடி அல்ல. மாறாக அவர் சுமந்து வந்த செய்தியே. இதிலிருந்து இந்த மாறுபாடான சந்ததியானின் உபதேசங்கள் எந்த அளவுக்கு உண்மை செய்தியிலிருந்து முரண்பட்டது என்பதை நீங்கள் அறிந்துக்கொள்ளலாம்.

70. **இனி தரிசனம், வெளிப்பாடு கிடையாது என்கிறான் இந்த மாய்மாலக்காரன் எலியேசர் :** மேலும் தன் வழியையும் தன் மூளையிலிருந்து தன் பொலிவையும் நோக்கி கொண்டிருக்கும் இவர் எழுதும் மிக வஞ்சகமான காரியம் என்னவென்றால் : இன்றுள்ள பல செய்தி ஊழியர்கள் இந்த செய்தி புத்தகத்தை ஒதுக்கிவிட்டு தங்களுக்கு கர்த்தர் இதை வெளிப்படுத்தினார், அதை வெளிப்படுத்தினார் என்று பொய் பேசி கொண்டிருக்கிறார்கள் என பக்கம்.11-ல் எழுதுகிறார். கவனியுங்கள். நாம் அனைவரும் தேவனுடைய குமாரனை பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும் பரிசுத்தவான்கள் பூரணப்படும் பொருட்டு சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய

சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரை தீர்க்கதரிசிகளாகவும், சிலரை சுவிசேஷகர்களாகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார். (எபே.4:11-14) இந்த ஊழியம் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை எடுத்துக்கொள்ளப்படும் வரை ஆகும். சபை எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன் பரிபூரணப்பட வேண்டும். அப்பொழுதான் எடுத்துக்கொள்ளபடுதல் நடைபெறும். சபை பரிபூரணமடைய ஐந்து வகை ஊழியங்களும் அத்தியாவசியமாக தேவை. சபைக்கு சகோ.பிரன்காமின் செய்தி மாத்திரம் போதாது. போதும் என்றால் பின் கர்த்தர் ஐந்து வகையான ஊழியங்களை நியமித்தது ஒரு தேவையற்றதாக, காரணமற்றதாகிவிடும். ஒரு நோக்கம் இல்லாமல் ஐந்து வகை ஊழியங்களை ஏற்படுத்தினார் என்றாகிவிடும். இங்கு வளசரவாக்கம் பாஸ்டர் **தான் மாத்திரமே** என்ற போக்கை மாற்ற வேண்டும்.

71. **தேவ இரகசியம் – தேவ இரகசியங்கள் :** ஏழாம் சபைக்கால தூதனுடைய சத்தத்தின் நாட்களில் அவன் எக்காளம் ஊதப்போகிற போது தேவரகசியம் நிறைவேறும். (In the days of the Voice of the Seventh Angel when he shall begin to sound, the mystery should be finished) இங்கு நீங்கள் கவனித்தால் தேவ ரகசியம் Mystery of God என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. Mysteries of God – தேவ ரகசியங்கள் என்று சொல்லப்படவில்லை. எதற்கும் எல்லாவற்றிற்கும் நாம் தேவனுடைய வார்த்தைகளை மிக உண்ணிப்பாகவும், கவனத்துடனும் தியானிக்கவேண்டும். ஏனோதானோ என்ற மேலோட்டமாக இருக்க கூடாது. ஏனென்றால் தேவனுடைய வார்த்தையோடு நாம் ஒன்றை கூட்டவோ குறைக்கவோ கூடாது. அது ஒருமையில் இருந்தால் ஒருமைதான். பன்மையில் இருந்தால் பன்மைதான். ஒருமையிலிருந்து பன்மைக்கு தாவக்கூடாது. பன்மையிலிருந்து ஒருமைக்கு மாறக்கூடாது. இந்த மாற்றத்தை ஏழாம் சபைக்கால தூதன் கூட செய்ய முடியாது. ஏனென்றால் இவர் செய்தியை சுமப்பவர் அன்றி செய்திக்கானவர் அல்ல. பாருங்கள் என் பெயர் காலேப் யோசுவா. இந்த காலேப் யோசுவாவுக்கு அடுத்த ரகசியம் ஒன்று இருக்கும். அதை அவர் மாத்திரமே அறிவார். அவ்வாறாகவே நாம் அனைவருக்கும் அவரவர்களுக்கடுத்த ரகசியம் ஏதோவொன்று இருக்கத்தான் செய்யும். அதை அந்த நபரே அறிவார். அதுபோன்று தேவனுக்கு ரகசியம் உண்டு. அதை தேவன் மாத்திரமே அறிவார். இப்பொழுது அவருடைய இரகசியம் அவருடைய மணவாட்டிக்கு ஏழாம் சபைக்கால தூதன் மூலமாக வெளிப்படுத்தப்படுவதாக இருக்கிறது. அதே வேளையில் வெளியாக்கப்படாத மறைபொருளும் இல்லை, அறியப்படாத ரகசியங்களும் இல்லை என மத்.10:26 லூக்.12:2 ல் காண்கிறோம். இந்த தேவ ரகசியமானது பிதாவாகிய தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் உரிய ரகசியம். (கொலோ.2:2) இயேசு : மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள் என்றார். சீமோன் பேதுரு : நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். இந்த வாக்கியங்களின் அடிப்படையில் இயேசு தான் கிறிஸ்து என காண்கிறோம். இதைத்தான் அப்போஸ்தலர்கள் பிரசங்கித்தார்கள். (அப்.5:42) பிதாவாகிய தேவன் யார்? பிலிப்பு, இயேசுவை நோக்கி பிதாவை எங்களுக்கு காண்பியும், அது எங்களுக்கு போதும் என்றான். இயேசு : என்னை கண்டவன் பிதாவை கண்டான் அப்படியிருக்க பிதாவை எங்களுக்கு காண்பியும், என்று நீ எப்படி சொல்கிறாய் என்றார். (யோ.14:8,9) பிதா, பிதா என்று அடிக்கடி இயேசு பேசுகிறாரே அந்த பிதாவை காணவேண்டும் என்ற வாஞ்சை சீஷர்கள் உள்ளத்தில் எழுந்தது, அது சரியே. பிதா என்று ஒரு தனிப்பட்ட ஒரு நபர் இருந்தால் தானே, இயேசு சீஷர்களுக்கு காண்பிக்க முடியும். ஆதலால் இயேசு அவர்களுக்கு என்னைக் கண்டவன் பிதாவை கண்டான் என்றார். ஆக பிதாவாகிய தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் உள்ள ரகசியம் என்ன? அவர் மாம்சத்தில் பிறந்த இயேசுவேயன்றி வேறுயாருமில்லை. ஏழாம் சபைக்கால தூதன் மூலம் இந்த ரகசியம் வெளிப்படுத்தப்பட்டது. அது இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராய் இருக்கிறார் என்பது தான். அவரே பிதா, அவரே குமாரன் அவரே பரிசுத்த ஆவி. அவர் பிதாவாக நம்மேல், குமாரனாக நம்மோடு, பரிசுத்த ஆவியாக நமக்குள் இதுதான் தேவ ரகசியம்.

72. அப்படியானால் தேவரகசியங்கள் (Mystries of God) என்ன? இது மத்.13:11ல் கூறப்பட்டுள்ள பரலோக ராஜ்யத்தின் ரகசியங்கள். இவை ஒன்றல்ல, இரண்டல்ல அநேகம் ஆகும். இவைகள் அனைத்தும் சகோ.பிரன்காம் ஊழியத்தில் வெளிப்படுத்தப்படவில்லை என்பது எனது கணிப்பு. ஏழாம் தூதனுக்கடுத்தது தேவரகசியம் மாத்திரமே. பரலோகராஜ்யத்தின் ரகசியங்கள் அனைத்தும் அல்ல. ஏழுமுத்திரைகளுக்கடுத்த ரகசியங்களை குறித்து, நாம் ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு செய்தியில் தியானிக்கிறோம். ஏழு முத்திரைகளில் என்ன அடங்கியிருக்கிறதோ அது மாத்திரமே வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஏழு முத்திரைகள் ஆட்டுக்குட்டியானவரால் உடைக்கப்பட்டது. யோவான் அதை காண்பதற்காக அழைக்கப்பட்டான். அவன் கண்டதை எழுதிவைத்தான். அது அடையாளங்களாக / சின்னங்களாக இருந்தது. காலம் நிறைவேறினபோது கிறிஸ்து அதன் ரகசியங்களை தேவதூதர்களை கொண்டு ஏழாம் தூதனுக்கு வெளிப்படுத்தினர். தனக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளை அவர் செய்தியாக பிரசங்கித்தார். இப்பொழுது ஏழு முத்திரைகளில் அடங்கியிருந்ததையும், அதிலிருந்து வெளிப்படுத்தப்பட்டவைகளையும் நாம் அறிவோம்.

73. ஆக பிரியமானவர்களே **ஐந்து வகை ஊழியங்கள் சபை எடுத்துக்கொள்ளப்படும்வரை உண்டு. அதுவரை அந்த ஊழியங்களில் தரிசனங்களும், வெளிப்பாடுகளும் உண்டு.** தரிசனங்களும் வெளிபாடுகளும் ஏழாம் சபைக்கால தூதனோடு முடியவில்லை. கவனியுங்கள். அப்.பவுல் கொரியந்தியருக்கு எழுதும்போது : நீங்கள் கூடி வந்திருக்கும்போது உங்களில் ஒருவன் சங்கீதம் (Psalm) பாடுகிறான். ஒருவன் போதகம்(Doctrenes) பண்ணுகிறான். ஒருவன் அந்நிய பாஷை (Tongues) பேசுகிறான். ஒருவன் ரகசியங்களை (Revelations) வெளிப்படுத்துகிறான். ஒருவன் வியாக்கியானம் (Interpretation) பண்ணுகிறான். சகோதரரே இது என்ன? சகலமும் பக்திவிருத்திக்கேதுவாக செய்யப்பட கடவது. (1கொரி.14:26) இது என்ன? **சபை கூடி வரும்வரை தரிசனங்களும் வெளிப்பாடுகளும் உண்டு.** காரியங்கள் இப்படியிருக்க, இந்த பிரன்காம் பிரன்காம் என்றுகூறி சுற்றிதிரியும் ஓநாய் கூட்டத்தினர் யார்? சத்தியத்தை சீரழிக்க பிரயாசப்படும் பிசாசின் கூட்டத்தாரே. நான் ஏழாம் சபைக்கால தூதனாக சகோ.பிரன்காமை முழுமனதோடு ஏற்றுக்கொள்பவன். அவர் ஒரு தீர்க்கதரிசி. ஆனால் நான் பிரன்காம் பிரன்காம் என கூறிக்கொண்டு சத்தியத்தை கறைப்படுத்துகிறவன் அல்ல. அவருடைய ஊழியம் என்னுடையதை விட மிக மிக உயர்ந்த நிலையில்

மேன்மையானது. அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே நிலைத்திருக்கக்கடவன். (1கொரி.7:20) அழைக்கப்பட்டவன். தன் அழைப்பையும் தெரிந்துக்கொள்ளுதலையும் உறுதிப்படுத்த ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.(2பேது.1:10) என் அழைப்பில் நான் ஜாக்கிரதையாக உள்ளேன்.

74. அன்று ஒரு பக்தன் பாடினான் : வேதப்புத்தகமே, வேதப்புத்தகமே, என் விலையேறப் பெற்ற செல்வம் நீயே. ஆனால் இன்று கள்ளகபடமுள்ள வேலையாட்கள், ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்துக்கொண்டு : பிரன்காம் செய்தி புத்தகமே, பிரன்காம் செய்தி புத்தகமே எனது நித்திய ஜீவன் நீயே என்று பாடுகிறார்கள். இது ஒரு அக்கிரம சிந்தையாகும். இவர்கள் எல்லாம் ஆக்கினை தீர்ப்படைவார்கள். இது நிச்சயம்.

75. தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட நல்ல மனிதர்கள் இந்த செய்தியை பிரசிங்கிக்கிறார்கள். இவர்கள் செய்தியைக்கொண்டு எந்த வகையிலும் பணம் சம்பாதிப்பவர்கள் அல்ல. மாறாக இந்த கள்ளகபடமுள்ள வேலையாட்கள் ஜனங்கள் மத்தியில் செய்தி கொண்டிருந்த செல்வாக்கை அழிக்கப்பார்க்கின்றனர். ஆதலால் தான் சகோ.பிரன்காமை குறித்து மேன்மைபாராட்டி மேன்மைபாராட்டி ஜனங்கள் மத்தியில் அவர்மீது ஒரு வெறுப்பை உண்டாக்குகிறார்கள். நான் ஒரு முறை ஒரு நபரை சந்தித்து, ஒரே தேவன் அவர் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, பாவமன்னிப்புக்கென்று ஒரே ஞானஸ்நானம் அது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் என்று பேசிக்கொண்டிருக்கும்போது எங்கள் சம்பாஷனையில் ஏழாம் சபைக்கால தூதன் சகோ.பிரன்காம் பெயர் அடிபட்டது. அப்பொழுது அவர் என்னிடம் முதாலாவது அவர் தூதன் என்பீர்கள், பின்பு அவர் கிறிஸ்து என்பீர்கள், பின்பு அவர் சர்வ வல்லமையுள்ள தேவன் என்பீர்கள். ஆதலால் இப்படிப்பட்ட உபதேசம் எனக்கு தேவையில்லை என்றார். இந்த கள்ளகபடமுள்ள வேலையாட்களின் போதனை அந்த ஆத்துமா இரட்சிப்பின் வழியை அறிவதற்கு இடறலாக இருந்தது. இந்த பிரன்காம் கிறிஸ்து கூட்டத்தினருக்கு கழுத்தில் கட்ட எந்திரக்கல் ஆயத்தமாயிருக்கிறது. முற்காலத்தில் திருச்சியில் ஆனந்தவேல் என்பவர் இருந்தார். இவர் பக்கா கிறிஸ்து பிரன்காம் விசுவாசி. கொஞ்சம் ஆத்துமாக்களை தன் வலையில் சிக்க வைத்துக்கொண்டார். அது எப்படி நிகழ்ந்தது என அவரிடம் வினாவினேன். அதற்கு அவர் நான் ஒரு நபரை சந்திக்கும்போது முதலாவது அவரிடத்தில் ஒரே தேவன் உண்டு என கூறுவேன். அவரை கவர்ந்து கொள்வேன். பின் சில காலம் கழித்து ஞானஸ்நானம் பற்றி பேசுவேன். பின் அவருக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுப்பேன். பின் என்மீது அவருக்கு முழு நம்பிக்கை வந்துவிடும். காரியத்தை நன்கு உறுதி செய்த பின்பு அவரிடம் ஒரு தீர்க்கதரிசி உண்டு என பேச ஆரம்பிப்பேன். அவர் பெயர் வில்லியம் மாரியன் பிரன்காம் எனக்கூறி அவரை முற்றிலுமாக என்பக்கம் இழுத்துக்கொள்வேன். அதன்பின்பு அவர்தான் கிறிஸ்து, நாம் கர்த்தராகிய பிரன்காம் கிறிஸ்துவையே சேவிக்க வேண்டும் என தூண்டில் போட்டு மீனை முற்றிலுமாக என்பக்கம் இழுத்துக்கொள்வேன். பாருங்கள் எவ்வளவு நயவஞ்சகமாக இவர்கள் தங்கள் ஊழியத்தில் செயல்படுகிறார்கள் என்று, பல தந்திரங்களை கையாண்டு தங்களுடைய சாதூரிய ஞானத்தினால் பொறுமையாக ஆத்துமாக்களை தங்களிடம் தக்கவைத்துக் கொள்கிறார்கள். உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தான் இந்த பிரன்காம் கிறிஸ்து கோஷ்டியினர். இவர்கள் எவ்வளவுதான் தீவிரமாக யுத்தம் செய்தாலும் ஜெயம் கொள்ளபோவது இல்லை. ஏனென்றால் தீர்க்கதரிசியின் தரிசனத்தில் அந்த பாம்பு அடிபட்டு, காயப்பட்டுவிட்டது. நிச்சயமாக அது மரித்துப் போகும், இனி பிழைக்காது.

76. மேலும் இந்த எலியேசர் தனது பரலோக ஐசுவரியம் : எல்லாம் முடிந்தது என்ற செய்தியில் : எலியா முதலில் வருகையில், அவன் பிரசங்கம் மாத்திரமே செய்தான் என்று எழுதுகிறார். இவர் ஒழுங்கும் கிரமமுமாக வேதவாக்கியங்களை வாசிப்பது இல்லை, செய்திகளை தியானிப்பதும் இல்லை. ஆங்காங்கு மாடு புல் மேய்வது போன்று மேய்ந்து, தன் மனம்போக்கில் மாறுபாடானவைகளை எழுதுகிறார். 1இரா.17:21 யை வாசிக்கும் போது : சீதோனுக்கடுத்த சாறிபாத் ஊரில் அந்த விதவையின் இறந்த மகனுக்காக கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ண, கர்த்தர் எலியாவின் சத்தத்தை கேட்டார். அவன் ஆத்துமா அவனுக்குள் திரும்பி வந்தது. அவன் பிழைத்தான் எனக் காண்கிறோம். வேதவாக்கியங்களை, ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்திகளை அறிந்துக்கொள்ள முடியாதபடி இவருடைய கண்கள் குருடாக்கப்பட்டிருப்பதால், குருடர்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறார். அடுத்து இருமுறை அகசியா ராஜாவின் ஏழு தலைவர்களையும் அவனுடன் ஐம்பது பேர்களையும் தேவனுடைய மனுஷனானால் அக்கினி வானத்திலிருந்து இறங்கி அவர்களை பட்சிக்கவில்லையா? (2ராஜா.1:10-12) தன் சால்வையை எடுத்து முறுக்கி யோர்தானின் தண்ணீரை அடிக்க, அது இருபக்கமாய் பிரியவில்லையா? (2ராஜா.2:8) எலியா தன் முதல் வருகையில் செய்த அற்புதங்கள் இவ்வாறாயிருக்க, இவர் எலியா பிரசங்கம் மாத்திரமே செய்தான் என வேதவாக்கியங்களை அறியாது புலம்புகிறது என்ன?

77. அடுத்து இரண்டாவது முறையாக எலியா வரும்போது, அவன் பிரசங்கித்தலையும் அடையாளங்களையும், அவ்விரண்டையும் செய்யக்கூடியவனாக இருப்பான் என சகோ.பிரன்காம் ஊழியத்தை குறிப்பிடுகிறார். ஆனால் எலியா எத்தனை முறை வருகிறான்? முதலில் எலியா, பின் அவன் ஆவி எலிசாவில், அதன்பின் யோவான் ஸ்நானன், அடுத்துதான் நான்காவதாக ஏழாம் சபைக்கால தூதன் மீது, மல்கியா 4அதி நிறைவேறத்தக்கதாக. ஐந்தாவது மீண்டும் அவன் இரு சாட்சிகளில் ஒருவனாக காணப்படுகிறான். அப்பொழுது மரணத்தை சந்திக்கிறான். இதுவரை எலியா மரணத்தை சந்தித்தது இல்லை. இங்கு யோவான் ஸ்நானன் மாத்திரம் அற்புதங்களை செய்ததாக ஆதாரங்கள் இல்லை. மற்ற அனைவரும் அற்புத அடையாளங்களை செய்தவர்களே.

78. **சகோ. பிரன்காமின் மூன்று ஊழியங்கள் : அடுத்து சகோ.பிரன்காமுக்கு மூன்று ஊழியங்கள் உண்டு. ஒன்று சுவிசேஷம், அடுத்தது தீர்க்கதரிசியின் ஊழியம். மூன்றாவது மனுஷகுமாரனின் ஊழியம் என்கிறான். இதுவும் தவறு.**

**இதுகுறித்து சகோ.பிரன்காம் தான் மனுஷகுமாரன் அல்ல என்பதை மிகவும் திட்டவட்டமாக கூறுகிறார். சகோ.பிரன்காம் கூறுவதை கவனியுங்கள் : அது ஏழாம் தூதன் அல்ல. அது மனுஷகுமாரன் வெளிப்படுதலாகும். அது தூதன் அல்ல. மறைபொருளாயிருந்த தேவனுடைய ரகசியம் வெளிப்படுதலாகும். அது மனிதன் அல்ல, அது தேவன். தூதன் மனுஷகுமாரன் அல்ல. ஆனால் அவரால் அனுப்பப்பட்ட தூதன், மனுஷகுமாரன் என்பது கிறிஸ்து. அவரைத்தான் நீங்கள் புசித்து வருகிறீர்கள். நீங்கள் மனிதனின் வார்த்தையை புசிக்கவில்லை. மனிதனின் வார்த்தை தவறாக போக ஏதுவுண்டு. ஆனால் நீங்களோ என்றென்றைக்கும் தவறாத மனுஷகுமாரனின் சரீரமாகிய வார்த்தையை புசித்து வருகிறீர்கள். இந்த அளவுக்கு சகோ.பிரன்காமின் வார்த்தை தெளிவாகயிருந்த பின்னும் மனிதருடைய மனதை மயக்கும் இந்த மூடர்கள் சகோ.பிரன்காம் தான் கிறிஸ்து / மனுஷகுமாரன் எனக்கூறி மக்களை வஞ்சிக்கிறார்கள் திசை திருப்புகிறார்கள்.**

79. **பிரன்காம் : சர்வவல்லமையுள்ள தேவன். இது எலியேசரின் புதிய கண்டுபிடிப்பு :** அடுத்து இவரது வெளியீடு, பதிப்பு.10/2018 ன் தலைப்பு : நம்முடைய நாட்களில் திரைநீக்கப்பட்டுள்ள சர்வ வல்லமையுள்ள தேவன். (The all mighty God unveiled in our days) என்பதாகும். இந்த இதழில் இவர் ஏழாம் சபைக்கால தூதன் சகோ.வில்லியம் மாரியன் பிரன்காமை கீழ்கண்டவாறு அலங்கரிக்கிறார்.

(அ) தாவீது தேவனை எழுத்து வடிவில் இருந்த நியாயப்பிரமாணத்தின் மூலமாக மாத்திரமே தரிசித்திருந்தான். ஒருபோதும் அவரை அவன் ஒரு நபராக தரிசிக்கவில்லை. ஆனால் அந்த மகத்தான தேவனை ஒரு நபராக மணவாட்டி என்னும் ஸ்தானத்தை பெற்றவர்கள் தரிசித்தார்கள். இங்கு இந்த மகத்தான ஒரே நபர் வில்லியம் மாரியன் பிரன்காம் என்பதை மிக்க நாசுக்காக எழுதுகிறார்.

(ஆ) **சமாரியஸ்திரீ :** அவர் (இயேசு) உனக்கு ஐந்து புருஷர்கள் இருந்தார்கள், இப்பொழுது இருப்பவன் ஆறாவது புருஷன், ஆனாலும் நீ, உனக்கு புருஷன் இல்லை என்று கூறியது சரியே என்றார். அவள் ஆண்டவரே என்றாள், அது என்ன? ஆண்டு கொள்பவர் : மணவாளன். அவள், ஆண்டவரே நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன், மேசியா வருகிறார் என்பதை அறிவேன், அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார் என்றாள். ஆம் மேசியா வரும்போது எல்லாவற்றையும் முழுவேதாகமத்தின் ரகசியங்கள் அனைத்தையும், பரம ரகசியமான ஏழு முத்திரைகளின் ஏழு சத்தங்கள் கூறியவைகள் அனைத்தையும் வெளிப்படுத்துவார். அவர் உன்னுடனே பேசுகிற நானே அவர் என்றார். மணவாட்டியுடன் பேசியவர் யார்? ஏழாம் சபைக்கால தூதன் ஏழு முத்திரைகளின் ரகசியம் என்ற தலைப்பில் அந்த முத்திரைகளின் ரகசியம் என்ன என்பதை செய்தியில் கொடுத்துள்ளார். ஆக இங்கு ஏழாம் சபைக்கால தூதன் சகோ.வில்லியம் மாரியன் பிரன்காமை அந்த சமாரியஸ்திரீ கூறிய மேசியாவாக சித்தரிக்கிறார். ஆனால் இஸ்ரவேலரில் அநேகர் அவர் (இயேசு) ஒரு தீர்க்கதரிசி மாத்திரமே என்று அறிந்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் இஸ்ரவேலரில் ஒரு சிறு கூட்டத்தாருக்கு மாத்திரமே இயேசு மேசியாவாக, கர்த்தராக, தேவனாக இருந்தார். அந்த சிலரில் ஒருவராக இருப்பதே இன்றைய மணவாட்டி ஸ்தானம். நாம் சகோ.பிரன்காமை தீர்க்கதரிசி என்று விசுவாசிக்கிறோம். ஆனால் அவர் தீர்க்கதரிசி மாத்திரம் அல்ல. அவர் மேசியா, கர்த்தர், தேவன் என இந்த மதிகேடன், கள்ளகபடமுள்ள வேலையாள் பிரகடணப்படுத்துகிறான்.

(இ) **இயேசு – பிரன்காம்.** இவருடைய மூளை எந்தஅளவுக்கு கீழ்தரமாக வேலை செய்கிறது என்பதை கவனியுங்கள். இவருடைய பித்தலாட்டத்தை பாருங்கள். கர்த்தர் ஆபிரகாமின் சந்ததியாகிய அவரை (இயேசுவை) கல்வாரியில் இரண்டாக கிழித்து, அவருடைய ஜீவனை எடுத்துக்கொண்டார். சரீரத்தை உயிரோடே எழுப்பி, பரலோகத்தில் சிங்காசனத்தில் உட்கார வைத்தார். அவருடைய ஆவியை பெந்தெகொஸ்தே அன்று சபைக்கு அனுப்பி, சபையானது அவரிலிருந்த அதே ஆவியை பெற்றுக்கொண்டு ஒன்றாக இணையும்படி செய்து, அவரை நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராக செய்து உடன்படிக்கையை உறுதிப்படுத்தினார். அந்த உடன்படிக்கையானது ஒரு சரீரத்தில் கிழிக்கப்பட்ட இரண்டு பாகங்களாகும். பரலோகத்திலிருந்து அந்த பாகமும் இறங்கி வந்து (இயேசு) பூமியில் உள்ள மறுபாகத்தை (பிரன்காம்) ஆட்கொள்ளும்போது அந்த சரீரத்தை ஆட்கொண்ட அதே ஜீவன், இந்த சரீரத்தை ஆட்கொண்டு, அவர் அன்று செய்த அதே கிரியைகளை இன்றும் செய்யப்படும்போது அது அந்த இரண்டு துண்டுகளும் இணைக்கப்பட்டுவிட்டது என்பதை உறுதிப்படுத்துவதாகும். ஆகவே கிழிக்கப்பட்ட இரண்டு துண்டுகளையும் இணையுங்கள். (இயேசு – பிரன்காம்) வாக்குதத்தம் கிரியைகள் இரண்டையும் இணைத்துப் பார்ப்போமானால் அப்பொழுது அந்த சர்வ வல்லமையுள்ள தேவன் திரை நீக்கப்பட்டு நம்முடைய நாட்களில் பூமியின் மேல் மீண்டும் நடந்தார் என்பதை காணலாம். அந்த காலத்தில் தேவன் ஒரு மனுஷனுக்குள், தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்குள் இருந்தார். அவர் தீர்க்கதரிசி மாத்திரம் அல்ல. அவர் தேவன். இன்று அவர் அந்த நோக்கத்திற்காக தெரிந்துக்கொண்ட மனுஷன் கிரியை செய்தார். மனித உருவில் தேவன். சகோ.பிரன்காமிற்கு இவர் கொடுக்கும் புகழ்ச்சிகளை கவனித்தீர்களா. இவையாவும் வேதவாக்கியங்களுக்கு புறம்பானது. மேலும் இவர் கூறுகிறதாவது. உண்மையாகவே கிறிஸ்து வரும்போது இவர் செய்கிற காரியங்களை விட அதிகம் செய்வார் என்று எதிர்நோக்கியிருந்தனர். அது எதிர்காலத்தில் நிகழவேண்டிய ஒரு தரிசனமாக இருந்தது. அது இன்று சகோ. பிரன்காம் ஊழியத்தில் நிறைவேறிவிட்டது. இவனுடைய சிந்தனை எந்த அளவுக்கு நயவஞ்சகமானது என்பதை பாருங்கள்?

(ஈ) **லூக்.17:30** ன் படி அதே தேவன் இந்நாளுக்குரிய மனுஷகுமாரனாக தோன்றினார். (இங்கு இவர் சகோ.பிரன்காமை குறித்து கூறுகிறார்) அவரிடம் நீர் இயேசுவா? நீர் கிறிஸ்துவா? என்றெல்லாம் அநேக கேள்விகள் கேட்டார்கள். அவர் இல்லை என்று கூறினார். லூக்.17 கடைசி நாட்களில் மறுபடியும் மனுஷகுமாரன்.

(உ) இக்காலத்திற்கென்று வாக்குதத்தம் பண்ணப்பட்டிருந்த வார்த்தை மாம்சமாகி வெளிப்பட்டு, பூமியின்மேல் நின்றார். (இங்கு இவர் சகோ.பிரன்காமை குறித்து கூறுகிறார்)

(ஊ) நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளை பின்பற்றுகிறவர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தை கண்ணாரக்கண்டவர்களாகவே இதை உங்களுக்கு அறிவிக்கிறோம் – பேதுரு. அதேபோலவே இன்று வெளிப்பட்ட தேவனைக்குறித்து ஒரு கண்கண்ட சாட்சி. சகோ.பிரட் சோத்மேன் – சகோ.பிரன்காமுடன் ஊழியக்காலம் முழுவதும் அவருடன் கூடயிருந்த ஒரு சாட்சி. அவர் கூறுவதாவது : ஒவ்வொரு சபையும் சாத்தானை ஆராதிக்கிறது, வில்லியம்

மரியன் பிரன்காம் இயேசு கிறிஸ்துவைவிட பெரியவர், பிரன்காம் பெயரால் ஜெபம் ஏறேடுக்கப்படவேண்டும், பிரன்காம் சர்வ வல்லையுள்ள தேவன், ஏழு முத்திரைகளை திறந்தார். நம்முடைய கூடாரமாகிய பிரன்காம் மரிக்கவில்லை. ஜீவிக்கிறவராகவே இருக்கிறார். இவ்வாறாக ஜோர்ஜ் எலியேசர் ஏழாம் சபைக்கால தூதன் பிரன்காமை குறித்து எழுதியுள்ளது சத்தியத்திற்கு விரோதமான பொய். இப்பிரபஞ்சத்தின் ஞானம். இவன் எத்தனுமாய், இவனால் நடத்தப்படுகிறவர்கள் நாசமடையவர்களுமாயிருக்கிறார்கள். இவனுடைய ஞானம் பரத்திலிருந்து வந்த ஞானம் அல்ல. மாறாக லௌகிக சம்பந்தமானதும், ஜென்ம சுபாவத்திற்குரியதும், பேய்தனத்திற்கடுத்ததுமாயிருக்கிறது. இவனது போதனைகள் ஒரு நாள் இவனுக்கு மாத்திரமல்ல, இவனுடைய போதனைகளை விசுவாசிக்கிறவர்களுக்கு வெட்கத்தையும் தலைகுனிவையும் கொண்டுவரும்.

80. தாவீது தேவனை எழுத்து வடிவில் இருந்த நியாயப்பிரமாணத்தின் முலமாக தரிசித்தான் என எழுதுகிறார். இதை நாம் ஏற்றுக்கொள்ளலாம். ஏனென்றால் தாவீது நியாயப்பிரமாணத்தின் காலத்தில் இருந்தான். ஆதலால் நியாயப்பிரமாணத்தின் மூலமாக தரிசித்தான் என கூறலாம். ஆனால் நியாயபிரமாணத்திற்குரியவர் யார்? அவர் கர்த்தர். கர்த்தர் நம்முடைய நியாயப்பிரமாணிகர். ஆதலால் தாவீது ஒரே நபராக அவரை தரிசித்தானேயன்றி, இருவராகவோ, மூவராகவோ, பலராகவோ அவரை தரிசிக்கவில்லை. அதுபோன்று மணவாட்டி கிருபையின் காலத்தில் இருக்கிறாள். ஆதலால் அவரை கிருபையின் மூலமாக தரிசிக்கிறாள் என எடுத்துக்கொள்ளலாம். மணவாட்டி கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டாள். இது தேவனுடைய ஈவு. ஆக தாவீதும் கிறிஸ்துவின் மணவாட்டியும் தேவனை ஒரே நபராக தரிசித்தார்களேயன்றி இருவராகவோ, மூவராகவோ, பலராகவோ இல்லை. ஸ்தாபன திருத்துவ சபையார் தான் அவரை பலராக தரிசிக்கிறார்கள்.

81. சமாரியஸ்திரீக்கு அடுத்தகாரியத்தில் : அவள் கூறியது என்ன? கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார். அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார் என்றாள். இவள் மேசியா / கிறிஸ்து என்று யாரைகுறித்து கூறுகிறாள். இவள் மோசே கூறிய தீர்க்கதரிியை நினைவு கூர்ந்து கூறுகிறாள். உன் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவில் உன் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார். அவருக்கு செவி கொடுப்பீர்களாக.(உபா.18:15) ஆக இந்த தீர்க்கதரிசி வந்து எங்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார் / போதிப்பார் என்று கூறினாள். அவள் ஒருபோதும் மேசியா வந்து முழு வேதாகமத்தின் ரகசியங்கள் அனைத்தையும், பரம ரகசியமான ஏழு முத்திரைகளின் ஏழு சத்தங்கள் கூறினவைகளை வெளிப்படுத்துவார் என கூறவில்லை. இது இந்த பேலியாளின் மகன் வேதவாக்கியங்களோடு ஒன்றை கூட்டுவதாகும். சமாரியஸ்திரீ கண்ட இயேசு : கிறிஸ்து தான். மேசியா தான், கர்த்தர் தான், தேவன் தான். இதில் சந்தேகமே இல்லை. ஆனால் ஏழாம் சபைக்கால தூதன் ஒரு தீர்க்கதரிசி. அத்துடன் அவருக்குரிய ஸ்தானங்கள் முடிவு பெற்றன. தீர்க்கதரிசிக்கு தேவனுடைய வார்த்தை வருகிறது. தூதன் தீர்க்கதரிசியாக தம்மை நிருபித்தார். அவரை மேசியாவாக, கர்த்தராக, தேவனாக வருணிப்பது பிசாசின் தந்திரங்கள். விசுவாசிகளின் விசுவாசத்தை சீர்குலைக்கும் ஒரு பாதக செயல். அந்த பாதகசெயலுக்கு ஜோர்ஜ் எலியேசர் உடந்தை. யூதாசைப்போன்று இவனும் ஒரு பணிக்காக பிறந்து, வளர்ந்து தன் பணியை செய்து வருகிறான்.

82. **வாக்குத்தத்தமா அல்லது உடன்படிக்கையா?** ஆபிரகாமின் சந்ததி, தம்முடைய ஆவியை பெந்தெகொஸ்தே அன்று சபைக்கு அனுப்பி, சபையானது அவர்களிலிருந்த அதே ஆவியை பெற்றுக்கொண்டு, ஒன்றாக இணையும்படி செய்து, அவரை நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராக செய்து உடன்படிக்கையை உறுதிப்படுத்தினார். இந்த உடன்படிக்கை குறித்து வேதவாக்கியங்களில் எங்கு கூறப்பட்டுள்ளது? இது எலியேசரின் மனோபாவனை தானே. இது உடன்படிக்கையா? அல்லது வாக்குதத்தமா? இயேசு அப்போஸ்தலர்களுக்கு கொடுத்த கட்டளை என்ன? நீங்கள் எருசலேமை விட்டு போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குதத்தம் நிறைவேற காத்திருங்கள் என்பதே. (அப்.1:5) நான் பிதாவை வேண்டிக்கொள்வேன். அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்கு சத்திய ஆவியாகிய, வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்கு தந்தருளுவார். உலகம் அந்த சத்திய ஆவியானவரை காணாமலும், அறியாமலும் இருக்கிறபடியினால் அவரை பெற்றுக்கொள்ளமாட்டாது. அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால் நீங்கள் அவரை அறிவீர்கள்.(யோ.14:17,18) இதுதான் அந்த இணைப்பு. இந்த இணைப்பு பெந்தெகொஸ்தே நாளன்று உறுதிப்படுத்தப்பட்டது. வேதவாக்கியங்களின் அடிப்படையில் உள்ள இந்த விளக்கங்களை விட்டுவிட்டு அந்த வாக்குதத்தம் / உடன்படிக்கையானது ஒரு சரீரத்தில் கிழிக்கப்பட்ட இரண்டு பாகங்களாகும். ஒரு பாகம் பரலோகத்திலிருந்து இறங்கி வந்த இயேசு, பூமியிலுள்ள மறுபாகத்தை பிரன்காம் ஆட்கொண்டார் என்பது பேய்தனத்திற்கு அடுத்த உபதேசங்களாகும். இவன் ஸ்ரீலங்காவில் மக்கள் மத்தியில் ஆட்டுத்தோலை போர்த்திக்கொண்டு திரியும் ஒரு ஓநாயே.

83. **மனித உருவில் தேவன் – பிரன்காம் :** இது குறித்து இவர் எழுதுகிறார் : அந்தகாலத்தில் தேவன் ஒரு மனிதனுக்குள், தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்குள் இருந்தார். அதை நாம் விசுவாசிக்கிறோம். அவர் தீர்க்கதரிசி மாத்திரம் அல்ல, அவர் தேவன். (இது முற்றிலும் உண்மை – கா.யோ) இப்பொழுது பிசாசு எவ்வாறு வஞ்சிக்கிறான் என்பதை கவனியுங்கள். இங்கு அவர் அந்த நோக்கத்திற்காக தெரிந்துக்கொண்ட ஒரு மனிதன் மூலமாக கிரியை செய்தார். மனித உருவில் தேவன். இந்த பேலியாளின் மகன் மனித உருவில் தேவன் என்று சகோ.பிரன்காமை மறைமுகமாக குறிப்பிடுகிறான். இங்கு கவனியுங்கள் : தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பியதின் நோக்கம் என்ன? தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுபோகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரை தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகதீர்க்கும்படிக்கு தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாது, அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அனுப்பினார் என யோவான் எழுதுகிறான்.(யோ.3:16,17) இன்னும் அப்.பவுல் என்ன

எழுதுகிறார்? பிள்ளைகள் மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க அவரும் அவர்களை போல மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவரானார். மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசானவனை தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும் ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும் படிக்கும் அப்படியானார். (எபி.2:14,15) இதுதான் தேவன் தம்முடைய குமாரனை உலகிற்கு அனுப்பியதின் நோக்கம்.

84. **இப்பொழுது ஏழாம் சபைக்கால தூதனுடைய நோக்கம் / பணி என்ன? கர்த்தர் ஏனைய ஆறு சபைக்கால தூதர்களுக்கும் செய்தி கொடுத்தது போல, ஏழாம் சபைக்கால தூதனுக்கும் சபைக்குரிய செய்தியை கொடுத்தார். அத்துடன் அவர் மல்கியா 4 உரைத்தபடி பிள்ளைகளின் இருதயத்தை பிதாக்களிடத்திற்கு திருப்புவார். இரண்டாவதாக வெளி.10ல் உள்ள ஏழு முத்திரைகளின் இரகசியத்தை அந்த ஏழு இடிமுழக்கங்களின் இரசியத்தை வெளிப்படுத்துவார். இந்த தெய்வீகமாக வெளிப்படுத்தப்பட்ட இரகசிய சத்தியங்கள் பிள்ளைகளுடைய இருதயத்தை பெந்தெகொஸ்தே பிதாக்களிடத்திற்கு திருப்பும். (லவோதிக்கேயா சபைக்காலம் பக்கம்.463 முதல் பத்தி WBGNS வெளியீடு) இத்துடன் சகோ.பிரன்காம் கூறியுள்ளதை கவனியுங்கள். லவோதிக்கேயா சபை தீர்க்கதரிசி – செய்தியாளனுக்கும், இயேசுவின் முதலாம் வருகைக்கு முன்னோடியான தீர்க்கதரிசி செய்தியாளன் யோவானுக்கும், மற்றொரு ஒப்பீட்டை நான் சொல்ல விரும்புகிறேன். யோவான் ஸ்நானனை ஜனங்கள் மேசியா என்று தவறாக எண்ணினார்கள். (யோ.1:19,20) எருசலேமிலிருந்து யூதர்கள் ஆசாரியரையும் லேவியரையும் யோவானிடத்தில் அனுப்பி நீர் யார் என்று கேட்டபோது அவன் மறுக்காமல் அறிக்கையிட்டதுமின்றி நான் கிறிஸ்து அல்ல என்றும் அறிக்கையிட்டான். இப்பொழது இந்த கடைசி நாளின் தீர்க்கதரிசி – செய்தியாளனும் கர்த்தருக்கு முன்பாக மகத்தான வல்லமை கொண்டிருப்பான். (இங்கு சகோ.பிரன்காம் தன்னை குறிப்பிடுகிறார்) ஆதலால் அவரை கர்த்தராகிய இயேசு என்று தவறாக எண்ணுவார்கள். காலத்தின் முடிவில், அவர்கள் இதை நம்பத்தக்கதாக, பூவில் ஒரு ஆவி இருந்து அவர்களை வஞ்சிக்கும். (இப்பொழுது எலியேசரையும், பிரன்காம் கிறிஸ்து விசுவாசிகளையும், காக்குவ் பிலிப்புவை சார்ந்தவர்களையும் வஞ்சிப்பது அந்த வஞ்சக ஆவிதான் என்பது உங்களுக்கு புரிகிறதா?) ஆனால் நீங்கள் அதை நம்பாதீர்கள். அவர் (சகோ.பிரன்காம்) இயேசு கிறிஸ்து அல்ல, அவர் தேவனுடைய குமாரன் அல்ல, அவர் உங்கள் சகோதரர்களில் ஒருவர், ஒரு தீர்க்கதரிசி, ஒரு செய்தியாளன், ஒரு தேவனுடைய ஊழியக்காரன். அவருக்கு மகத்தான கணம் செலுத்தப்பட தேவையில்லை. (லவோதிக்கேயா சபையின் காலம் பக்கம்.463) ஆதலால் பிரியமானவர்களே சகோ.பிரன்காமை மனித உருவில் தேவன் என பாராட்டும் இந்த பேலியாளின் மகன் வியாக்கியானத்தை நம்பாதீர்கள், மோசம் போகாதீர்கள், வஞ்சிக்கப்படாதீர்கள்.**

85. மேலும் இந்த மடையன் தன் மனம்போன போக்கில் பிசாசின் வழிநடத்துதலின்படி ஏனோதானோ என்று எழுதுகிறான். எழுதுவது குறித்து சிந்திப்பது இல்லை. அந்த அளவுக்கு அவனுடைய மனநிலை பாதிக்கப்பட்டுள்ளது, இருளடைந்துள்ளது. அன்று அவரை (இயேசு கிறிஸ்துவை) நீர் கிறிஸ்துவா? மேசியாவா? என்று ஜனங்கள் கேட்டபோது அவர் அதை நான் அறிவித்தேன், ஆனால் நீங்கள் அதை விசுவாசிக்க வில்லை என்றார். அவர் எப்படி அதை அறிவித்தார்? நான் செய்கின்ற கிரியைகளே அதற்கு பதில் என்றார். ஜனங்கள் அந்த பதிலை ஏற்று விசுவாசிக்கவில்லை. ஆனாலும் அவர்கள் உண்மையாகவே கிறிஸ்து வரும்போது இவர் (இயேசு) செய்கிற கிரியைகளைவிட அதிகம் செய்வார் என்று எதிர்காலத்தை நோக்கி பார்த்தனர். அது எதிர்காலத்தில் நிறைவேற வேண்டிய ஒரு தீர்க்கதரிசனமாக இருந்தது. அது இன்று நிறைவேறி விட்டது என கூறி சகோ.பிரன்காம் இயேசுவின் ஊழியத்தின் பாதையில் நடந்த அற்புத அடையாளங்களை காட்டிலும் அதிகம் என பெருமைபட்டுக்கொள்கிறான். இப்படிபட்ட நபர்களை என்ன செய்வது? சகோ.பிரன்காம் இயேசு கிறிஸ்துவைவிட ஒன்றும் அநேக / பெரிய அற்புத அடையாளங்களை நடத்திடவில்லை. அப்.யோவான் எழுதியுள்ளதை கவனியுங்கள் : இந்த புஸ்தகத்தில் எழுதியிறாத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷர்களுக்கு முன்பாக செய்தார். (யோ.20:30) இயேசு செய்த வேறு அநேக காரியங்களும் உண்டு. அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுப்படும் புத்தகங்கள் உலகம் கொள்ளாது என்று எண்ணுகிறேன். (யோ.21:25) என்று எழுதுகிறான். ஆம் இயேசுவின் உபதேசங்களையும், அவர் செய்த அற்புத அடையாளங்களையும் குறித்து எழுதப்போனால் எழுதப்படும் புத்தகங்களை இவ்வுலகம் கொள்ளாது. அப்படியிருக்க சகோ.பிரன்காம் செய்த நடப்பித்த அற்புதங்கள் உபதேசங்கள் யாவும் நமது மத்தியில் எண்ணிக்கையில் உள்ளது. ஏ! மடையனே, பிரன்காம் செய்த அற்புதங்களை நடப்பித்தது யார்? இயேசு கிறிஸ்து தானே! இயேசு கிறிஸ்து தம்முடைய அற்புத அடையாளங்களை செய்ய ஒரு கருவியாக சகோ.பிரன்காமை உபயோகித்தார். அதுதானே உண்மை. தமது கிருபையுள்ள வசனத்திற்கு சாட்சியாக அற்புதங்களையும் அடையாளங்களையும் சகோ. பிரன்காம் கையினால் செய்யும்படி அநுகிரகம் பண்ணினார். அதுதானே உண்மை. (அப்.14:3) பின் பிசாசே, நீ சகோ. பிரன்காமை ஏன் மேன்மைபடுத்துகிறாய்? ஆதலால் நீ ஒரு மாறுபாடுள்ள சந்ததியான்.

86. அடுத்து இவன் எழுதியிருப்பதை கவனியுங்கள். போதகன் ஒருவன் பிரன்காமிடம் இவ்வாறு கூறினார் : அவர் சகோ.பிரன்காம் உம்மை தேவனாக்கி விட்டார்கள் என்றான். அதற்கு அவர் அது வேதத்திற்கு அப்பாற்பட்டதல்ல, அதுதான் அது, அது முற்றிலும் அதுவே என்றார். சகோ.பிரன்காம் சொன்ன பதில் சரிதான். ஏனென்றால் முதலாவது அவ்வாறு கூறிய மனிதனை சகோ.பிரன்காம் ஒரு குறைக்காண்பவன் என்கிறார். ஆதலால் தான் அவனுக்கு அவ்வாறாக பதில் கொடுத்ததாக கூறுகிறார். அடுத்து அவர் கூறியது சரியே. ஏனென்றால் : தேவவசனத்தை பெற்றுக்கொண்டவர்கள் தேவர்கள் என்று சொல்லியிருக்கிறதே, தன்னை தேவன் என்று அழைத்தாலும் அதில் வேதவாக்கியம் தவறாததாயிருக்கிறது என்பதை சங்.82:6, யாத்.4:15,16, யோ.10:34,35 வசனங்களை நினைவில் கொண்டு அவ்வாறு கூறுகிறார். ஆதலால் தேவவசனத்தை பெற்றுக்கொண்டவர்கள் தேவர்களே. மேலும் பவுல் செய்த அற்புதங்களை கண்டு இதோ தேவர்கள் மனுஷரூபம் எடுத்து நம்மிடத்தில் இறங்கி வந்திருக்கிறார்கள் என்று ஜனங்கள் கூறவில்லையா? (அப்.14:11) அன்று பவுலும் பர்னபாவும் ஜனங்களை நோக்கி : நாங்களும் உங்களைப்போல

பாடுள்ள மனுஷர்கள்தான் என்றுக்கூறி நீங்கள் ஜீவனுள்ள தேவனிடத்திற்கு திரும்புங்கள் என்றனர். அதேபோன்று தான் சகோ.பிரன்காமும் நானும் உங்கள் சகோதரனோடுஒரு சகோதரன். நீங்கள் ஜீவனுள்ள தேவனிடத்திற்கு திரும்புங்கள் என்று அறிவுரை கூறுகிறார். அடுத்து இந்த இடத்தில் சகோ.பிரன்காம் கூறுவதாவது : தேவன், அவர் வாக்களித்தபடியே மாம்சத்தில் வெளிப்பட்டார் என கூறினார். இதை எழுதி சகோ.பிரன்காம் தன்னைத்தானே கூறியதை போன்ற பாவனையில் எழுதி பிசாசானவன் மக்கள் மனதை திசைதிருப்புகிறான். இங்கு அவர் அடுத்ததொரு காரியத்திற்கு வந்து தேவன் தம்மைக்குறித்து வாக்குதத்தம் பண்ணப்பட்டபடியே மாம்சத்தில் வெளிப்பட்டார் எனக்கூறுகிறார். சகோ.பிரன்காம் ஒரு வாக்குதத்தத்தின்படி மாம்சத்தில் வெளிப்படவில்லை. இவர் ஒரு ஆண் பெண் மாம்ச இச்சையினால் உண்டான இனச்சேர்க்கையினாலே பிறந்தவரேயன்றி, வேதவாக்கியங்களில் வாக்குதத்தம் பண்ணப்பட்டு மாம்சத்தில் வெளிப்பட்ட ஒரு பாத்திரம் இல்லை. உங்களை போன்றும் என்னைப்போன்றும் உலகத்தில் பிறந்தார், வளர்ந்தார். இங்கு ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனை பெற்றாளேயன்றி, இனச்சேர்க்கையின் மூலம் பிறக்கவில்லை. ஏழாம் சபைக்கால தூதன் பிறப்பு மற்றும் அவர் வாழ்க்கைக்கடுத்த காரியங்கள் எதுவும் வேதாகமத்தில் முன்னறிவிக்கப்படவில்லை. ஆனால் ஏழாம் சபைக்கால தூதன் நடப்பிக்கப்போகும் காரியங்கள் முன்னறிவிக்கப்பட்டுள்ளது. (மல்.4:5,6 வெளி.10:6) மேலும் நாம் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும்போது மோசே, எலியா, எலிசா போன்றவர்கள் தீர்க்கதரிசிகளாக இருந்தும் அற்புத அடையாளங்களை செய்தார்கள். அவர்கள் எதையும் தங்கள் சுயமாக செய்யவில்லை. தரிசித்ததை செய்தார்கள். இவர்கள் அனைவரையும் இவர்கள் தங்கள்மீது தேவனுடைய தோலை கொண்டவர்களாக இருந்தார்கள் என்று சொல்ல முடியுமா? தேவன் மோசேயிலிருந்தது எலியாவிலிருந்தது, எலிசாவிலிருந்தது போன்று பிரன்காமிலிருந்து தம்மை வெளிப்படுத்தினார். எப்படி? பவுலிலிருந்து தம்மை வெளிப்படுத்தியது போல.(கலா.1:10) இதற்கு மிஞ்சியது லௌகிக ஞானம் மற்றும் பாவம். ஆதலால் இந்த பிரம்மை பிடித்தவன் கூறுவது தேவன் இந்நாளிலும் தமது தோலை கொண்டவராக பிரன்காமிலிருந்தார் என்பது பிசாசின் வஞ்சகம். பொதுவாக இவனுடைய செய்தியை ஆராய்ந்து தியானிக்கும் போது, இவன் செய்திக்குள் களையை விதைத்து வரும் சாத்தானாகவே இருக்கிறான் என்பதை நான் உறுதி செய்தேன்.

87. அடுத்து இவர் அன்று சிலுவையில் இரட்சிப்பின் கிரையத்தை செலுத்தும்படிக்கு தேவன் இயேசு என்ற நபரில் திரை மறைக்கப்பட்டிருந்தார். தேவனே மாம்சமாகி அதை நிறைவேற்றினார். அவ்வாறாகவே அவர் மீட்பை நிறைவேற்றும் பொருட்டு மறுபடியும் ஒரு மாம்சசரீரத்தில் அதை நிறைவேற்ற வேண்டுமானால் அவர் மறுபடியும் ஒரு மீட்பின் இனத்தானாக வேண்டும். அவ்வாரே நமது மீட்பின் இனத்தான் (இங்கு இவர் சகோ.பிரன்காமை குறிப்பிடுகிறார்) வந்து ஏழு முத்திரைகள் அடங்கிய அந்த புத்தகத்தை எடுத்து முத்திரைகளை உடைத்து மீட்பை நிறைவேற்றினார். அந்த புத்தகத்தை திறந்து அதின் ரகசியங்களை உங்களுக்கு வெளிப்படுத்தியது யார்? அந்த மகத்தான மீட்பின் திட்டத்தை நிறைவேற்றியது யார்? இங்கு எலியேசர் சகோ.பிரன்காமை இனத்தான் மீட்பர் என்றும், இயேசவை இரட்சகர் என்றும் குறிப்பட்டு தமது கள்ளகபடமுள்ள உபதேசத்தை நிலைநிறுத்துகிறார். இது தவறு. ஏசாயா 60:16-ல் கர்த்தராகிய நான் உன் இரட்சகர், உன் மீட்பர். யாக்கோபின் வல்லவர் என்று கூறப்பட்டுள்ளது. ஆக இரட்சகரும், மீட்பரும் ஒருவரே. (I, the LORD, am thy Savior and thy Redeemer, the Mighty one of Jacob) இதே கருத்து மீண்டும் எசாயே.49:26 லும் கூறப்பட்டுள்ளது. எலியேசர் தன் சிந்தனைகளிலே வீணனானான். உணர்வில்லாத இவனுடைய இருதயம் இருளடைந்ததையே நான் காண்கிறேன்.

88. **சகோ.பிரன்காம் ஒன்றான மெய்த்தேவன் என்பது வேறொரு சுவிசேஷம் :** மேலும் இந்த கள்ளகபடமுள்ள வேலையாட்கள் சகோ. பிரன்காமை தேவன் (ஒன்றான மெய்த்தேவன்) என்று அழைத்து வருகிறார்கள். அப்.யோவான் தனது சுவிசேஷத்தில் ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன் என்று எழுதுகிறான். யோ.17:3. This is Life eternal, that they might know thee, the only true God, and Jesus Christ, whom though hast sent இது குறித்து யோவான் மீண்டும் தன் நிருபத்தில் விளக்கம் தருகிறான். அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து என்னப்பட்ட சத்தியமுள்ளவருக்குள்ளும் இருக்கிறோம். இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாய் இருக்கிறார். 1யோ.5:20. And we are in him that is true, even in his Son Jesus Christ, this is the true God and eternal life. வேதவாக்கியங்களின் அடிப்படையில் யோவான் தனது சுவிசேஷத்தில் எழுதியதற்கு தனது நிருபத்தில் விளக்கம் கொடுக்கிறான். மேலும் கவனியுங்கள். தேவன் நமக்கு நித்திய ஜீவனை தந்திருக்கிறார். ஆனால் அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறது என்பதே அந்த சாட்சி. அதாவது தேவன் தம்மை தமது குமாரனில் வெளிப்படுத்துகிறார். பாருங்கள். குமாரனை உடையவன்தான் ஜீவனை உடையவன். தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன். தியானியுங்கள். 1யோ.5:11,12.

89. ஆனால் இது குறித்து சகோ.பிரன்காம் என்ன கூறுகிறார்? இப்பொழுது சகோதரரே, நாம் அறிந்திருப்பது என்னவென்றால் மனுஷன் தேவனாக இருக்க முடியாது. இருப்பினும், மனிதன் ஒரு வகையில் தேவனே. நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு தேவனே. நீங்கள் தேவனோடிருப்பதற்கென்றே சிருஷ்டிக்கப்பட்டீர்கள். ஆனால் நீங்கள் இந்த வாழ்க்கையில் இருக்கும்போது அல்ல. பாருங்கள் இயேசு நம்மைப் போன்று ஒரு மனிதனாக இருந்தார். ஆனால் தேவன் அவருக்குள் இருந்தார். தேவனுடைய பரிபூரணம் அவருக்குள் வாசமாயிருந்தது. இயேசு என்னும் நாமம் உடையவராக இருந்தார். (முதலாம் முத்திரை, பத்தி.283) பரலோக பிதாவே, உம்மை ஆராதிக்கவும் எங்கள் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவை அனுப்பினதற்கு நன்றி சொல்லவும், ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கவும் இன்று காலை நாங்கள் இங்கு கூடியிருக்கிறோம் என சகோ. பிரன்காம் கூறுகிறார். (**மறுரூபப்படுத்தும் தேவனுடைய வல்லமை**, பத்தி.19, நாள். 11-09-1965) ஆக இந்த கிறிஸ்து பிரன்காம் கூட்டம், சகோ. பிரன்காம் பெயரை/ஊழியத்தை களங்கப்படுத்த எழும்பியுள்ள, தங்கள் துன்மார்க்கமான இச்சைகளின்படி நடக்கிற பரியாசக்காரராயிருக்கிறார்கள். கர்த்தர் அவர்கள் நடுவில் தாறுமாறுகளின் ஆவியை வரப்பண்ணியுள்ளார். ஆதலால் கள்ள வார்த்தைகளை

கர்ப்பந்தரித்து இளம் விசுவாசிகளை வசீகரித்து, வஞ்சித்து, மோசம் போக்குகிறார்கள். அவர் (இயேசு) நம்மை சகல அக்கிரமங்களிலிருந்து மீட்டுக்கொண்டு…. நமக்காக தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார். (தீத்.2:14). அவருடைய (தேவன்) கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய (இயேசு) ரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் (இயேசுவுக்குள்) நமக்கு உண்டாயிருக்கிறது. (எபி.1:7). நம்மை இப்பொழுது இருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி…. நம்முடைய பாவங்களுக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார். (கலா.1:14) ஏதேன் தோட்டத்தில் இழந்ததை மீட்டு அதற்கான கிரையத்தைச் செலுத்தி, நம்மை இரட்சித்தவரும், மீட்டவரும் இயேசு கிறிஸ்துவே. அப்படியானால் இந்த பிரன்காம் கிறிஸ்து யார்? இவர் ஏழாம் சபைக்கால தூதன், ஒரு தீர்க்கதரிசி. அத்துடன் அவர் பங்கு தேவஆவியினால் அனுப்பப்பட்ட வேத வாக்கியங்களில் முடிந்தது. அதற்கு மிஞ்சியது பிசாசு. கிறிஸ்து நமக்காக சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார். (கலா.3:13) தேவன் தம்முடைய சுய இரத்தத்தினால் கிரையம் செலுத்தி நம்மை மீட்டார். (அப்.20:28). இயேசு தம்முடைய சொந்த இரத்தத்தினால் ஒரே தரம் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்து நித்திய மீட்பை நமக்கு உண்டுபண்ணினார். (எபி.9:12) கர்த்தராகிய உன் மீட்பர் சொல்கிறார். (ஏசா.54:8) இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் மீட்பர். (ஏசா.54:5) கர்த்தராகிய நான் உன் இரட்சகரென்றும், யாக்கோபின் வல்லவர், உன் மீட்பரென்றும், அறிந்து கொள்வாய். (ஏசா.60:16) கர்த்தரே இரட்சகர், மீட்பர். (ஏசா.63:1,4,8,9,16). இவ்வாறாக இயேசு கிறிஸ்துவே நமது இரட்சகரும் மீட்பருமாய் இருக்கிறார் என்பதற்கு திரளான சாட்சிகள் வேதவாக்கியங்களில், சகோ.பிரன்காமின் செய்திகளில் இருக்க நம்முடைய மீட்பராக சகோ. பிரன்காமை முன்நிறுத்துவது எதிராளியாகிய பிசாசானவனுடைய வஞ்சக லீலையாகும்.

90. இவர்களுடைய உபதேசம் இப்படியிருக்க, இவர்களின் மெய்த்தேவனும், பிதாவாகிய கிறிஸ்து பிரன்காம் என்று விசுவாசிக்கப்படும் ஏழாம் சபைக்கால தூதன் சகோ. பிரன்காம் 2-10-1960 பிரசங்கிக்கப்பட்ட தனது **இனத்தான் மீட்பர்** என்ற செய்தியில் இதுகுறித்து என்ன விளக்கம் கொடுக்கிறார் என்பதை தியானிப்போம். ஒரு மீட்பர் உங்களை மீட்கும்பொழுது முழுமையாக மீட்கிறார். உங்கள் பாவங்களினின்றும், உங்கள் வியாதிகளினின்றும், கோளாறு அனைத்தினின்றும், அவர் மீட்கிறார். அவர் ஒரு மீட்பர். (பத்தி.23) ஏதாவது ஒன்றை மீட்பதென்றால், அதை மறுபடியும் கொண்டு வருவது என்று அர்த்தம். இழந்துபோன ஒன்றையோ அல்லது அடகு கடையில் அடமானம் வைத்த ஒன்றையோ, நீங்கள் சென்று அதை மீட்கிறீர்கள். அது கிரையம் கொடுத்து மீட்கப்படுகிறது. அதை நீங்கள் மீட்டபிறகு அது உங்களது சொந்த பொருளாகிவிடுகிறது. ஆனால் இஸ்ரவேலில் மீட்பின் சட்டம் – இழந்துபோன ஒன்றை அல்லது ஒரு சொத்தை ஒரு இனத்தான்தான் மீட்க வேண்டும் (பத்தி.34) இழந்து போனவைகளை மீட்பதற்கு தேவனுக்கு இருந்த ஒரே வழி அவர் மனிதனுக்கு இனத்தான் ஆவதன் மூலமே. தேவன் மனிதனுக்கு இனத்தான் ஆவதற்கு ஒரே வழி அவர்களைப் போல ஒருவராக ஆவது மூலமே. (பத்தி.161) தேவன் மனிதனானார். அவர் இனத்தானாக ஆக வேண்டியிருந்தது. அவர் தேவனாய் இருந்து கொண்டு, பாவியாகிய நம்முடன், இனத்தானாக இருக்க முடியாது. எனவே மனிதன் தேவனாக வேண்டுமென்று கருதி, தேவன் மனிதனானார். தேவன் நமது பாவங்களை அவர்மேல் சுமந்துகொண்டு பாவியானார். அவர் பாவமே அறியாதவர். இருப்பினும் நமது பாவங்கள் அவர்மலே சுமத்தப்பட்டதினால், அவர் பாவமானார். நாம்/நான் அவராகும் பொருட்டு, அவர் நானானார். நான் தேவனுடைய குமாரன் ஆகும்பொருட்டு அவர் பாவியானார். வார்த்தை மானிடனாகி, இனத்தான் ஆனது. அவர் மனிதன் ஆனார். (பத்திகள்.163,166) ஆதாமில் விழுந்து போன சந்ததியை மீட்பதற்கென இந்த இனத்தான் மீட்பரின் இரத்தத்தில் மூழ்கப்பட்டுள்ளது. (பத்தி.170) தேவன் நம்முடைய இனத்தான் ஆகி, கீழே இறங்கி வந்து, நம்மைப்போல் ஒருவனாகி, மானிட சரீரம் பூண்டு, பசி தாகமுற்றார். (பத்.186) ஆவியாகிய பரலோகத்தின் தேவன் பூமிக்கு வந்து, மாம்சத்தில் தோன்றி என்னைப் போலவும் உங்களை போலவும் உருவம் கொண்டு பாவம் இல்லாத அவர் பாவம் உள்ள சரீரத்தின் ரூபத்தில் தோன்றி நம்முடைய பாவங்களை அவர்மேல் ஏற்றுக்கொண்டு நமக்கு இனத்தான் ஆகி, தம்முடைய மரணத்தின் மூலம் பகிரங்க அறிக்கை செய்து, முழு கிரையத்தை செலுத்தினது எனக்கு மிக்க மகிழ்ச்சி. (பத்.197) சகோ.பிரன்காமே இயேசுவின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட ஒரு பாவியாக இருக்க, சகோ. பிரன்காம் பிறந்து, மரிப்பதற்கு முன் பாவங்கள் யாருடைய இரத்தத்தினால் மீட்கப்படலாயின? உலகம் அனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசே, நீ தேவனுடைய வித்தை மோசம் போக்க முடியாது. ஏனென்றால் உன் தலை நசுக்கப்பட்டாகிவிட்டது.

91. **இயேசு கிறிஸ்து அல்பா மாத்திரமே, சகோ.பிரன்காம் மற்றும் சகோ.தாமஸ் ஒமேகா என்ற வேறொரு சுவிசேஷம்:** இயேசு கிறிஸ்து – அல்பா : சகோ. பிரன்காம் மற்றும் தாமஸ், ஒமேகா என்றழைக்கப்படும் வேறொரு சுவிசேஷமும் நம் மத்தியில் உண்டு. ஆனால் தேவ ஆவியினால் அருளப்பட்ட வேதவாக்கியங்கள் இது குறித்து என்ன கூறுகிறது? இருக்கிறவரும், இருந்தவரும், வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தர்-நான் அல்பாவும், ஒமேகாவும் : ஆதியும் அந்தமுமாய் இருக்கிறேன் என்கிறார். வெளி. 1:8,11. நான் (இயேசு) அல்பாவும், ஒமேகாவும் ஆதியும் அந்தமுமாய் இருக்கிறேன். தாகமுள்ளவனுக்கு ஜீவதண்ணீரை இலவசமாக கொடுக்கிறேன் என்கிறார். யோ.7:37, 4:14, வெளி.21:6. நான் (இயேசு) அல்பாவும் ஒமேகாவும், ஆதியும் அந்தமும், முந்தினவரும் பிந்தினவருமாய் இருக்கிறேன் என்கிறார். வெளி.22:13. சகோ. பிரன்காம் இது குறித்து என்ன கூறுகிறார்? தண்டு, பட்டு குஞ்சம், உமி இவைகளிலிருந்து உண்மையான ஜீவன் அனைத்தும் இப்பொழுது விதையில் ஒன்று கூடி உயிர்த்தெழுதலுக்கு, அறுவடைக்கு ஆயத்தமாயிருக்கின்றது. அல்பா ஒமேகாவாகி விட்டார். முந்தினவர் பிந்தினவராகிவிட்டார்.

92. அடுத்து ஆட்டுத்தொழுவத்திற்குள் வாசல் வழியில் பிரவேசியாமல் வேறு வழியாய் பிரவேசித்த இந்த கள்ளகபடமுள்ள வேலையாளின் கற்பனைகளை கவனியுங்கள். லூக்.17, மல்கியா 4, எபிரேயர் 13, வெளி.10, சகரியா 14, எசாயா 35, ஓசியா 6, ஆமோஸ் 3, யோவேல் 2, தானி 12, அதிகாரங்களில் உள்ள தீர்க்கதரிசனங்கள் யாவும் சகோ.பிரன்காம் ஊழியத்தில் நிறைவேறிற்று என மொட்டையாக எழுதி, அழிவுக்கு முன்பு தேவன், தாமே மானிட

உருவில் ஆபிரகாமின் சந்ததிக்கு தோன்றினார். இப்பொழுது அது நிறைவேறி விட்டது. சர்வ வல்லமையுள்ள தேவன் மாம்சசரீரத்தில் திரையிடப்பட்டு எளிமையில் காணப்பட்டு மணவாட்டிக்கு தம்மை வெளிப்படுத்தினார். இக்காலத்திற்கென்று வாக்குதத்தம் பண்ணப்பட்டிருந்த வார்த்தை மாம்சமாகி வெளிப்பட்டு பூமியின்மேல் நின்றார் என தம் மனம்போன போக்கில் ஏதேதோ சகோ.பிரன்காமை பற்றி எழுதிகிறான். மேற்கண்ட அதிகாரங்களில் எந்த தீர்க்கதரிசனம் சகோ.பிரன்காம் ஊழியத்தில் நிறைவேறியது என்பது குறித்து ஒன்றுமே எழுதவில்லை. பிரியமானவர்களே நாம் ஆராதிக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இருக்கிறவராக இருக்கிறேன், இருக்கிறேன் என்பவராகும். இவர் இருந்தார் அல்ல, இருக்கிறேன் என்பவர். மேலும் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். இவர் மாறாதவர். ஆதலால் இவன் ஆராதிக்கும் தேவனுக்கும், நாம் ஆராதிக்கும் தேவனுக்கும் வித்தியாசம் உண்டு. நமது தேவன் அநாதி தேவன். அவர் நம்முடைய பாவத்தை சுமர்ந்து தீர்க்க மாம்சத்தில் வெளிப்பட்ட தேவன்.

93. முத்திரைகள் குறித்து இவர் எழுதும் முரண்பாடுகளை கவனியுங்கள். இதோ வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது. அந்த சிங்காசனத்தின்மேல் ஒருவர் வீற்றிருந்தார்.(வெளி.4:1,2) இவரது வலது கரத்தில் உள்ளும் புறமும் எழுதப்பட்டு எழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்ட ஒரு புஸ்தகம் இருந்தது.(வெளி.5:1) கவனியுங்கள் : வானத்திலாவது பூமியிலாவது, பூமியின் கீழாவது ஒருவனும் அந்த புத்தகத்தை திறக்கவும், அதை பார்க்கவும் கூடாதிருந்தது. மேலும் அந்த புத்தகத்தை வாங்கி திறக்கவும் கூடாதிருந்தது. அப்போது அங்கு அடிக்கப்பட்ட ஒரு வண்ணமாயிருந்த ஒரு ஆட்டுக்குட்டி வந்தார். (நமது பஸ்காவாகிய ஆட்டுக்குட்டி – கிறிஸ்து அப்பொழுது அடிக்கப்படவில்லை. ஆதலால் அங்கு அவர் அடிக்கப்பட்ட வண்ணமாயிருந்த ஒரு ஆட்டுக்குட்டி என வர்ணிக்கப்படுகிறார்) சிங்காசனத்தின்மேல் உட்காந்திருந்தவருடைய வலது கரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்கினார். அடுத்து இவர் என்ன செய்கிறார்? அதாவது ஆட்டுக்குட்டியானவர் முத்தரிக்கப்பட்ட புஸ்தகத்தை வாங்கி, அதிலுள்ள முத்திரைகள் ஒன்றை உடைத்தார். இப்பொழுது முத்திரையை உடைத்தவர் யார்? ஆட்டுக்குட்டி. இந்த ஆட்டுக்குட்டியோடு சகோ.பிரன்காமை ஒப்பிடலாமா? இது சகோ.பிரன்காம் ஊழியத்தை களங்கப்படுத்தும் சாத்தானுடைய செயலேயன்றி வேறல்ல. ஆக ஆட்டுகுட்டி முத்திரைகளை ஒவ்வொன்றாக உடைத்தபோது, அந்த முத்திரையின் கீழ் உள்ள காரியங்கள் / ரகசியங்கள் வெளிப்பட்டன. ஆனால் காணப்பட்ட காரியங்கள் யாவும் அடையாள சின்னமாகவே இருந்தது. அந்த அடையாள சின்னங்களுக்கு ஒரு உட்பொருள் இருந்தது. அந்த உட்பொருள் அப்பொழுது வெளிப்படாமல் ரகசியமாக இருந்தது. இந்த ரகசியங்கள் வெளிப்பட வேண்டிய நேரமாக அப்பொழுது இல்லை. ஏனென்றால் இது கடைசி சபைகாலத்தில் வெளிப்பட வேண்டும். அதன்படி ஏழு தேவதூதர்கள் தோன்றி ஏழாம் சபைக்கால தூதனுக்கு இந்த ரகசியத்தை வெளிப்படுத்தினார்கள். இந்த ரகசியத்தை பெற்றுக்கொண்ட சகோ.பிரன்காம் சபைக்கு அறிவித்தார் / பிரசங்கித்தார். ஆக சகோ.பிரன்காம் செய்தியை கொண்டு வந்த ஒரு தூதனன்றி, அந்த செய்திக்குரியவர் அல்ல. காரியங்கள் இப்படியிருக்க சகோ.பிரன்காம் ஏழு முத்திரைகளை உடைத்தார், திறந்தார் என்பதெல்லாம் பிசாசுக்கடுத்த வஞ்சகமாயுள்ளது. பொய்க்கு பிதாவானவனுடைய உபதேசமாயுள்ளது.

94. **28-02-1963 அன்று தோன்றிய மேகவளையம் வெளி.10:1ல் நிறைவேறுதல் ஆகும் என்பது எலியேசரின் கணிப்பு. இந்த கள்ளகபடமுள்ள வேலையாட்களின் அடுத்த வஞ்சக உபதேசம் என்னவென்றால் : சகோ. பிரன்காமின் ஊழியத்தில் 28.02.1963 அன்று வானத்தில் வட்டமிட்டுக்கொண்டிருந்த அந்த கூர்நுனி கோபுர வடிவில் காணப்பட்ட மேகம் வெளி. 10:1 ல் கூறப்பட்டுள்ள பலமுள்ள வேறொரு தூதன் வானத்திலிருந்து இறங்கிய காட்சி என்பதாகும். இந்த உபதேசம் இந்நாட்களில் இக்காலத்திற்குரிய செய்தியிலிருக்கிறோம் என கூறும் மக்களில் பெரும்பாலானோர் மத்தியில் காணப்படுகிறது. ஆனால் இதுவும் பிசாசின் உபதேசமே. பாருங்கள் இது தவறு. இக்காலத்திற்குரிய செய்தியை கொண்டே உங்களுக்கு விளக்கி காண்பிக்கிறேன். நான் அந்த ஏழு தூதர்களை ஒரு கோபுர வடிவில் கண்டேன் (இடைவெளியில் நின்றல், பத்தி.80, நாள்.23.06.1963) அது கூர்நுனி கோபுரத்தைப் போன்று நாளுக்கு நாள் சிறுபான்மையோரை கொண்டதாய் குறுகிக்கொண்டே வருகிறது…. இது ஒரு அடையாளமாக திகழ்கின்றது… கூர்நுனி கோபுரம் ஒரு அடையாளமாக திகழ்கின்றது. (எக்காளப்பண்டிகை, பக்கம் 27 ன் கடைசி பகுதி மற்றும் பக்கம் 28 ன் தொடக்கப்பகுதி. நாள்.19.07.1964) இயற்கைக்கு மேம்பட்ட மேகம் : பிப்ரவரி 28, 1963 அன்று திகைப்பூட்டுகிற ஒரு மேகம் அரிசோனாவிற்கு மேலே ஆகாயத்தில் காட்சி அளித்தது. சகோதரன் பிரன்காம் ஏப்ரல் 18, 1965 அன்று அளித்த இது சூரிய உதயம் என்ற செய்தியில், இந்த மேகம் ஏழு தேவதூதர்கள் அடங்கிய ஒரு கூட்டத்தால் உருவாக்கப்பட்டது என்பதை விளக்குகிறார்.**

95. ஏழு தூதர்கள் வானத்திலிருந்து இறங்கி வந்த சம்பவம் குறித்து சகோ. பிரன்காம் கூறுவதாவது : ஒரு நாள் அதிகாலை, அதாவது சூரியன் உதிக்கும் வேளை காலை 7.00 மணியளவில் வேட்டைக்காக மலைமேல் சகோ. பிரட் சோத்மேன் உடன் சென்றபோது, திடீரென்று ஒரு வெடி சத்தத்தை கேட்டதாகவும், அது தேசம் முழுவதையும் அசைத்தது என்கிறார். அப்பொழுது அவர் முன் ஏழு தூதர்கள் நின்றார்கள். அவர் பூமிக்குமேல் சற்று உயரத்தில் நின்றது போல் கூறுகிறார். மேலும் அபூர்வ மேக வளையம் வானத்தின்மேல் ஒரு அடையாளம் என்றே கூறுகிறார் (There shall be signs in the heaven above) இது குறித்து நீங்கள் Doing God a service without His will என்ற செய்தியில் பத்தி.63 – 83 வரை தியானிக்கலாம். இது. 27-11-1965 அன்று பிரசங்கிக்கப்பட்டது. மேலும் இந்த செய்தி இதுவரை தமிழில் மொழிபெயர்க்கப்படவில்லை என நினைக்கிறேன். மேலும் சத்தியம் ஒன்று வெளிப்படும் போது, அது அடையாளங்களினால் உறுதிப்படுகிறது (**ஏழு முத்திரையில் நான்காம் முத்திரை,** புதிய பதிப்பு, பக்கம் 485, பத்தி 59 நாள் 21-03-1963) அப்பொழுது மனுஷகுமாரனின் அடையாளம் வானத்தில் காணப்படும். மனுஷகுமாரன் வெளிப்படும் நாள். லூக்1 7:30 (**தேவசித்தத்திற்கு புறம்பாக அவருக்கொரு சேவை செய்தல்,** பக்கம் 52, பத்தி.167 நாள் 16-07-1965)

96. இப்பொழுது அந்த மேகத்தில் கிறிஸ்துவின் முகத்தோற்றத்தை கவனியுங்கள். அவருடைய சிரசும் மயிரும் வெண்மையாக வெளி.1:14 க்கு ஏற்ற நியாயாதிபதியின் தோற்றமாக காணப்பட்டது. ஆனால் வெளி.10:1 ன் தோற்றம் அவருடைய சிரசின் மேல் வானவில் கொண்டதாக உள்ளது. இது உடன்படிக்கையின் அடையாளம். அதாவது அவர் உடன்படிக்கையின் தூதனாக காட்சியளிக்கிறார். பலமுள்ள வேறொரு தூதன் என்று கூறப்பட்டிருப்பதால் அவர் ஒரு செய்தியுடைய தூதனாக வருகிறார். யாருக்கு? இஸ்ரவேல் ஜனங்களுக்கு. புறஜாதிக்கு அவர் உடன்படிக்கையின் தூதன் அல்ல. தியானியுங்கள் **ஏழு முத்திரை – ஏழு சபை காலங்களுக்கும் ஏழு முத்திரைகளுக்கும் இடையே உள்ள பிளவு** பக்கம்.120, பத்தி.31, நாள்.17-031963. மேலும் கவனியுங்கள், அன்று காலை எனக்கு முன் அறிவிக்கப்பட்டிருந்த அதே இடத்தில் ஏழு தூதர்கள் பரலோகத்திலிருந்து இறங்கி வந்தனர். அவர்கள் சுழற்காற்றில் மேலே சென்றனர். நாங்கள் கண்கூடாக கண்டோம். விஞ்ஞானம் அதை புகைப்படம் எடுத்தது. (**ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல்,** பத்தி 157, நாள்.04-12-1965) மேலும் கவனியுங்கள் நாம் வெளி.10:1 ல் பலமுள்ள வேறொரு தூதன் இறங்கிவர காண்கிறோம். ஆனால் இங்கு ஏழு தேவதூதர்கள் வானத்திலிருந்து இறங்கி வந்தனர். சகோ. பிரன்காமை சந்தித்தனர். அவர்கள் பணி முடிந்தது. மேலே ஏறி சென்றனர். அப்பொழுதுதான் அந்த மேகவட்டம் ஏற்பட்டது. மாறாக அந்த தூதர்கள் இறங்கி வரும்போது அந்த மேகவளையம் காணப்படவில்லை. அடுத்து இந்த சம்பவம் 28-02-1963 அன்று நடந்தது. ஆனால் தீர்க்கதரிசியும் ஏழாம் சபைக்கால தூதனுமாகிய சகோ.பிரன்காம் : அவர் **10.அதி. இறங்கி வருகிறார். அந்த தூதன் பிரத்தியட்சமாவதற்கு சமயம் வந்துவிட்டது. நாம் மிக அருகாமையில் இருக்கிறோம், நான் கூறுவது சரி என ஏழு சபையின் காலங்களுக்கும் ஏழு முத்திரைகளுக்கும் இடையே உள்ள பிளவு பக்கம் 125 ன் தொடக்கப்பகுதியில் பத்தி.47 ல், 17-03-1963 ல் பிரசங்கிக்கப்பட்ட செய்தியில் கூறுகிறார். இந்த கள்ளகபடமுள்ள வேலையாட்கள் வெளி.10:1 ன் தூதன் 28-02-1963-ல் இறங்கிவிட்டார் என்கிறார்கள். ஆனால் தீர்க்கதரிசியோ 17-03-1963 ல் அவர் பிரத்தியட்சமாகும் சமயம் மிக அருகாமையில் இருக்கிறது என்கிறார். ஆக இந்த முரண்பாடுகள் பிசாசினுடையதே.** ஆதலால் கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமானவர்களே 28-02-1963 ல் தோன்றிய மேகவட்டம் வெளி.10:1 ன் பலமுள்ள வேறொரு தூதனின் தோற்றம் என்ற உபதேசத்தை நம்பி மோசம் போகாதீர்கள். இது ஒரு அடையாளமேயன்றி வேறொன்றும் இல்லை. செய்தியை உறுதிப்படுத்த, வார்த்தையை உறுதிப்படுத்த வானத்தின் கொடுக்கப்பட்ட ஒரு அடையாளம். இப்பொழுது அவர் பூமிக்கு வரமாட்டார். ஆயிரம் வருட அரசாட்சிவரைக்கும் மேசியா பூமிக்கு வரமாட்டார். நாம் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு கர்த்தரை அங்கு சந்திப்போம். அவர் பூமிக்கு வருவதில்லை. அவர் மணவாட்டியை ஆகாயத்தில் இழுத்துக்கொள்கிறார். கே.ப.123, பக்கம்.115, பத்தி.448, நாள்.12-01-1961. பாருங்கள் ஆயிரம் வருட அரசாட்சி வரை கிறிஸ்து பூமிக்கு வருவதில்லை.

97. ஆக சகோ.பிரன்காம் ஒரு மனிதனாக பிறந்தார். கர்த்தர் கொடுத்த ஊழியத்தை நிறைவேற்றினார், மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார். உயிர்தெழுதலில் அவரும் எழுந்திருப்பார். இதற்கு மிஞ்சின உபதேசங்கள் யாவும் பரத்திலிருந்து வராத ஞானம் வஞ்சனையானது. சகோ. பிரன்காம் தன்னுடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் குறித்து கீழ்கண்டவாறு கூறுகிறார்.

(அ) நான் வயது சென்ற மனிதனாக ஆகி கொண்டிருக்கிறேன். என்னுடைய நாட்கள் மங்கிக்கொண்டிருக்கின்றன. என் கண்பார்வையும் மங்கிக்கொண்டிருக்கின்றது. என்னுடைய ஜீவனாகிய அச்சிறுசுடர் மங்கி எரிகிறது. நான் மரண இருளைக் கண்டு அஞ்சவில்லை. நான் அவரையும் அவருடைய உயிர்தெழுதலின் வல்லமையையும் அறிந்துள்ளேன். அவர்கள் என்னை எங்கே அடக்கம் செய்த போதிலும்…… அவர் என் பெயர் சொல்லி அழைப்பார். அப்பொழுது நான் மறு உத்தரவு கொடுப்பேன். (இப்பொல்லாத காலத்தின் தேவன் பத்தி.153)

(ஆ) இந்நாட்களில் ஒன்றில் நீங்கள் என்னை அடக்கம் செய்யக்கூடும். நான் மரித்திருக்க மாட்டேன். அதை உங்களிடம் கூறுகிறேன். நாம் எழுந்திருப்போம். நான் எழுந்திருக்க எந்த ஒன்றுமே தடையாயிருக்க முடியாது. அதற்கு தடையாக பாதாளத்தில் போதிய பிசாசுகள் இல்லை. அதற்கு தடையாயிருக்க எந்த ஒன்றுமே எங்குமே இல்லை. என்னிடம் பரிசுத்த ஆவி உள்ளது. என்னிடம் தேவனுடைய நித்திய ஆவியாகிய ஜோ (Zoe) உள்ளது. (நாம் ஏன் ஒரு ஸ்தாபனம் அல்ல. பத்தி.272, நாள்.27-09-1958)

98. **ஆங்கில மொழியிலிருந்து ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்திகளின் தமிழ் மொழிபெயர்ப்பு :** பொதுவாக ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்திகளை மொழிபெயர்த்து வெளியிடுகிறவர்கள். அவர்களது வெளியீடுகளை எனக்கு அனுப்புவது கிடையாது, ஆனாலும் ஒரிரு சகோதரர்கள் அவர்களது வெளியீடுகளை எனக்கு அனுப்பி வைப்பார்கள். எப்படியோ அவர்களது வெளியீடுகள் எனது கரத்திற்கு வந்து சேர கர்த்தர் வழிகளை திறந்து வைத்துள்ளார். நான் எனது வெளியீடுகளை அவர்களுக்கு அனுப்பி வைக்கும்போது, அவர்கள் அவர்களது வெளியீடுகளை எனக்கு ஏன் அனுப்பி வைப்பதில்லை? அதன் காரணம் அவர்களுக்கே தெரியும். திருச்சி சகோ.லாரன்ஸ், சகோ.ஜெபக்குமாரைக் கொண்டு செய்திகளை மொழிபெயர்த்து வெளியிட்டு வந்தார். நான் இருவருடைய வாழ்க்கையும் சுவிசேஷத்திற்கும் செய்திக்கும் பாத்திரமாக இல்லாததால் இருவரும் இந்த பணியில் ஈடுபடக்கூடாது என எழுதியிருந்தேன். அந்த வார்த்தைகளால் சகோ.லாரன்ஸ் இருதயத்தில் குத்தப்பட்டார். தன் குறைகளை உணர்ந்தார். தன்னை விடுவித்துக் கொண்டார். இதுகுறித்து சமீபத்தில் அவர் என்னோடு தொலைபேசியில் பேசினார். சகோதரர் சத்தியத்திற்கு கீழ்படிய தன்னை ஒப்புக்கொடுத்ததை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். ஆனால் சகோ.ஜெபக்குமார் தன் இருதயத்தை கடினப்படுத்திக்கொண்டார்.

99. சமீப நாட்களில் சகோ.ஜெபக்குமார் மொழிபெயர்த்த இரு புத்தகங்கள் எனது கரத்திற்கு வந்தது. தலைப்பில் உள்ள தவறுகளை கண்ட உடனே மேற்கொண்டு உடன் படிக்க மனமில்லை. பிற்பாடு படித்துக்கொள்ளலாம் என வைத்துவிட்டேன். ஆனாலும் பிற்பாடு அதை படித்தேன். இவருடைய செய்தி ஒன்றின் தலைப்பு ஆங்கிலத்தில் **Speak to this Mountain**, இவர் இதற்கு **இந்த மலையை பார்த்து பேசு** என மொழிபெயர்த்துள்ளார். இவர் உபயோகப்படுத்தியுள்ள **பார்த்து** என்னும் தமிழ் வார்த்தைக்கு ஆங்கில தலைப்பில் இடமில்லை. இதன்

மொழிபெயர்ப்பு **இந்த மலையிடம் பேசு** என்றுதான் இருக்க வேண்டும். அடுத்து இந்த செய்தி ஆங்கிலத்தில் 76 பத்திகளை கொண்டதாக உள்ளது. இவரது மொழிபெயர்ப்பில் 145 பத்திகளை கொண்டதாக இருக்கின்றது. மொழிபெயர்ப்பு என்றால் ஒரிஜினலில் எப்படியிருந்ததோ அப்படிதான் மொழிபெயர்ப்பிலும் இருக்க வேண்டும். அதில் எதுவும் நமது சௌகரியத்திற்காகவோ மற்ற எந்தவொரு காரணத்திற்காகவோ கூட்டலும் குறைத்தலும் இருக்க கூடாது. ஒரிஜினலில் 10 பத்திகள் என்றால் அது மொழிபெயர்ப்பிலும் 10 பத்திகளை கொண்டதாகவே இருக்க வேண்டும். அடுத்து **Mother's Day** என்ற ஆங்கில செய்தியை **தாய்மார்களின் தினம்** என மொழிபெயர்த்துள்ளார். ஆங்கில தலைப்பு ஒருமையிலும் தமிழ் மொழிபெயர்ப்பு பன்மையிலும் உள்ளது. இதன் சரியான மொழிபெயர்ப்பு தாயின் தினம் / தாயினுடைய தினம் என்றுதான் இருக்க வேண்டும். தாய்மார்களின் தினம் என்று குறிப்பிடுவதில் தவறு இல்லை ஆனாலும் செய்தியின் தலைப்பு ஒருமையில் இருப்பதினால் மொழிபெயர்ப்பும் ஒருமையிலே இருக்க வேண்டும் என்பது எனது கருத்து. பொதுவாக ஒவ்வொரு ஆண்டும் மே 13 ஆம் தேதியை அன்னையின் தினமாக அல்லது தாயின் தினமாக கொண்டாடுகிறார்கள். இந்த இரு புத்தகங்களையும் Bride Tabernacle என்ற பெயரில் சகோ.ஜெ.டோமினிக் சேவியர் வெளியிட்டுள்ளார்.

100. தனக்கு ஒரு ஆதாயத்தோடு செய்திக்காக பாடுபடும் சகோ.மோசஸ் தயானந்தம் மீது எனக்கு மதிப்பும், மரியாதையும் உண்டு. இவரும் மொழிபெயர்த்து புத்தகங்களை வெளியிடுகிறார். யார் செய்திகளை மொழிபெயர்க்கிறார் என்பது குறித்து அவர் வெளியிடுவது இல்லை. நான் அறிய அவரும் அவரது மகனும் இணைந்து மொழிபெயர்ப்புகளில் பங்கு கொள்கிறார்கள் என கேள்விபட்டேன். இவரும் ஆங்கில செய்தி **Conformation of the Commission** என்பதற்கு **கட்டளையின் உறுதிப்பாடு** என மொழிபெயர்த்துள்ளார். இது முற்றிலுமாக ஒரு தவறான மொழிபெயர்ப்பு என்பது எனது கருத்து. Commission என்ற வார்த்தைக்கு கட்டளை என்பது சரியான பொருளை தராது. கட்டளை என்றால் Commandments ஆகும். Commission என்றால் செயலுரிமையளிப்பு / பொறுப்பளிப்பு போன்ற வார்த்தையே சரியான அர்த்தத்தை கொடுக்கும். செயலுரிமை உறுதிப்பாடு அல்லது பொறுப்பளிப்பு உறுதிப்பாடு அல்லது பணியானை உறுதிப்பாடு என இருந்தால் நலமாயிருந்திருக்கும். ஊழியம் ஒரு கட்டளை ஆகாது. ஊழியம் என்பது பணியானையாகும். அந்த ஆணையை நிறைவேற்றுவதில் பல கட்டளைகள் இடம்பெறலாம். அடுத்து **What is that in your Hand** என்ற ஆங்கில வார்த்தைக்கு **உன் கையிலிருக்கிறது என்ன?** என்று மொழிபெயர்த்துள்ளார். இங்கு ஆங்கிலத்தில் That என்ற சொல்லுக்கு தமிழ் மொழிபெயர்ப்பில் இடம் இல்லை. இதற்கு சரியான மொழிபெயர்ப்பு **உன் கையில் உள்ள அது என்ன?** என்று இருக்கவேண்டும்.

101. அடுத்த மொழிபெயர்ப்பில் வில்லியம் பிரன்காம் குட் நியூஸ் சொசைட்டியின் பங்கு இவர்களும் யாரைக்கொண்டு செய்தி மொழிபெயர்க்கப்படுகிறது என்ற தகவல் கொடுப்பது இல்லை. **The Reproach for the cause of the Word** என்ற ஆங்கில செய்தியை **வார்த்தையின் நிமித்தமாக வரும் நிந்தை** என மொழிபெயர்த்துள்ளார்கள். **அந்த நிந்தை வார்த்தையின் காரணமாக / நிமித்தமாக** என இருந்தால் அது சரியான மொழிபெயர்ப்பாக இருக்கும் என்பது எனது தாழ்மையான விமர்சனம்.

102. அடுத்து மணவாட்டி ஊழியம் சகோ.ஜீவஜெயம் வெளியீடுகளுக்கு வருவோம். ஆங்கில செய்தியின் பெயர் **The Angel of God** என்பதாகும். இதற்கு **தேவதூதன்** என மொட்டையாக மொழிபெயர்த்துள்ளார்கள். **Angel** என்றால் **தேவதூதன் –** A Devine Messanger என்று பொருள். இங்கு Angel (தேவதூதன்) என்று மட்டும் தலைப்பு கொடுக்காது, **The Angel of God** என தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது **தேவனுடைய தூதனானவர்** என்று தலைப்பு இருக்க வேண்டும். The என்ற சொல் முன் இருப்பதை கவனியுங்கள். அப்படியானால் அது ஒரு தனிப்பட்ட பிரத்தியேகமான நபரைக் குறிக்கிறது. நான் அறிய The Angel of God என்கிற வார்த்தை **The Angel of the LORD** என்ற வார்த்தைக்கு சமமானது. அன்பு சகோதரனே, இது சகோ.பிரன்காம் சுகமளிக்கும் ஒரு கூட்டத்தில் கொடுத்த செய்தியின் தலைப்பு. The Angel of God என்பதை தேவதூதன் என்று மொழிபெயர்த்துள்ளீர்கள். சகோ. பிரன்காம் இந்த செய்தியின் 17 வது பத்தியில் இந்த தூதனுடைய பிரசன்னம் அருகாமையில் வந்ததை உணர்ந்தேன் என்கிறார். மேலும் பத்தி 23-ல் ஒரு செவிடன் கேட்கவில்லை என்றால், ஊமை பேசவில்லை என்றால், குருடன் பார்க்கவில்லை என்றால், நொண்டியானவன் நடக்கவில்லை என்றால், பாவங்களை குறித்து தீர்க்கதரிசனங்கள் ஜனங்களிடம் முன்னே சொல்லப்படாமையாய் இருந்தால், நீங்கள் குழந்தையாய் இருந்த நேரம் முதல் செய்த உங்கள் பாவங்கள் முன் சொல்லப்படாவிட்டால் என்னிடம் வந்துள்ள இதே தூதன் தவறு என்றும், நானும் அதனுடன் தவறாயிருக்கிறேன் என்றும் நம்புங்கள்...... **அவர் ஒருவர்** மாத்திரமே தமது வார்த்தையை உறுதிப்படுத்த இச்செயல்களை செய்கிறார். (பத்தி.25) தேவன் தமது தூதனை மோசேக்கு முன்பாக அனுப்பினார், இங்கே தூதன் இருக்கிறார். இங்கு சகோ.பிரன்காம் ஒரு தேவதூதனை (Angel) குறிப்பிட்டிருக்க முடியாது. அவர் கர்த்தருடைய தூதனானவரை குறிப்பிடுகிறாரேயன்றி மற்றபடி அல்ல. ஆதலால் இதனுடைய தலைப்பு **தேவனுடைய தூதனானவர்** என்று இருக்க வேண்டும். ஆக சகோதரனே நீங்கள் செய்தியின் பொருள் அறியாமல் தேவதூதன் (Angel) என்று மொழிபெயர்த்து விட்டீர்கள். ஊர் ஊராக சென்று கலெக்ஷன் பண்ணி புத்தகங்களை வெளியிட உங்களுக்கு யார் இந்த பணியை கொடுத்தது? நிச்சயமாக என் தேவன் உங்களை அவர் நாமத்தினால் கடைசி கால சபை செய்தியின் பெயரில் பல இடங்களுக்கு சென்று சாதூரியமாக பேசி / யாசித்து / பிச்சை எடுத்து தனது ஊழியத்தை செய்ய அனுமதிக்க மாட்டார். என் தேவன் தம்முடைய பணிக்காக திருஓடு எடுத்து மக்களிடம் யாசிப்பவர் அல்ல. நீங்கள் உங்கள் சுயசித்தத்தின் படியே இந்த பணியை செய்து வருகிறீர்கள். சகோ. பிரன்காம் தனது கூட்டங்களில் காணிக்கைகூட எடுக்க அனுமதிப்பதில்லை. ஒரு விசுவாசி காணிக்கை கொடுக்க வேண்டும். ஆனால் அதை விசுவாசியிடம் ஊழியக்காரன் யாசிக்க கூடாது. யாசிப்பது பிச்சை எடுப்பதற்கு சமானம். இவர்களுக்கு உதவி செய்கிறவர்கள் பொல்லாதவர்களின் கைகளை திடப்படுத்துகிறார்கள்.

103. இன்னும் செய்தியை மொழிபெயர்த்து அதை வெளியிடுபவர்கள் நான் அறிய பலர் இருக்கின்றனர். அதில் ஒன்று சகோ. டேனியல் சம்பத் குமார். இவரும் The Angel of God என்ற தலைப்பில் உள்ள மற்றொரு செய்தியை மொழிபெயர்த்துள்ளார். இவரும் இதற்கு தேவதூதன் என்றே மொழிபெயர்த்துள்ளார். சகோ.டேனியல் சம்பத்குமார் தேவனுடைய தூதனானவர் அற்புதங்களை நடப்பிக்கிறார், கர்த்தருடைய தூதன் இறங்கி வந்தார், கர்த்தருடைய தூதன் அவனுக்கு தோன்றினார், என்னால் எதையுமே செய்ய முடியாது, அந்த தூதனானவர் செய்வது போல நானும் செய்யவேண்டியவனாய் உள்ளேன். இப்பொழுது அது தேவனுடைய தூதனானவர் ஆகும், இன்றிரவு தேவனுடைய தூதனானவர் இங்கே இந்த பிரசங்க மேடையின்மேல் நின்று, கர்த்தருடைய தூதன் என்னிடம் என பல இடங்களில் மொழிபெயர்த்து செய்தியை வெளியிட்டுள்ளார். காரியம் இப்படியிருக்க இங்கு ஒரு தேவதூதனுக்கும், கர்த்தருடைய தூதனானவருக்கும், தேவனுடைய தூதனானவருக்கும் உள்ள வித்தியாசம் இவருக்கு தெரியாதா? இது தெரியாமலா இந்த செய்தியானது மொழிபெயர்க்கப்பட்டுள்ளது? மொழிபெயர்ப்பை ஏனோதானோ என்று இவர்கள் எண்ணிவிட்டார்கள் போல் தோன்றுகிறது. கர்த்தருடைய தூதனானவர், உடன்படிக்கையின் தூதன், தேவனுடைய தூதனானவர், யேகோவாவினுடைய தூதனானவர் யாவும் மற்ற தூதர்களைப்போன்று (Angels) ஒருவர் அல்ல. இவர்கள் தேவனுடைய ஒரு பிரத்தியேகமான காரியத்திற்கு ஒரு பிரத்தியேகமான பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். சாதாரணமாக இவர்கள் மனுஷரூபத்தில் வருவார்கள். சில இடங்களில் இவர்களுக்கும் தேவனுக்கும் வித்தியாசமே கிடையாது. முட்செடியில் மோசேக்குத்தோன்றிய கர்த்தருடைய தூதனானவர் கர்த்தர் என்றும், தேவன் என்றும் அழைக்கப்படுகிறார். (யாத்.3:2-4, ஆதி.48:15,16, நியா.6:11-21. நியா.6:11ல் கர்த்தருடைய தூதனானவர். நியா.6:20ல் தேவனுடைய தூதனானவர். நியா.6:14ல் அவர் கர்த்தர். நியா.6:17ல் அவர் தேவன். ஆனாலும் சில இடங்களில் வித்தியாசம் உண்டு. ஆதி.21:17 ல் 24:2 சகரி.1:12 ஆக சகோ. டேனியல் சம்பத்குமார் அவர்களே நீங்கள் The Angel of God என்பதை தேவனுடைய தூதனானவர் என்று மொழிபெயர்ப்பதே வேதவாக்கிய பூர்வமானது. தேவதூதன் என்பது ஒரு Angel –யை மாத்திரமே குறிக்கும். முடிவாக டேனியல் சம்பத்குமார் ஜீவஜெயத்தை காப்பி அடித்தாரா அல்லது ஜீவஜெயம் சம்பத்குமாரை காப்பி அடித்தாரா, பரீட்சையில் மாணவர்கள்தான் ஒருவருக்கொருவர் காப்பி அடிப்பார்கள். ஆனால் இங்கு இக்காலத்திற்குரிய செய்தியின் மொழிபெயர்ப்பிலும் காப்பி அடித்தலா? நீங்கள் ஒருவரை ஒருவர் காப்பியடித்தாலும், வேதவாக்கியங்களின் அடிப்படையில் தவறு.

104. அடுத்து நாம் சென்னை சபையாரின் **Expectation** என்ற செய்தியின் மொழிபெயர்ப்புக்கு வருவோம். மொழிபெயர்ப்பாளர் இதை **எதிர்பார்ப்புகள்** என மொழிபெயர்த்துள்ளார். செய்தி ஒருமை தலைப்பில் உள்ளது ஆனால் அதன் மொழிபெயர்ப்போ பன்மை தலைப்பில் உள்ளது. இவர்களும் மொழிபெயர்பாளர் யார் என்ற விவரத்தை வெளியிடுவது கிடையாது. ஆக மொழிபெயர்ப்புகள் அனைத்தும் எங்குபார்த்தாலும் ஏனோதானோ என்று உதாசினமாக உள்ளது. கர்த்தருடைய வேலையை அசதியாய் செய்கிறவன் சபிக்கப்பட்டவன். (எரே.48:10)

105. இவ்வாறாக ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்திகளின் மொழிபெயர்ப்பில் சிறிய / பெரிய தவறுகள் நடந்துக்கொண்டுதான் இருக்கின்றன. ஏனென்றால் செய்தி மொழிபெயர்ப்பை யார் தான் செய்ய வேண்டும் என்ற ஒரு நல்ஒழுங்கு வரம்பு முறைமை, கிரமம் இல்லாமல் போய்விட்டது. ஒருவேளை என்னுடைய இந்த கணிப்பு தவறு என்று நீங்கள் நினைத்தால் தயவு செய்து என்னை மன்னிக்கவும். நான் உங்களைவிட ஆங்கில அறிவில் குறைவுள்ளவன், உங்களை போன்று என்னால் ஆங்கிலத்தில் சரளமாக பேச, எழுத முடியாது. ஆனால் என் உள்ளத்தில் எழுந்த தூண்டுதலை எழுதியுள்ளேன். எழுத்து வடிவில் வரும் மொழிபெயர்ப்புக்கும், மேடை பேச்சு மொழிபெயர்ப்புக்கும் வித்தியாசம் உண்டு. எழுத்தில் எப்படி உள்ளதோ அப்படியே அதன் மொழிபெயர்ப்பிலும் இருக்க வேண்டும். முடிவாக ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்தியை இப்பிரபஞ்ச வாழ்க்கையில் சரியில்லாதவர்கள், செய்தியிலும் தேர்ச்சியற்றவர்கள், பரிசுத்த ஆவியை பெறாதவர்கள், ஆனாலும் பெற்றுக்கொண்டதாக தங்களை தேற்றிக் கொள்ளுபவர்கள் மொழிபெயர்த்து வெளியிட்டு வருகிறார்கள். ஆதலால்தான் இத்தனை குழப்பங்கள். எல்லாம் மாயையும் மனதிற்கு சஞ்சலுமாய் இருக்கிறது. ஆனால் இவர்களது மொழிபெயர்ப்புக்கள் தெரிந்துக் கொள்ளபட்டவர்களை வஞ்சிக்க முடியாது என்பதை நான் நன்கு அறிவேன்.

**ஜீன் 2018.**

**கிறிஸ்துவின் அன்பில்**

**சகோ. காலேப் யோசுவா**

**If Undelivered**

**Please Return to:**

**Caleb Joshua**
**32, Jemi Ethiraj Nagar**
**Erayamangalam Road**
**Mappedu, Perambakkam (Via)**
**Thiruvallur District – 631402.**

**PRINTED BOOK**

**Clause No. 128 P.O. GuideRules**
**GRNP/Dlgs/16 dated @ Tambaram the 04.04.2016.**
**Rs. One per every 100 gms**
**To:Dr.Rev,Pr,Bro,Sis.,**

**Mobile No. 9444701953 This Printed Book, Yesuvae Vaarum Owned and Published by Caleb Joshua from his above address and Printed by V.R. Sermakani, Sakthi Process, 2/1F Kummalamman Kovil St, Tondiarpet, Chennai. 600 081.Ph: 044- 25956006. Editor Caleb Joshua**